படைப்பு
ஊற்று-3 | நதி-9 | ஜனவரி-2021 | திங்களிதழ்
ISSN : 2582-4015

தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com

“எந்தவொரு இலக்கியமும் எழுதியவுடன் பெரும் எழுச்சியையும் விழிப்புணர்வையும் உருவாக்கிவிடாது..”

▪ எழுத்தாளர் சோ.தர்மனுடனான நேர்காணல்



• வாசிப்பு 2020

• பச்சையம் என்பது பச்சை ரத்தம்
- பிருந்தா சாரதி

• ஓடிக்கொண்டே தன்னைக் கலைக்கும் நதி
- பா.செல்வகுமார்

படைப்பு

தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-3 | நதி-9 | ஜனவரி 2021

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

ஆசிரியர் :
ஆசியாதாரா

நிர்வாகக் குழு :
சகா(சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
அல்தாஃப் சலீம்

தலைமை நிருபர் :
வலங்கைமான் நூர்தீன்

நிருபர்கள் குழு :
முனைவர் கோ.நித்தியா
க.சோ.திருமாவளவன்
ஸ்டெல்லா தமிழரசி

முதன்மை வடிவமைப்பாளர் :
கமல் காளிதாஸ்

வடிவமைப்பு :
ப.முகம்மது புலவர் மீரான்

ஓவியக் கலைஞர்கள் :
அழ.ரஜினிகாந்தன்
அன்பழகன்

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப வேண்டிய
மின்னஞ்சல் முகவரி :
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்
கடலூர், தமிழ்நாடு - 607002.

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

உள்ளே...

- **தலையங்கம்** -பக். 04
- **“எந்தவொரு இலக்கியமும் எழுதியவுடன் பெரும் எழுச்சியையும் விழிப்புணர்வையும் உருவாக்கிவிடாது..”**
  - எழுத்தாளர் சோ.தர்மனுடனான நேர்காணல் -பக். 05
- **வாசிப்பு 2020** -பக். 13
- **மனநிலைக் குறிப்புகள் 07**
  - ஆதிரன் -பக். 21
- **அன்புள்ள விக்ரமாதித்யனுக்கு..**
  - கவிஞர் விக்ரமாதித்யன் -பக். 26
- **பச்சையம் என்பது பச்சை ரத்தம்**
  - பிருந்தா சாரதி -பக். 34
- **ஓடிக்கொண்டே தன்னைக் கலைக்கும் நதி**
  - பா.செல்வகுமார் -பக். 36
- **தி பைசைக்கிள் தீஃப்**
  - கவிஜி -பக். 44
- **கற்பதுவே.. கேட்பதுவே..!**
  - மௌனன் யாத்ரிகா -பக். 50
- **தேநீர் சாலை**
  - கரிகாலன் -பக். 57

சிறுகதைகள்

- **கோகுல்**
  – நாணற்காடன் -பக். 31
- **ஜோ என்ற நான்**
  – பிரேம பிரபா பிரேம் குமார் -பக். 47
- **இன்னும் பல வெண்ணிலாக்கள்**
  – கு. ஜெயசுதா -பக். 60

கவிதைகள்

- **ராம் வசந்த்** -பக். 20
- **பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள் - 6**
  – ஜின்னா அஸ்மி -பக். 43
- **ஏ.நஸ்புள்ளாஹ்** -பக். 55
- **ஐ.தர்மசிங்** -பக். 55
- **ரத்னா வெங்கட்** -பக். 55
- **ராஜகுமாரன்** -பக். 56
- **தட்சனா மூர்த்தி** -பக். 56
- **எம். எஸ். எம். அன்சார்** -பக். 56
- **ராஜிலா ரிஜ்வான்** -பக். 56
- **ஷர்ஜிலா யாகூப்** -பக். 56
- **பாண்டி ராஜ்** -பக். 56
- **கவி. விஜய்** -பக். 56
- **வெள்ளூர் ராஜா** -பக். 63

தலையங்கம்

வணக்கம்.

படைப்பு 'தகவு' முப்பத்துமூன்றாம் மின்னிதழ் உங்கள் கண்முன் பரந்துவிரிந்திருக்கிறது.

மண்ணின் மணத்தோடு எழுகின்ற படைப்புகள்தான் ஒரு மொழிக்குரிய நிஜமான படைப்புகளாய் நூற்றாண்டுகள் கடந்தும் நிலைத்துநிற்கின்றன. தன் மனிதர்களுக்காக எழுதும் மனிதன் எழுத்தாளன் என்ற நிலையைக் கடந்து அச்சமூகத்திற்கான சேவகனாகிறான். எழுத்தாளர் சோ.தர்மனின் படைப்புகள் அனைத்துமே அவர் நேசிக்கும் மனிதர்களுக்கானவை. சமூகம் சார்ந்து அவர் சொல்ல விரும்பிய கருத்துக்களே படைப்புகளின் கருக்களாகியிருக்கின்றன.

ஒரு அடர்வனம் சோகவனமான ஆழம்மிகு சுற்றுச்சூழல் கதை தமிழில் சோ.தர்மனால் எழுதப்பட்டிருக்கிறது. மனிதனின் அடங்காத ஆக்கிரமிப்பு வெறி இயற்கையின் நியதிக்குள் அமில வீச்சாய் இறங்கியிருப்பதை ஆர்ப்பாட்டமில்லாத எளிய வாழ்வின் வழி அழுத்தமாய்ச் சொல்லியிருக்கிறார். குஞ்சு பொறிக்க பொந்து கிடைக்க வழியில்லாத கிளிகளின் தவிப்பு தொடங்கி வனம் முழுக்க பெருகி நிரம்பும் கொடூர ஒலிகள் வரை அத்தனைச் சிக்கல்களுக்கும் காரணமாய் இருப்பது மானிட இனம். நான் என்ன செய்ய முடியும் என்று கேட்கும் மனிதர்களிடம் நீ என்ன செய்திருக்கிறாய் பார் என்று அறைந்து காண்பித்திருக்கிறார் சோ.தர்மன் 'சோகவனம்' சிறுகதையில்.

பட்டாசுத் தொழிற்சாலை என்பது மிக எளிய மக்களின் இயங்குதளமாக இருக்கிறது. தெரிந்தும் அங்கு அவர்கள் நரகத்தில் சுழல்கிறார்கள். சோ.தர்மனின் 'நசுக்கம்' கதை மிக இயல்பாய் ஒரு இறுக்கத்தை நம்முள் இறக்கிவிட்டுச் செல்கிறது. மிகச் சிறு வயதிலேயே மிகப் பெரும் பொறுப்பேற்கும் சிறுவர்களின் இயக்கம் நம்முள் ஓர் இயக்கமற்ற நிலையை உண்டாக்கிவிடுகிறது. ஆனால் சோ.தர்மன் எந்தவித பரிதாபத்திற்கும் உரிய வார்த்தைகளைக் கோர்க்கவில்லை. அப்படியே காட்சிப்படுத்துகிறார். ஏனென்றால் மூன்றாம் மனிதனாய் அவர் அவர்களைப் பார்க்கவில்லை. அவர்களுள் ஒருவராகப் பார்க்கிறார். அதனால்தான் அவர்களுக்குள் நிகழும் எள்ளல்களெல்லாம் கதைக்குள் இயல்பாய் வந்து விழுகின்றன. விதிகளை மீறும் சமூகம், கேள்வி கேட்க இயலாத தொழிலாளர்கள், எதிர்த்து நின்றால் சுமத்தப்படும் பொய்க் குற்றச்சாட்டுகள், சமூகத்தில் ஒட்ட இயலாது அவமானப்படும் தொழிலாளர்கள் என ஒற்றைக் கதைக்குள் அவர் புதைத்திருக்கும் சமூகம் மிகப் பிரம்மாண்டமானது.. பயங்கொள்ளவைப்பது. அவரது எல்லாப் படைப்புகளுக்கும் பொதுவான அடையாளமாக இதனைக் கொள்ளலாம்.

நீதிபதியின் தீர்ப்புப் பக்கங்களில் ஓர் எழுத்தாளனின் பங்களிப்பு இருப்பதும் முதலமைச்சர் தனது அரசாங்கத்தின் செயல்திட்டங்களை அவரது நாவல்வழி ஒப்புநோக்குவதும் படைப்புச் சமூகத்தில் சாதாரணமானதில்லை. உண்மையான ஒரு படைப்பாளியின் சமூகப் பங்களிப்பிற்கான அரிய விளைவுகள். எழுத்தாளர் சோ.தர்மனின் நேர்காணலைத் தகவு பெருமையுடன் வெளியிடுகிறது.

மேலும் கட்டுரைகள், தொடர்கள், சிறுகதைகள், கவிதைகள் என உள்ள அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

நன்றி.

– ஆசிரியர் ■

● வீரசோழன் க.சோ.திருமாவளவன்



“எந்தவொரு இலக்கியமும் எழுதியவுடன் பெரும் எழுச்சியையும் விழிப்புணர்வையும் உருவாக்கிவிடாது”

– எழுத்தாளர் சோ.தர்மனுடனான நேர்காணல்

கரிசல் மக்களைக் காட்டும் துணிவும் நேர்மையும் மிக்க பரம்பரையின் ஒரு குறியீடு எழுத்தாளர் சோ.தர்மன். கிராமியச் சூழலோடு உருப்பெற்ற கதைகளோடும் பாசாங்கற்ற நேரடி வாழ்வியல் கூறுகளின் பின்னலோடும் கிராமிய வட்டாரங்களைப் பாதிக்கிற உக்கிரமான அல்லது அக்கிரமமான விசயங்களை வரலாறாய்ப் பதிவு செய்பவர். சாகித்ய அகாதமி விருதாளரான அவருடன் தகவு மின்னிதழுக்கான நேர்காணலில்....

நீங்கள் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டவர். எழுத்துத் துறைக்கு எவ்வாறு வந்தீர்கள்?

எங்களுடைய பாட்டன், தாத்தா, அப்பா, நான் என எல்லோருக்குமே ஆதாரமாக இருப்பது விவசாயத் தொழில்தான். எனக்கு பத்து ஏக்கர் கரிசல்காடு உள்ளது. நான் இப்போதும் அடிப்படையில் ஒரு விவசாயிதான். அந்தக் காலத்தில் கிராமங்களில் எந்தவிதப் பொழுதுபோக்கு அம்சங்களும் இருக்காது. அப்போது கூத்துக்கள் மட்டும்தான் இருந்தன. நான்கு அல்லது ஐந்து கிலோ மீட்டர் தள்ளி உள்ள ஊரில் கூத்து நடந்தால், ஊர் ஊராகக் கிளம்பி கூத்து பார்ப்பதற்குப் போய்விடுவார்கள். கூத்து பார்த்துவிட்டு நடுச்சாமத்தில் கிராமத்திற்குத் திரும்புவார்கள்.

சில ஊர்களில் கூத்துக் கலைஞர்கள் அந்தக் கிராமத்திலேயே இருப்பார்கள். குறவன் குறத்தி ஆட்டம், கரகாட்டம் எனப் பலவகை ஆட்டம் இருந்தது. எங்கள் ஊரில் ஒயில் கும்மி என்றொரு ஆட்டம் இருந்தது. அந்த ஒயில் கும்மிக்குப் பெயர் ராமாயணக் கும்மி. ராமாயணக்கதை ஆரம்பத்திலிருந்து முடியற வரைக்கும் நான்கு நாள் விடிய விடிய நடக்கும். அது வேஷம் கட்டி ஆடுவது. எல்லோரும் அந்தந்தப் பாத்திரத்திற்கு ஏற்றவாறு வேடம் போட்டிருப்பார்கள். அதில் எனது தந்தை ராமர் வேடம் போட்டிருப்பார். எங்கள் அப்பாதான் ஹீரோ. எனது சித்தப்பா லட்சுமணனாக வேடம் தரித்து இருப்பார். எனது மாமா ஜனகர் வேடம் போடுவார். எல்லோருமே எங்கள் ஊர்க் கலைஞர்கள்தான். இதில் பெரிய விஷயம் என்னவென்று பார்த்தால் எல்லா ஜாதிக்காரர்களும் அதில் இருந்தார்கள். ஊரில் உள்ள அத்தனை ஜாதிக்காரர்களும் வேடம் போட்டு நடிப்பார்கள். இவையெல்லாமே 60, 70 வருடத்திற்கு முந்தைய நிகழ்வு.

கூத்துக்கலையைப் பார்க்க எனது 13 வயது வரை வாய்ப்பு கிடைத்துக்கொண்டே இருந்தது. எனது தந்தை என்னைச் சிறு வயதிலேயே கூத்து நடக்கும் இடத்திற்கெல்லாம் அழைத்துக்கொண்டு போய் நடிப்பார். எல்லா ஊர்களுக்கும் போவார்கள்.

அவர்கள் ஆடும் ஆட்டம், காட்சி, பாடல்கள் எல்லாமே சேர்ந்துதான் எனக்குள் வாசிப்பிற்கு உண்டான விதை விழுந்திருக்குமென்று நினைக்கிறேன். அவர்களின் கூத்துக்கலையை எனது பதிமூணாவது வயதிற்குப் பின் நிறுத்திவிட்டார்கள். அப்போது என் மனதிற்குள் ஒரு வெற்றிடம் ஏற்படுகிறது. அந்த வெற்றிடம்தான் என்னை வாசிப்பிற்குள் நுழைத்திருக்குமென்று நினைக்கிறேன். எட்டாவது, ஒன்பதாவது படித்துக்கொண்டிருக்கையில் வகுப்பைக் கட் அடித்துவிட்டு நூலகத்திற்கு வாசிக்கப் போய்விடுவேன். அப்போதே, நான் ஒரு தீவிரமான வாசிப்பாளனாக, வாசகனாக மாறிவிட்டேன். பின் வாசிப்பிற்கு அடுத்த கட்டம் நம்மளும் எழுதலாமே என்று தோன்றியது.

எழுதுவதற்கான உத்வேகமாக எழுத்தாளர்கள் கி.ரா., பூமணி மற்றும் கு.அழகிரிசாமி போன்றோர் இருந்தார்கள். அவர்கள் கதையைப் படிக்கும்போது இது போன்று நாமும் எழுதலாமே என்று தோன்றியது. அன்றாடம் நாம் பார்க்கக்கூடிய மனிதர்கள், நாம் பார்க்கக்கூடிய விசயங்கள் மற்றும் நம் கரிசல் மண்ணின் எல்லா விவரமும் அதில் எழுதி உள்ளார்களே.. ஏன் இது போன்று நாமும் எழுதக்கூடாது என்ற நம்பிக்கை பிறந்தது. அந்த நம்பிக்கைதான் எழுதிப் பார்க்கலாமே என்ற உத்வேகத்தைத் தந்தது.

வருடா வருடம் பாரதி விழாவிற்குச் செல்வது வழக்கம். அங்கு பேராசிரியர் தி.சு. நடராஜன் அவர்கள் வந்திருந்தார்கள். இருவரும் சந்தித்தபோது, 'கவிதை எழுத நிறைய ஆட்கள் இருக்கிறார்கள். நீங்கள் ஏன் சிறுகதை எழுதக்கூடாது?' என்று என்னிடம் கேட்டார். அதன் பின்தான் சிறுகதை எழுத வேண்டும் என்ற ஆசையே துளிர்த்தது.

அதற்கு முன் நான் கவிஞனாக இருந்தவன். கணையாழி, தீபம் போன்ற இதழ்களில் எனது கவிதைகள் வந்துள்ளன.

மதுரையிலிருந்து வெளியான "மகாநதி" எனும் பத்திரிக்கையைக் கவிஞர் பரிணாமன் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை பேராசிரியராக இருந்த தி.சு. நடராஜன் இருவரும் நடத்தினார்கள். பத்திரிக்கையின் ஆசிரியராகக் கவிஞர் பரிணாமன் இருந்தார்.

என் முதல் சிறுகதை "விறுவு" 1980ஆம் ஆண்டில் "மகாநதி"யில் வெளியானது. அதன் பின் நான் கவிதை எழுத விரும்பவில்லை. அதன் பின் சிறுகதைகள் எழுத ஆரம்பித்துவிட்டேன். இந்தக் காலத்தில்தான் சங்க இலக்கியங்களைப் படிக்க ஆரம்பித்தேன்.

உரைநடைக்குள் போனால் நமக்கு விசாலமான இடம் கிடைக்கிறது. கவிதையில் சொல்வதைவிட சிறுகதையில் நாம் நிறையச் சொல்லலாம்.

உங்கள் பதிமூணாவது மையவாடி நாவல் தொடர்ச்சியாக விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டதற்கு என்ன காரணமென்று நினைக்கிறீர்கள்?

ஊடகங்களில் இன்று பேசுபொருளாக இருப்பது மதம். கேரளாவில் 15 வருடம் கன்னியாஸ்திரியாக இருந்து, பின் அதிலிருந்து வெளிவந்த ஒருவரால், கர்த்தரின் நாமத்தினிலே, ஆமென் எனும் நாவல் எழுதப்பட்டு இருக்கிறது. எழுத்தாளர் பாமா என்பவர் கன்னியாஸ்திரியாக இருந்து எழுத்தாளராக மாறியவர். ஆனால் அதைப் பற்றி ஒரு கதை கூட எழுதவில்லை. எல்லோரும் மிகவும் பாதுகாப்பாக



வாழ்கிறார்கள். ஆனால் அவர்களின் பேச்சு எல்லாமே மதம், மதவாதம் என்று இருக்கும்.

மதவாதம் என்றால் என்ன என்பது பற்றி யாரும் பேசுவதோ, எழுதுவதோ கிடையாது. நான் ஒரு மடத்தில் 15 வருடங்கள் இருந்தேன். அது பாதுகாக்கப்பட்ட பகுதி. அதைப் பற்றி யார் எழுத முடியும்? நான் அங்கு இருந்ததால் அது பற்றி என்னால் எழுத முடிந்தது.

பதிமூணாவது மையவாடி நாவலில் கருத்தமுத்து என்ற கதாபாத்திரம் தவிர்த்து மற்ற எல்லாக் கதாபாத்திரங்களுமே உண்மையான பெயர்களையே பதிவு செய்திருக்கிறேன். அதில் வரும் கருத்தமுத்து கதாபாத்திரம் நான்தான். இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கிற பாதிரியார்கள், கன்னியாஸ்திரிகள் பெயர்களைப் பதிவு செய்திருக்கிறேன். அது அத்துணையும் உண்மை. 99 சதவீதம் அந்த நாவலில் கற்பனைக்கு இடமே இல்லை. எதையும் எதிர்கொள்ளத் தயாராக உள்ளேன். ஒரு மதத்தை எழுதும்போது விமர்சனங்கள் வரத்தான் செய்யும். சாதியையும், மதத்தையும் அரசியலுக்காக சம்பாத்யம் செய்வதற்காகப் பயன்படுத்துகிறார்கள். யாராலும் சாதியையும், மதத்தையும் ஒழிக்க முடியாது.

விமர்சனத்திற்குப் பதில் சொல்ல வேண்டும். விமர்சனம் செய்தால் கட்சி முத்திரை குத்திவிடுகிறார்கள். இடதுசாரி இயக்கத்தோடு இணைந்து போராட்டம் செய்து 14 முறை சிறைக்குச் சென்றவன் நான். அதிகபட்சமாக 44 நாட்கள் பாளையங்கோட்டை மத்திய சிறையில் இருந்திருக்கிறேன்.

சூல் நாவல் எழுத வேண்டுமெனத் தொடங்கிய தொடக்கப் புள்ளி பற்றிச் சொல்லுங்கள்?

ரஷ்யாவில் புரட்சி ஆரம்பமாகி, கூட்டுப்பண்ணை உருவாகிய சமயத்தில் ஒரு சம்பவம் நிகழ்கிறது. கூட்டுப்பண்ணைக்கு விதைகள் அனுப்பப்பட்டன. மேலிருந்து கூட்டுப்பண்ணைக்கு ஒரு உத்தரவு வருகிறது. எல்லா வேலைகளையும் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டும். இங்கு விவசாயம் பார்க்கிறவர்களை சம்சாரி என்று அழைக்கிறோம். சோவியத்தில் "மொழிக்" என்று பெயர். மழை இந்த நாளில் ஆரம்பிக்குமென்று விஞ்ஞானிகள் கணித்துக் கொடுத்திருக்கிறார்கள். விதையை நான்கு அங்குலத்துக்கு ஊன்ற வேண்டும். இதை மீறுபவர்கள் சோவியத் யூனியன் சட்டப்படி தண்டனைக்கு உள்ளாக்கப்படுவீர்கள் என்று கூட்டுப் பண்ணை விவசாயிகளுக்காக மேலிருந்து ஆணையொன்று வருகிறது. சோவியத் உத்தரவின்படி எல்லா வேலையும் முடிகிறது.

கிளாடர் விமானத்தில் கூட்டுப்பண்ணையைச் சுற்றிப் பார்க்கும்போது, ஒரு பயிர் கூட முளைக்கவில்லை. அந்த நிலம் முழுவதும் வெட்ட வெளியாகக் கிடக்கிறது.

ஆனால் ஒரு விவசாயிக்கு ஒதுக்கப்பட்ட நிலம் மட்டும் பச்சைப் பசேலென வளர்ந்திருக்கிறது. மேலிருந்து கிளாடர் விமானம் நேராக அந்த விவசாயி நிலத்தை நோக்கி இறங்குகிறது. அங்கு இறங்கியதும் "மொழிக்"கைக் கூட்டி வர ஆணை பிறப்பிக்கிறார். மொழிக் வந்து நிற்கிறார். 'உங்களது நிலத்தில் ஊன்றப்பட்டது மட்டும் வளர்ந்திருக்குதே.. எப்படி?' எனக் கேட்கிறார். 'ஐயா தாங்கள் கொடுத்த அறிவிப்பு எனக்கும் வந்தது. எல்லாம் சரிதான் ஐயா. மழை அறிவிப்பு கொடுத்து இருந்தீர்களே அதில் மட்டும் எனக்குச் சிறிது சந்தேகம் இருந்தது. நான் பரம்பரை விவசாயி. எங்கள் பாட்டன் காலத்திலிருந்து நாங்கள் சம்சாரி வேலை பார்ப்பவர்கள். இயற்கையின் அறிகுறிகள் வைத்து மழை தொடங்குவதைக் கணிப்போம். உங்கள் அறிவிப்பின்படி, அந்த நாளில் மழை தொடங்குவதற்கான வாய்ப்பேயில்லை. ஒரு

பத்து நாள் தாமதமாகவே மழை பெய்யும் என்பதை முன்கூட்டியே கணித்திருந்தேன். அந்த நம்பிக்கையில், விதை போட நான் ஏழு அங்குலம் ஆழம் வைத்தேன். காரணம் அதில் ஈரப்பதம் வேண்டும், மேலும் ஈரப்பதம் இருந்தால் வளர்வதற்குச் சரியாக இருக்கும் என மூன்று அங்குலம் கூடுதலாக வைத்தேன். என்னுடைய கணிப்புப்படி மழை பத்து நாட்கள் பிந்தியது. அதனால் எனது நிலத்தில் முளைத்தது. மற்றவர்கள் நிலத்தில் முளைக்கவில்லை.'

இது சோவியத் யூனியன் விவசாயிகளுக்கு மட்டும் கிடையாது. இது போன்று வாழ்வின் அனுபவங்கள், விவசாய நுணுக்கங்கள் கொண்டவர்களை அரசாங்கம் பயன்படுத்தியதே கிடையாது.

இந்த நுண்ணறிவை விவசாயிகளுக்குக் காட்ட வேண்டும் என்பதற்காகவே சூல் நாவல் எழுத ஆரம்பித்தேன். விவசாய நிலம் தரிசு நிலமாகக் காரணம், நகரக் குடியேற்றம் நிகழக் காரணம், கண்மாயில் நீர் நிலைகள் அழிந்து போகக் காரணம், பிரிட்டிஷ் காலத்தில் விவசாயம் எப்படி இருந்தது, ஜமீன்தார்கள் காலத்தில் எவ்வாறு இருந்தது, ராஜாக்கள் காலத்தில் எப்படி இருந்தது, இப்போது நீர்நிலைகள் அழிந்து வரக் காரணம் என்ன? இப்படி விவசாயம் சம்பந்தமான எல்லாவற்றையும் பேசும்படியாகத்தான் சூல் நாவலை எழுதினேன்.

சூல் நாவலை எழுதுவதற்குப் பத்து ஆண்டுகள் எடுத்துள்ளேன். 2005லிருந்து 2015வரையிலான எனது ஆய்வுகள்தான் இந்த நூல். இதற்காக பல்வேறு ஊர்கள், பல்வேறு அரண்மனைகள், ஜமீன் இடங்கள் என எல்லா இடங்களுக்கும் சென்று 90 வயது பாட்டிமார்களிடம் கேட்டு, அதன் மூலமாய் இந்த நாவலை எழுதினேன்.

கூகை நாவலைத் தலித் மக்களின் சமூக வரலாற்றினைத் தெளிவாகக் கூறும் ஆவணமாக உருவாக்கி இருக்கிறீர்கள். இதன் சமூகப் பயன்பாடு என்னவாக இருந்திருக்கிறது?

எந்தவொரு இலக்கியமும் சமூகப் பயன்பாடு என்று பார்த்தோமேயானால் பூஜ்யமாகத்தான் இருக்கும். எந்தவொரு இலக்கியமும் எழுதியவுடன் பெரும் எழுச்சியையும் விழிப்புணர்வையும் உருவாக்கிவிடாது. இலக்கியத்தின் வேலை அகம் சம்மந்தப்பட்டது.

14 வயது வரை காந்தி, காந்தியாகவில்லை. அவர் மோகன் தாஸ் கரம்சந்த் மட்டும்தான். தனது 14 வயதில் "அரிச்சந்திரன்" நாடகம் பார்க்கச் செல்கிறார். அந்த நாடகத்தில் அரிச்சந்திரன் கதாபாத்திரம் அப்படியே அவர் மனதில் பதிந்துவிடுகிறது. அன்றே ஒரு சபதம் எடுக்கிறார். எனது பேச்சுக்கும் வாழ்விற்கும் இம்மியளவு கூட வித்தியாசம் இல்லாமல் வாழ்ந்து மடிவேன், எந்தச் சமயத்திலும் உண்மைக்குப் புறம்பாகப் பேச மாட்டேன் என்றே சபதமெடுத்து வாழ்வை ஆரம்பிக்கிறார். அதன் பிறகே இந்தியாவிற்குத் தேசப்பிதா மற்றும் ஒரு காந்தி கிடைக்கிறார்.

காந்தி பார்த்த நாடகத்தை உருவாக்கியது யார்? என்னைப் போன்ற ஒரு எழுத்தாளன்தானே, நாடக ஆசிரியன்தானே உருவாக்கினார். மகாத்மா காந்தியை உருவாக்கியது யார்? ஒரு எழுத்தாளன்தானே உருவாக்கினான். இதுதான் இலக்கியத்தில் நிகழும். அதன் பின்தான் காந்தியின் சமூகப் பயன்பாடு தெரியும். பிரிட்டிஷ்காரனை வெளியேற்றியதில், சுதந்திரத்திற்காகப் போராடியதில் எனப் பெரும்பங்காற்றியவர் அவர். இது மாதிரியான சமூகப் பயன்பாடுகள் நிகழும்.

எவ்வாறு நிகழுமென்றால்.. நான் காலையில் 6 மணிக்கு எழுத ஆரம்பித்தால், 2 மணி வரை அலுவலக வேலை போன்று செய்பவன். மதியம் 3 மணிக்கு மேல் தூண்டில் போடச் சென்றுவிடுவேன். ஏழு மணி வரை குளத்தங்கரையிலே இருப்பேன். 6

குளங்கள் உள்ளன. அந்த ஆறு குளங்களுக்கும் தூண்டில் போடச் சென்றுவிடுவேன். எல்லாக் குளங்களிலும் மீன் பிடிக்க எனக்கு அனுமதி உண்டு. குத்தகைக்கே எடுத்திருந்தாலும் எனக்கு மட்டும் எப்போதும் அனுமதி உண்டு.

அப்படி ஒருநாள் தூண்டில் போட்டுக் கொண்டிருக்கையில், ஒரு ஆள் என்னிடம் வந்து பவ்வியமாகக் கும்பிட்டார். பின் 'நாங்கள் கிடை மாடுகள் மேயக்கக்கூடிய ஆட்கள். கமுதியிலிருந்து வருகிறோம். மேற்குத் தொடர்ச்சிமலை வரை சென்று பின் திரும்பி வர மூன்று மாதங்கள் ஆகும். ஐயா மாட்டைத் தண்ணீர் குடிக்க விடலாமா?' என்று கேட்டார். 'தாராளமாக விடுங்கள்' என்றேன். 'இல்லை ஐயா.. நிறைய கண்மாய்களை அரசு குத்தகைக்கு விட்டுவிட்டார்கள். மாடு கண்மாயில் தண்ணீர் குடிப்பதற்கு அனுமதி மறுக்கிறார்கள்' என்றார்.

'நாய்களை வைத்து மாடுகளை விரட்டுகிறார்கள். பறவைகள் மீன் சாப்பிடுகிறது எனக் கருதி வெடி வைத்து பறவையை விரட்டுகிறார்கள். மீனுக்கு இரை என்கிற பெயரில் ஏராளமான கழிவுகளைக் கொட்டுகிறார்கள். மீன் பிடிப்பதற்கு வசதியாக அவர்கள் விருப்பப்படி தண்ணீரை வெளியேற்றுகிறார்கள். விவசாயிகள் போய்க் கேட்டால், நான் குத்தகைக்கு எடுத்திருக்கிறேன். தண்ணீரை எங்கள் இஷ்டப்படி வெளியேற்றுவோம் என்கிறார்கள். விவசாயி தண்ணீர் இல்லாமல் விவசாயம் எப்படிப் பார்ப்பான்.' இவ்வளவு பிரச்சினையை அவர்கள் சொன்னதும் நான் திடுக்கிட்டுப் போனேன்.

அந்தக் கண்மாயை யாருக்காக உருவாக்கினார்கள்? ஒரு தனி நபருக்கு விடுவதற்கா? என எனது முகநூலில் பதிவு போட்டேன். இது எந்த வகையில் நியாயம்? என உருக்கமான செய்தியைப் பதிவு செய்தேன். 'சைபீரியாவில் இருந்து ஒரு பறவை தமிழகத்திற்குக் குளிர்காலத்தைக் கழித்துவிட்டுச் செல்வதற்காக வருகிறது. நம்மைப் பற்றி அந்தப் பறவை என்ன நினைக்கும்? காக்கை குருவி எங்கள் ஜாதி என்று பாடிய பாரதி வாழ்ந்த மண்ணா இது? வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்று சொன்ன வள்ளலார் வாழ்ந்த மண்ணா இது? யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று பாடிய கணியன் பூங்குன்றனார் நாடா இது? என்று அந்தப் பறவை நினைக்காதா?' என உருக்கமாய் முகநூலில் பதிவு செய்திருந்தேன்.

இது மதுரை உயர்நீதிமன்றக்கிளை மாண்புமிகு நீதியரசர் ஜி.ஆர்.சுவாமிநாதன் அவர்கள் பார்வையில் பட்டுள்ளது. அதே வேளையில் தேனி கண்மாய் சம்மந்தமாக வழக்கு நீதியரசர் முன் வந்துள்ளது. அந்த வழக்கிற்குத் தீர்ப்பு எழுதுகையில் முகநூலில் நான் எழுதிய பதிவையிட்டுத் தீர்ப்பு வழங்கி உள்ளார்கள். மொத்தம் 11 பக்கங்களைக் கொண்ட தீர்ப்பில் 9 பக்கம் ஆங்கிலம், 2 பக்கம் தமிழ்.

இனிமேல் குத்தகைக்கு வரும் நடைமுறைகள் மாற்ற தீர்ப்பு எழுதியிருந்தார்கள். பொதுமக்களுக்கான நுகர்வோர் உரிமையை உத்தரவாதம் செய்த பின்னரே கண்மாய் ஏலம் விடப்பட வேண்டும். ஆடு, மாடுகளைத் தடுக்கக்கூடாது, பறவைகளை விரட்டக்கூடாது, கழிவுகளைக் கொட்டக்கூடாது என்றும், மீறி நடந்தால் உங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனத் திருத்தங்கள் கொடுத்துத் தீர்ப்பு எழுதினார்கள். அதில் எனக்கு மிகப்பெரிய பாராட்டு கிடைத்தது. அந்தத் தீர்ப்பு நகல் எனக்கும் அனுப்பி வைத்திருந்தார்கள். தீர்ப்பிலே நான் முகநூலில் எழுதிய கருத்தைப் பின்பற்ற வேண்டும் என்று நீதியரசர் குறிப்பிட்டுள்ளார்கள். அது ஆவணமாக மாறிவிட்டதென வழக்கறிஞர்கள் என்னிடம் பேசினார்கள்.

ஆகவே, இந்தச் சமூகப் பயன்பாடு என்பது எதையும் எதிர்பார்த்துச் செய்வதில்லை. நியாயமான, மக்களுக்குத் தேவையான, உண்மையான கருத்துக்களைத் தனது படைப்புகளில் கொண்டு வரும்போது, அது இப்படி யாருடைய பார்வையிலாவது படும்போது, அது சமூகத்தின் மாற்றத்திற்கும், சமூகப் பயன்பாட்டிற்கும் மாறிக்கொள்ளும்.

அதுபோன்றே கூகை நாவலும் மிகப்பெரிய அதிர்வுகளை உருவாக்கியுள்ளது. ஆக்ஸ்போர்டு நிறுவனம் மலையாளத்திலும் மொழிபெயர்ப்பு செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு நீதியரசர் ஜி.ஆர்.சுவாமிநாதன் அவர்களின் தீர்ப்பைக் கேட்டதும் உங்கள் மனம் எத்தகைய நிலைக்குச் சென்றது?

தீர்ப்பு வந்த அன்று காலையிலே வழக்கத்திற்கு மாறாக மதுரையிலிருந்து இரண்டு வழக்கறிஞர்கள் பேசினார்கள். பின் கோவில்பட்டியிலிருந்து மதிப்பிற்குரிய வ.உ.சிதம்பரம்பிள்ளை அவர்களின் பேத்தியைத் திருமணம் செய்த திரு.முருகானந்தம் அவர்கள் எனக்கு இந்தச் செய்தியைக் கூறி வாழ்த்து தெரிவித்தார். மிகவும் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. மற்றவர்களுக்குப் பயனுள்ளவராக இருக்கிறோம் என்பதில் கூடுதல் சந்தோசம்தான்.

உங்களது ஊரில் பிரபல எழுத்தாளர் நாவலாசிரியர் பா.செயப்பிரகாசம் அவர்களின் பெயரில் வழங்கப்பட்ட கரிசல் இலக்கிய விருது - 2020 பெற்றுள்ளீர்கள். அந்தத் தருணம் எப்படி இருந்தது?

விளாத்திகுளம் முன்னாள் எம்எல்ஏ திரு. மார்க்கண்டேயன் அவர்கள் 'புதியதாக விருது ஒன்று உருவாக்கி உள்ளேன். இந்த வருடம் உங்களுக்கு வழங்கவிருக்கிறோம்' என்று அழைத்தார். நானும் சென்றேன். அவர் மிகச்சிறந்த வாசிப்பாளராக இருக்கிறார். நிறைய புத்தகங்கள் படிக்கிறார். இயற்கை சம்மந்தமாகவும், விவசாயம் சம்மந்தமாகவும் நிறைய பேசினார்.

அந்த நாளில் நடந்த சிறப்பம்சம் என்னவென்றால், சுற்றியுள்ள முக்கியமான விவசாயிகளை அழைத்து, என்னோடு ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்றிற்கும் ஏற்பாடு செய்தார். அது ஒரு அற்புதமான நிகழ்வாக அமைந்தது.

சூல் நாவலுக்கு சாகித்ய அகாதமி விருது அறிவிக்கப்பட்டதும், தமிழக முதல்வர் என்னிடம் வாழ்த்து தெரிவித்துப் பேசினார்கள். அப்போது 'சூல் நாவலில் குடிமராமத்து பற்றி எழுதியிருப்பதாகச் சொன்னார்கள். எங்களால் முடிந்தளவு குடிமராமத்துப் பணிகளைச் செவ்வனே செய்கிறோம். எங்களை நீங்கள் பாராட்ட வேண்டும்' என்று கேட்டார். 'ஏழு வருடம் கழித்து எங்கள் ஊர் கண்மாய் குடிமராமத்துப் பணியால் நிறைந்திருக்கு' என்று கூறினேன்.

குடிமராமத்துப் பணியால், நகர குடியேற்றங்களைக் குறைத்தும் சீர்செய்தும் விடலாம். கிராமத்தை விட்டுப் போக வேண்டிய அவசியமே இல்லை.

2016ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் சிறந்த நாவலாக சூல் தேர்வு செய்யப்பட்டு கடந்த வருடம் விழா நடத்தினார்கள்.

சாகித்ய அகாதமி விருது பற்றி...?

சாகித்ய அகாதமி விருதுத் தேர்வில் 23 பேர் கலந்துகொள்கிறார்கள். முதலில் Ground list என்று ஒன்றைத் தயார் செய்து எந்தப் புத்தகத்தையெல்லாம் சேர்க்கலாமெனப் பத்து பேர் கொண்ட குழுவை அமைக்கிறார்கள். அந்தப் பத்து பேர் சேர்ந்து புத்தகங்களைத் தேர்வு செய்து இவற்றை விருதுக்கு எடுத்துக்கொள்ளலாம் எனப் பரிந்துரை செய்கிறார்கள். அந்தப் பத்து பேர் யாரென்று யாருக்குமே தெரியாது. அவர்கள் மூலமாய்ப் பத்து புத்தகங்கள் தேர்வு செய்யப்படுகின்றன. அந்தப் பத்து புத்தகங்கள் பத்து பேருக்கு அனுப்பப்படுகின்றன. அந்தப் பத்து புத்தகங்களில் மூன்று புத்தகங்கள் தேர்வு செய்து கொடுக்க வேண்டும். தேர்வு செய்வதற்கு உண்டான பணத்தொகை அளிக்கப்படும்.

இந்தப் பத்து நூல்களில் மூன்று நூல்கள் தேர்வு செய்து, அவற்றை வரிசைப்படுத்தித் தர வேண்டும். அந்த மூன்று நூல்கள் பற்றிக் கட்டுரை ஒன்று எழுத வேண்டும். அதில் யார் புத்தகம் முதல் இடத்தைப் பெற்றுள்ளதோ, அடுத்ததாக யார் புத்தகம் இரண்டாம் இடத்தை அதிகம் பெற்றுள்ளதோ, மூன்றாம் இடத்தை எந்தப் புத்தகம் அதிகமாகப் பெற்றுள்ளதோ, அந்த மூன்று புத்தகங்களைத் தேர்வு செய்து, deciding authority என மூன்று பேரைத் தேர்வு செய்கிறார்கள். அவர்களிடம் இந்த மூன்று புத்தகங்கள் செல்லும். இதில் யாருடைய புத்தகம் அதிகமான நபரால் தேர்வு செய்யப்படுகிறதோ, அவருக்கே சாகித்ய அகாதமி விருதை அறிவிக்கிறார்கள்.

எனது நூலைத் தேர்வு செய்தவர்கள் 1. சிவசங்கரி 2. புவியரசு 3. ஆங்கிலத்துறைப் பேராசிரியர் பாலமுருகன். இவர்கள்தான் என் நூலைத் தேர்வு செய்தார்கள். எனக்கு இவர்களுடன் கடிதத் தொடர்போ, தொலைதொடர்போ எதுவும் இருந்தது இல்லை. ஆனால் அவர்கள் மூன்று பேருமே என்னைத்தான் தேர்வு செய்திருக்கிறார்கள் என்ற செய்தி கேட்டதும் பெரும் மகிழ்ச்சியடைந்தேன்.

கிராமத்துச் சொலவடைகள் உங்கள் படைப்புகளில் முக்கியமான அங்கம் வகிக்கின்றன. ஆனால் இன்று கிராமத்துச் சொலவடைகள் வாழ்விலிருந்து அகன்றுவிட்டன. இதை எத்தகைய இழப்பாக கருதுகிறீர்கள்?

இப்போது எல்லோருடைய வாழ்வையும் ஊடகங்கள் கையில் எடுத்துக்கொண்டு விட்டன. இப்போது கிராமத்துச் சொலவடைகள் மறைந்து செந்தில், கவுண்டமணி, வடிவேல் சொல்வது மாதிரி ஆகிவிட்டது.

கிராமத்துச் சொலவடைகள் வாழ்வியல் மாற்றங்கள் ஏற்படும்போது மாறத்தான் செய்யும். அதன் மூலம் விவசாயம் சம்மந்தப்பட்ட அத்தனை பழமொழியும் அழிந்துபோய்விடும்.

இப்போதுள்ள தலைமுறைக்குப் பழமொழி என்றால் என்னவென்றே தெரியாது. அது மிகப்பெரும் இழப்பு. நம்முடைய மூதாதையர்கள் அவ்வளவு நுணுக்கமாகப் பழமொழியைக் கட்டமைத்து இருக்கிறார்கள். இனிமேல் அதை மீட்டெடுப்பது பெரும் சிரமம். சூல் நாவலைப் பார்த்து பழமொழி இருக்கிறது என்று தெரிந்துகொள்ள வேண்டியதுதான்.

நவதானியங்கள் என்னவென்றே இப்போதுள்ள தலைமுறைக்குத் தெரியவில்லை.

கரிசல் இலக்கியம், தலித் இலக்கியம் என இருபதாண்டுக்கு முன் இருந்ததைப் போல், இந்தத் தலைமுறையில் படைப்புகள் வெளிப்படுவது இல்லை. இதன் பின்னணியில் சமகால இலக்கியப் போக்கை எப்படிப் பார்க்கிறீர்கள்?

கரிசல் இலக்கியம், தலித் இலக்கியம் இரண்டுமே தனித்தனி பண்பாட்டுப் பொருள்கள் உள்ள ஒரு விசயம். தலித் இலக்கியம் என்பதில் நான் முரண்படுகிறேன். தலித் இலக்கியம் என்ற ஒன்றே இல்லை. தலித் இலக்கியம் என்று சொல்லாமல், பொதுவாக இலக்கியம் என்றே கூற வேண்டுமென வலியுறுத்தியிருக்கிறேன்.

தலித் இலக்கியம் என்று சொல்லிவிட்டால், தலித் மட்டும்தான் படிப்பார்கள். வேறு யாரும் படிக்க மாட்டார்கள். நான் ஒரு படைப்பாளி, எழுத்தாளன். எதை வேண்டுமானாலும் எழுதுவேன். ஆகாயம், பூமி, பஞ்சபூதங்கள் என எல்லாவற்றைப் பற்றியும் படைப்பு செய்வேன்.

சூல் நாவலைப் படித்தீர்களேயானால் அதில் எல்லாவிதமான ஜாதிக்காரர்களும் வருவார்கள். ஆதலால் அதைத் தலித் எழுத்து என்று எப்படிக்

கூற முடியும். பரந்த வெளியில் பயணம் செய்ய வேண்டும். குறுகிய வழியில் போனால் ஒன்றுமே பண்ண முடியாது. என்னுடைய எழுத்தில் உலகளாவிய விசயங்கள் எல்லாமும் இருக்கும். வண்ணங்கள் பற்றி, சுற்றுச்சூழல் பற்றி, நீர்நிலை பற்றி, தண்ணீர் பிரச்சினை பற்றி இப்படி எல்லாவற்றையும் பற்றி எழுதி உள்ளேன்.

கரிசல் இலக்கியத்திற்கென்று வாழ்வியல் ஆதாரங்கள் இருக்கின்றன. மழையை மட்டுமே நம்பி வாழ்கின்ற மானாவாரி விவசாயிகள்தான் கரிசல் மண்ணில் இருக்கிறார்கள். மழை பெய்தால்தான் எங்களுக்கு வாழ்வு. மற்றவர்களிடமிருந்து நாங்கள் முழுக்க வேறுபட்டவர்கள். எங்களுக்கு நதியென்று எதுவும் கிடையாது. ஊருணியும், கண்மாய்களும் மட்டும்தான். அதை நம்பியே வாழும் ஜீவன்கள் நாங்கள். இந்த மண்ணில் விளையும் விளைபொருட்கள் என்பது நவதானியங்களே. கரிசல் வாழ்க்கை முறையில் எல்லாமே வேறுபடும். சூல் நாவலில், ஒவ்வொரு வருடமும் அந்தந்த ஊர்க் கண்மாய்கள் வெளக்கி வைத்த வெண்கலக் கும்பா போல இருக்க வேண்டும், இல்லையென்றால் அந்த ஊர் உருப்படாது என்று எழுதியிருப்பேன். இன்னொரு இடத்தில் வானம் மழைத்துளியைப் பொழிகையில் கும்பிட்டுக் கையேந்தி வாங்க வேண்டுமென்று எழுதி இருப்பேன்.

ஆதலால் இரண்டிற்குமிடையில் கலாச்சாரம் மற்றும் பண்பாடு வேறு வேறாகவே உள்ளது.

தற்போதைய கிராமிய மாற்றங்கள் படைப்புகளில் பிரதிபலித்துக்கொண்டிருக்கின்றன என நினைக்கிறீர்களா?

பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் அவை கலையாக இல்லாமல் பிரச்சாரமாகப் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அதைக் கலாப்பூர்வமாகச் சொல்ல வேண்டும்.

இப்போதுள்ள கிராமங்கள் என்பவை கிராமங்களாக இல்லை. அவை முதியோர் இல்லமாக மாறிவிட்டன. எந்தவொரு இளைஞர்களும் இல்லை. எல்லோரும் வெளிநாடுகள், வெளி மாநிலங்கள், மாநகரங்களுக்குப் போய்க் குடிபுகுந்துவிட்டார்கள். வாழ்வாதாரம் இங்கு கிடையாது. வெளிநாடுகளில் இருந்து பிள்ளைகள் அனுப்பும் பணத்தைக் கொண்டு கிராமத்தில் முதியோர்கள் வாழ்கிறார்கள்.

ஒரு பெரியவர் என்னிடம் சாவுக்குப் பயப்பட மாட்டேன், ஆனால் தனிமைக்குப் பயப்படுகிறேன் என்று கூறினார். பணம் வருகிறது, ஆனால் செல்போனில் நாலு வார்த்தை பேச மாட்டார்கள். அந்த ஒரு வார்த்தை வாழ்க்கையை எப்படியோ மாற்றிப் போடுகிறது.

கிராமத்தில் ஒரு இறப்பு நேர்ந்தால் மறுநாளைக்கே எல்லாவற்றையும் முடித்துவிட்டுக் கிளம்பிவிடுகிறார்கள். விசேஷம் என்று ஒன்று வைப்பார்கள். அந்த நாள் வரை பொறுத்திராமல் சீக்கிரமாகவே வைத்துவிட்டுக் கிளம்பிவிடுகிறார்கள்.

கிராமம் கிராமமாக இல்லை. கிராமத்து வாழ்க்கை முறை என்ற ஒன்று இன்று இல்லை. இன்று எல்லாமே சம்பிரதாயமாக மாற்றப்பட்டுவிட்டது. நானே கிராமத்தைவிட்டு அந்நியப்பட்டுப் போய்விட்டேன்.

உங்களை ஆக்கிரமித்த அல்லது தொந்தரவு செய்த சில புத்தகங்களை எங்களுக்கு அறிமுகப்படுத்துங்கள்.

1. பாண்டிச்சி - நாவல் - அல்லி பாத்திமா

பழங்குடியின வாழ்வைக் கலாப்பூர்வமாகச் சொல்லி இருப்பார்.

2. காளி - சிறுகதைத்தொகுப்பு - ச.விசயலட்சுமி

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் பொறுப்பில் இருந்தவர். ஆசிரியராகப் பணியாற்றுகிறார். கவிஞராக நல்ல பரிச்சயமானவர். மொத்தம் 12 கதைகள் உள்ளன. அவை கூவத்துவாழ் மக்களைப் பேசுகின்றன. இது ஒரு நல்ல முயற்சி.

பெண்கள் இப்படியான பார்வையில் எழுதுவது அபூர்வம். இந்த இரண்டு தொகுப்புகளும் சமீபத்தில் என் மனதை ஆழமாய் ஊடுருவிப் பாதிப்பை ஏற்படுத்தியவை.



மஹாதேவதாஸ்தாயி, இது போன்று பழங்குடியின மக்கள் பற்றி எழுதியவர்கள். அதே போல் தமிழகத்தில் ஒருவர் இருந்தார், அவர் ராஜம் கிருஷ்ணன். அந்தந்த ஊருக்குச் சென்று மக்கள் வாழ்வியலை எழுதியவர். கூட்டுக் குஞ்சுகள் நாவல் எழுத சிவகாசியில் தங்கி இருந்தார்கள். உப்பளத் தொழிலாளர்கள் பற்றிய கரிப்பு மணிகள் எழுத தூத்துக்குடியில் தங்கியிருந்தார்கள். அவர்களும் சாகித்ய அகாதமி விருது பெற்றவர். இப்படியான பெண்மணிகளை வரவேற்க வேண்டும்.

பிராகிருத மொழியிலிருந்து கவிதைகளை சுந்தர் காளி பரிமளம் சுந்தர் மொழிபெயர்த்திருக்கிறார். கவிதைகள் முழுவதும் காமம் சார்ந்தவை. வள்ளுவன் எழுதிய காமத்துப்பாலைப் போன்று அற்புதமாக எழுதி இருக்கிறார். படிக்க படிக்கப் பிரமிப்பாக இருக்கிறது.

இதே போன்று லண்டாய் எனும் நூலை ச.விசயலட்சுமி மொழிபெயர்த்திருக்கிறார். ஆப்கானிஸ்தான் நாட்டிலுள்ள பெண்களின் வாய்மொழிப் பாடலை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்குக் கொண்டுவந்திருக்கிறார்.

இப்போதைய இளைஞர்கள் ஆர்வமாய் எழுதுகிறார்கள். அவர்களை நாம் வரவேற்க வேண்டும். நான் வரவேற்கிறேன்.

சமகாலத்தில் சூழலியல் எழுத்து குறித்த உங்களுடைய பார்வை என்ன?

சூழலியல் எழுத்து மிகவும் குறைந்துவிட்டது. எழுத்தாளர் நக்கீரன் அதைச் செவ்வனே செய்கிறார். எழுத்தாளர் தியோடர் பாஸ்கரன் அற்புதமாக எழுதிவருகிறார். ஒரு அற்புதமான படைப்பாளி அவர். சூழலியல் எழுத்திற்கான முக்கியமான ஆளுமை அவர். என்னுடைய எழுத்துமே சூழலியல் சார்ந்ததுதான்.

மூன்று மாதத்திற்கு முன் ஐ.நா. தண்ணீருக்காக 18% மக்கள் இடம் பெயர்வார்கள் என ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளது. ஆப்பிரிக்காவில் ஒரு நகரம் வாழத் தகுதியற்றதாக அறிவிக்கப்பட்டுவிட்டது. அண்டார்டிகா போன்ற பனிப்பிரதேசங்களில் நீர்நிலை உயர்ந்து அழிவுக்குள்ளாகும் பகுதிகளில் சென்னையும் இடம்பெறுகிறது. இது போன்ற விழிப்புணர்வு மக்களிடம் இல்லை.

கூகை நாவலின் மொழிபெயர்ப்புக்கு வரவேற்பு எவ்வாறு உள்ளது?

கூகை நாவலை ஆக்ஸ்போர்டு நிறுவனம் மொழிபெயர்த்தது. நிறைய பேரிடம் கொண்டு சேர்த்துள்ளது. வேறு மொழியிலிருந்து நூல்கள் தமிழுக்கு இறக்குமதி ஆவது போல், தமிழிலிருந்து வேறு மொழிக்கு நூல்கள் ஏற்றுமதி ஆவதில்லை. காரணம் தமிழிலிருந்து

ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்க சரியான ஆட்கள் இல்லை. இரண்டு மொழி கலாச்சாரங்கள் தெரிந்திருந்தால் மட்டுமே மொழிபெயர்ப்பு நூல் சரியான திசையில் செல்லும். *Translation* பண்ணக்கூடாது *TransCreation* பண்ண வேண்டும். அதைச் செய்வதற்கு இங்கு ஆட்கள் இல்லை. கேரளாவில் நிறைய மொழிபெயர்ப்பு நூல்கள் செல்வதற்குக் காரணம் அங்கு இரு மொழிக் கலாச்சாரம் தெரிந்த மொழிபெயர்ப்பாளர்கள் இருக்கிறார்கள். ஆதலால் மலையாள நூல்கள் நிறையவே மற்ற மொழிகளுக்கு மற்றும் மற்ற நாடுகளுக்குச் சென்று சேர்கின்றன.

கி.ரா பற்றிச் சொல்லுங்கள்....

என் தேடலுக்கான விதை விழுந்தபோது அதற்கான தாங்கும் சக்தியாக இருந்தது அவர்தான். அன்றைய காலகட்டத்தில் வேலை எதுவும் கிடையாது. 1972 - 76 காலகட்டங்களில் பெரும்பட்டாளமே உருவாகிவிட்டது. எங்களுக்குப் புத்தகம் வாங்குவதற்குக்கூட காசு கிடையாது. கி.ரா இடைச் செவலில் இருந்தார். எங்களுக்குப் புத்தகம் கொடுத்து ஆதரித்தது கி.ராவும் அவரது மனைவி கணபதி அம்மாவும்தான்.

தென்மாவட்டங்களில் எழுத்தாளர்களை மூன்று பேர் உருவாக்கினார்கள். சுந்தர ராமசாமி, தி.க.சி, கி.ரா.. இவர்கள்தான் படைப்பாளர்களை உருவாக்கினார்கள். இந்த மூவர் வீட்டிற்கும் எப்போதும் போகலாம். என் படைப்பு அல்லது கதை பற்றிப் படித்து கி.ரா எனக்குக் கடிதம் எழுதுவார். ‘கதை அற்புதமா இருந்தது. கடைசியாக முடிக்கையில் இப்படி எழுதலாமே.. கொஞ்சம் யோசித்துப் பாருங்கோ’ என்று தனது அபிப்பிராயத்தையும் சொல்லி நம் எழுத்தை மெருகேற்றுவார்.

கி.ரா போன்று தட்டிக்கொடுத்து இளம் எழுத்தாளர்களை உருவாக்கும் அற்புதமான ஆளுமைகள் இன்று இல்லை.

உங்களுக்கும் எழுத்தாளர் பூமணிக்கும் இடையேயான இலக்கியம் சார்ந்த உறவுநிலை எவ்வாறு இருக்கிறது?

எழுத்தாளர் பூமணி எனது அம்மாவோடு பிறந்தவர். எனது தாய்மாமா அவர். எனது எழுத்து பற்றி அவரும், அவர் எழுத்து பற்றி நானும் ஒருபோதும் பேசியது இல்லை. அவருக்கு 16 பேர் மருமக்கள் உள்ளோம். அவர் முன் நின்று பேசுவதற்கே எல்லோருக்கும் பயம். நான் மட்டுமே அவரிடம் நெருங்கிப் பேசுவேன். இலக்கியம் பற்றி நானும் அவரும் ஒரு வார்த்தை பேசியதில்லை. அவர் புத்தகம் போட்டால் எனக்குக் கொடுத்துவிடுவார். நான் புத்தகம் போட்டால் நேரில் கொண்டுபோய்க் கொடுத்து வருவேன். நிறைய இடங்களில் நன்றாக எழுதுகிறான் என்று என்னைப் பற்றிக் கூறியிருக்கிறார்.

•

வாசிப்பு 2020

நல்ல எழுத்துக்களைத் தேடிப் பிடித்துத் தமக்குள் கரைத்துக்கொள்ளும் வாசகர்களின் இயக்கம் இலக்கிய உலகம் பெற்ற வரம். 2020ஆம் ஆண்டில் வெளிவந்த சில நூல்களுக்குள் தம்மை இழந்த நல்ல வாசகர்கள் நம்மையும் கைப்பிடித்து வாசிப்பனுபவத்துள் இழுத்துச் செல்கிறார்கள்..

பெண்ணின் ஆழ்மன வெப்பம்

- சொ. விஜயராணி மீனாட்சி

நூல் : தவ்வை (அகிலா)

ஆதிகாலம் தொட்டு பெண்ணினுள் பெருங்கதையோ சிறுகதையோ உறைந்துதான் கிடக்கிறது. பெண்கள்தான் எத்தனை எத்தனை விதமாய் எத்தனை எத்தனை ஆயிரம் ரகசியங்களோடு. ஊர், நாடு, இனம், மொழி, மதம், சாதி என எல்லாமே மாறியிருந்தாலும் பெண்கள் ஒன்றுதான்.

ஆணாதிக்கச் சமூகம் தீர்மானித்து வைத்திருக்கும் குடும்ப உறவும் அதன் தீர்மானங்களும் பெண்ணுக்குப் பலவித பிரச்சனைகளை வாரிவழங்குகிறது. இங்கே பெண்ணுணர்வுகளுக்கு இடமேயில்லை. சாதி மதம் ஏழை பணக்கார வர்க்கப்பாகுபாடு இப்படி எதை நோக்கினும் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுவேறானவை. அதிலும் இதில் குழந்தைப்பேறென்பது மிகமுக்கிய சூழல். அந்தவகையில் "தவ்வை" எனும் இந்த நாவலைத் தோழர் "அகிலா" அவர்கள் பதினான்கு அத்தியாயங்களாகப் பிரித்து முன்னொரு காலம் பின்னொருகாலமாய்ச் சொல்லிச் செல்கிறார். கதையாடலின் தலைப்புச் சொற்களைப் பொருத்தமாகக் கையாண்டிருக்கிறார்.

எண்பத்தைந்து வயதைத் தொட்ட தவ்வையின் வாழ்க்கை... ரகசியங்களால் நிறைந்தது. பாலியல் குறைபாடுள்ள ஆண்மையற்ற கணவன் ராமநாதனின் வன்மத்தாக்குதலையும் நெருக்கடியையும் சந்தித்து, உளச்சிக்கலின் பொருட்டு மனப்பேதலிப்புக்கு ஆளாகி அந்தப் பெரிய வீட்டை விட்டு விலகி ஓட்டுவீட்டில் வாழும் வைராக்கியம் பெற்ற பெரும்பாடு.

ஒற்றைச் சொல்லுக்குத் தலையசைத்துச் சம்மதிக்கவைக்கும் வித்தை தெரிந்த பேரன் மனைவி வைசாலி (பெண்மனம் பெண்ணுக்குத்தானே தெரியும்) ரகசியச்சாவி கண்டுணர்பவர். அதேநேரம்... குடும்பக்கட்டமைப்பைச் சீர்குலைக்காத, பெண்ணின் ஆளுமையைச் சிதைத்துவிடாத அற்புத உளவியல் நிபுணர்.

பெரும்பாலான பெண்களுடைய தெய்வ வழிபாட்டின் தீவிர ஈடுபாடு கூட தனக்குள்ளான ரகசியங்களை மன அழுத்தங்களை வெளியேற்றும் வடிகால் போன்ற மடைமாற்று வித்தைதான். இங்கே தவ்வை யாரிடமும் பகிர்ந்துகொள்ளமுடியாத மனஅழுத்தத்தைச் செல்லியம்மனிடம் கொட்டித்தீர்க்கிறாள்.

ராமநாதனோடு கழியும் ஒவ்வொரு இரவும் தவ்வைக்கு நரகத்தைக் காட்டியது. பிள்ளைப்பேறு பற்றி தோண்டித்துருவிக் கேள்வி கேட்கும் பொன்னாத்தாளிடம் பம்மிக்கொண்டு பழியெல்லாம் தவ்வைமீது போடும் அதே ராமநாதன் கண்ணுசாமியிடம் தனது இயலாமையைச் சொல்லித் தீர்வு கேட்கிறான்.

ஜென்மத்திலும் அந்தப் பாக்கியம் இல்லை என நாடி பார்த்து ஜாதகம் பார்த்து சொன்னபின் அதற்கான தீர்வாய் மனைவியை வேறொருவனோடு கூடி பிள்ளை பெற்றுத் தரச் சொல்கிறான். குடும்ப கௌரவம் கருதியும், தனக்கு வாரிசு வேண்டியும் அந்த ஒருவனை அவனே தீர்மானிக்கிறான். அவன் தான் ரங்கன். அதைக் கேட்ட மாத்திரத்தில் ராமநாதனை எரித்துவிடுபவளாய்க் கோபம் கொள்கிறாள். கணவன் காலில் விழுந்து காரியம் சாதிக்க நினைக்கிறபோது தொடங்குகிறது அவளது மனச்சிக்கல். இதெல்லாம் நினைத்தும்

பார்க்கவியலாத தவ்வை அம்மா வீட்டுக்கே கிளம்ப.. தடுத்து நிறுத்தப்பட்டவளாய்த் தாயாரால் புத்திமதி சொல்லப்படுகிறாள் (அதாவது காலங்காலமாகப் பாத்துப் பொழச்சுக்கோ, மாப்பிள்ள பேச்ச மீறி நடக்காத.. இப்படியான புத்திமதிகள்).

அதன்பிறகான வருடக்கட்டுக்கான திருவிழா நாளொன்றில் அவளுள் ஜனிப்பு உண்டானதை எத்தனை நாசூக்காகச் சொல்லாண்டிருக்கிறார் கதாசிரியர். பிழையற்ற இந்த இருவரையும் மீண்டும் சந்தேகிக்கிறான் ராமநாதன். தவிப்பும் பைத்தியமுமான மனநிலையில் ஊசலாடுகிறது அவனின் மனநிலையும்.

ரங்கன் பாவம் அவனென்ன செய்வான்? அந்த வீட்டுக்காக இரவு பகல் பாராது உழைப்பு ஒன்றையே தருபவனாகவும் சங்கரலிங்கத்தை உயிராய் மதிப்பவனாயும் கிடந்தவன் தவ்வையின் தூய அன்பில் மூழ்குகிறான். அவனது அர்த்தமற்ற வாழ்க்கைக்குப் பொருள் கிடைத்தாற்போல உணர்கிறான். காலம் கடந்தும் பெண்ணின் ஆழ்மனம் வைத்திருக்கும் வெப்பம் குறித்த உணர்வை நம்முள் நிகழ்த்தி பல விசாரங்களை எழுப்பிச் செல்லும் பிரதி...தவ்வை.

• •

பட்டுப்பூச்சியாக ஒரு நூல்

- ஜோதி சரண்

நூல் : மகரந்தம் தூவும் மலர்கள்

இந்த வருடத்தின் முதல் வாசிப்பான இந்த நூல் 26 பெண் கவிஞர்கள் எழுதிய தன்முனைக் கவிதைகளின் தொகுப்பு.

தமிழுக்கு ஏற்ப எளிய விதிமுறை மாற்றங்களோடு 2017 நவம்பர் மாதம் அறிமுகமான தெலுங்கு நானிலு வடிவமைப்பே தன்முனைக் கவிதைகள் ஆகும். 4 வரிகள்.. வரிக்கு இரண்டு அல்லது மூன்று சொற்கள் கொண்டு வருவது. இலக்கண வரையறை இல்லை. முதல் இரண்டு வரிகள் ஒரு செய்தியின் குறியீடாகவும் அடுத்த இரண்டு வரிகள் அதைச் சார்ந்தோ முரணாகவோ வரும்படியும் அமைவது.

26 மலர்களிடம் மகரந்தங்களைச் சேகரித்த பட்டுப்பூச்சியாக இந்த நூல் நமக்குள் 390 க'விதைகளைத் தூவிச் செல்கிறது.

• •

விடிய விடிய விழிக்க வைத்திருக்கும் சந்தனத்தம்மை

- செல்வக்குமார், இராஜபாளையம்

நூல் : சந்தனத்தம்மை (எம்.எம்.தீன்)

'நாச்சியாள் விரதத்தின் பொலிவோடு பெருந்தேவியாக வெளியே வருகிறாள் சந்தன மணத்தை அகிலம் முழுதும் பரப்பியவண்ணம்' என்ற காட்சியினைக் கண்முன் கொண்டு வந்தபோது... முன்னுரை எழுதிய வண்ணதாசன் 'சந்தன மணத்தை நுகர்ந்தவுடன் நறுமணம் பரப்பும் தன்னலக்காரன்' என்று நாவலாசிரியர் எம்.எம்.தீன் அவர்களைப் பாராட்டும்போது.. எலுமிச்சம்பழமாகத் திகழும் நாச்சியாளை மனதளவில் நான் ரசித்துக்கொண்டிருக்கும் வேளையில் ஒண்ணுக்கு(ஒன்றுக்கு) இருப்பவனைப்போல பாவனை செய்து இரும்புப் பட்டையினால் நடுத்தலையில் நங்கென்று நாச்சியாள் தலையில் அடி கொடுத்தவுடன் நான் சுதாரித்துக்கொண்டேன். நாச்சியாளுக்கே இந்த அடின்னா மனசுள நினைச்ச எனக்கு எந்த அடி விழும் என்பதை உணர்ந்தவனாய் ஓரத்தில் ஒளிந்து நின்று மேஸ்திரியையும் அவளுடைய மனைவி நாச்சியாளையும் பார்க்கும்போது அன்றைய பொழுது சாயங்காலம் 06-00மணி இருக்கும். மறுநாள் காலை 09-00 மணிவரைக்கும் சுமார் 15 மணிநேரம் இரவு முழுதும் விழித்திருந்து பார்த்ததை என் நடையில் உங்களிடம் விமர்சிக்கப்போகிறேன்.

நாவல் முழுவதும் ஒருநாள் சாமத்தின் பொழுதினைத் தெரியாதவர்கள் தெரிந்துகொள்ளும்விதமாக விடிய விடிய விழிக்க வைத்திருக்கும் ஓட்டம் வெகு சிறப்பு. மாலை 06-00மணிக்கு மேல் ஒவ்வொரு பொழுதிலும் நமைக் கடத்தியிருப்பார். மூஞ்சி கருக்கல், கருக்கல், முன்னிரவு, இரவொடுங்கும் நேரம், முதல் ஜாமம், பேயாடும் நேரம், அர்த்த ராத்திரி, இரண்டாம் ஜாமம், புல் தூங்கும் நேரம், கல் தூங்கும் நேரம், கள்ளச்சாமம், மூன்றாம் ஜாமம், பின்னிரவு, பிரம்ம முகூர்த்தம், நூல் பிரியும் நேரம்,

வைகறை, புலர் காலை, மம்மல், சூர்யோதயம், இளங்காலை என நாம் கடந்துசெல்லும்போது இளவெயிற்பொழுதில் மேஸ்திரி காயாம்பாறை மேட்டிலேறி நடந்தவற்றைக் கூறும்போது நாமே நாவலின் முடிவினை நிரப்பும்பொருட்டு நாவலை இட்டுச்சென்றுள்ளார்.

வேலைக்குப் போகும் பெண்ணைத் தன் இயலாமையினால் மட்டம் தட்டும்விதமா மற்றவனோடு இணைத்துப் பேசும் சமூகத்தை நம்பும் ஆம்பளை.. சாப்பாட்டில் விசம் வைத்தாலும் பொண்டாட்டி மேலுள்ள நம்பிக்கையில் சாப்பிடும் அந்த மனசு.. ஏன், ஊர்ப்பேச்சைக் கேட்டு நம்பிக்கையற்றவனாக மாறி கொலைசெய்யத் துணிந்துவிடுகிறது.. அவளின் அன்பினை யோசிக்காமல் அவசரப்பட்டுவிட்டோமேயெனத் துடித்து நடுங்கும் மனதினை அக்கணம் நிதானமாகக் கொண்டு சென்றிருப்பின் இதைப்போல் தொடரும் சந்தேகக் கொலைகள் தவிர்க்கப்படலாம்.

• •

மார்லியின் அடையாளங்கள்

- அமாசே

நூல் : மார்லிக்கு ஒரு கஞ்சா பொட்டலம் (ஜேக் மல்லிகா டேனிஸ்)

"பாப் மார்லி" இவரை எத்தனை நபர்கள் எப்படி அறிந்து வைத்திருப்பார்கள் என்று தெரியாது. நான் அறிந்த நட்பு வளையத்தில்

அவர் குறிப்பிட்ட வஸ்துக்கு மட்டுமே சொந்தம் என்பது போல் தவறான பிம்பத்தில் கட்டமைக்கப்பட்ட இசை ஆளுமை.

பல இசை ஆளுமைகளுக்கும் சில கவி ஆளுமைகளுக்கும் ஏதோ ஒரு புறத் தூண்டுதல் ஏதோ ஒரு வகையில் அமைந்திருப்பது வரலாறு. இருப்பினும் இங்கே மார்லியைப் பற்றிய பார்வையை இந்தக் கவிதைகள் புல்லின் நுனி அளவிலாவது அசைத்திருக்கின்றன. சக்கரம், பொதுவுடைமை, சனநாயகம், சாதியம், நிறம், ஏகாதிபத்தியம், அறிவியல், அதைத் தின்ற மதம்.. இப்படி பெரு உலகின் முகப்பு அடையாளங்களை அறிமுகம் செய்தது சிறப்பு.

இந்தக் கவிதைகள் எழுத்திற்குப் பதிலாக இசை வடிவில் வந்திருந்தால் கவிதையின் வடிவம் அதன் நோக்கம் இன்னும் வேகமாய் கேட்பவரையும் வாசிப்பவரையும் சென்றடையும் என்பது எந்தன் விருப்பம். விருப்பமானதென எந்தவொரு குறிப்பிட்ட வரியையும் சொல்வதென்பது மாற்றந்தாய் மனப்பான்மை என்பது என் புரிதல். வாசியுங்கள் நட்புகளே..

• •

பொதி மூட்டைகளில் கனக்கும் வாழ்வு

- நந்தன் கனகராஜ்

நூல் : கழுதைப் பாதை (எஸ்.செந்தில்குமார்)

மலைகளுக்கு ஆயிரம் கதைகளிருக்கிறது. மலைகளிடமும் ஆயிரம் கதைகளிருக்கிறது. பரந்த வாசிப்பு, கள அனுபவம் மற்றும் தன் வாழ்விட அனுபவச் சூழலின் வழியாக மலையையும், அதைச் சார்ந்த மனிதர்களையும் கழுதைப் பாதை என்னும் நாவலின் மூலமாக நம்மிடம் அறிமுகப்படுத்தி வைத்துள்ளார் எழுத்தாளர் எஸ்.செந்தில்குமார்.

முதுகில் அமுக்கித் திணிக்கப்பட்ட கழுதைகளின் சுமைப் பொதிகளையும், கழுதையோட்டிகளின் அன்றாட வாழ்வியல் பாடுகளையும் இந்நாவல் எடுத்துப் பேசுகிறது. மூவண்ணா, சுப்பண்ணா என்ற இரு சகோதரர்கள், கழுதைகளை வைத்துக்கொண்டு, மலைத் தோட்டங்களுக்கு ஏறு சுமை, இறங்கு சுமைக்குப் போகும் வாழ்வியல், இதன் தொடர்ச்சியாகக் கழுதைகளின் குண இயல்புகள், தோட்ட முதலாளிகளின் ஆதிக்க குணம் ஆகியவற்றைப் பற்றி விரிவாக எடுத்துரைக்கிறது நாவல்.

பஞ்ச காலம், அதன் நீட்சியாக உருவாகும் காபித் தோட்டங்கள், கூலியாட்கள், அவர்களது காதல், பின்னாளில் வரும் கிறித்தவ மிசனரிகள், தண்ணீர் வரி.. இப்படி எல்லா விவரணைகளும் இந்நாவலில் மிகவும் கச்சிதமான புனைகதையாக வந்து நிற்கிறது.

"எல்லாப் பாதையும் ஒண்ணுதாண்டா, நடக்கிறவன்தான் வேற வேறன்னு தோணுது"

"சாமியாவது, பூதமாவது, திண்ணா குண்டி வழியா வருது, காய்க்குது, பூக்குது, பழமாகுது"

இப்படியான நுட்பமான வரிகள் நாவல் முழுக்க வருகின்றன. முன்னூறு பக்கங்களில் நாவல் பேசும் வாழ்வியலை, அட்டைப்படத்தில் பரந்து தெரியும் மலையின் பின்னணியில் தனித்துத் தெரியும் பாதை நம்மிடம் உரைக்கிறது. அப்பாதையின் செம்மண் தடம் நமக்கு உணர்த்துவதெல்லாம், செங்குருதி சொட்டிய மலை மக்களின் வாழ்வையும், உழைப்பையுமன்றி வேறல்ல.

• •

முடக்கத்தில் எழுந்த அக்கறை

- செ.தனபிரபா

நூல் : தடையின் தடத்தில் (துரை.நந்தகுமார்)

இந்தியாவிலும், தமிழகத்திலும் கொரோனோ தொற்றுக்காக, லாக் டௌன் ஆரம்பித்ததும், எல்லோரும் வீட்டிற்குள்ளே முடக்கம் ஆனார்கள்.

அதில் இந்த நூலின் ஆசிரியரும் தப்பவில்லை. ஆனால் இப்படியான முடக்கத்திலும் உலகத்தின் சூழலைச் சிந்தித்து அதை ஹைகூவாக மாற்றிப் புத்தகமாகக் கொண்டு வந்து இருக்கிறார்.

புத்தகத்தின் தலைப்பே பேசும். இதனுள் மொத்தம் 144 ஹைகூக்கள். அவை நம் மூளையை மொத்தமாய் அலசி எடுக்கும். நுண்மான் நுழைபுலமாய் ஒவ்வொரு வரியிலும் நம்மைச் சிந்திக்கத் தூண்டுகிறார். சமூகத்திற்கு இப்படியான ஹைகூக்கள் அவசியம். அதில் இவரின் மெனக்கெடல்களும், சமூகத்தின் மீதான அக்கறையும் புத்தகம் படிக்கும்போது உணரலாம்.

இந்நூலில் உள்ள சில ஹைகூக்கள் உங்கள் பார்வைக்காக.....

• சற்றுமுன் கேட்ட பாடலில்

மனம்

"போவோமோ ஊர்கோலம்"

• விலகியிருந்தும்

ஒட்டிக்கொள்கிறது

பசி.

• விரல்விட்டு விரலுக்கு

பூசப்படுகிறது

மருதாணி.

• •

ஒற்றைப் பெண்ணின் முழு நீட்சி

- ரத்தீஷ்.ர

நூல் : இந்திர நீலம் (அ.வெண்ணிலா)

உள்ளடங்கி இருக்கும் எட்டு சிறுகதைகளின் பிரதான வீக்கம் "பெண் இரசாயன மாற்றத்தைச் சதைத் துடிப்போடு அடக்கிக்கொள்ள வேண்டும்" என்பதே. ஆணும் பெண்ணும் சமம் என்றாலும் எழுத்திலும் அது சமமற்ற சமநிலையே என்பதை அழுத்திச் சொல்லும் வாங்கியமே அந்தச் சமம்.

உதாரணம் : ஏதோ ஒரு இருவருக்குள் சண்டை நடந்து வார்த்தைகள் தடிக்கும் சமயம், அவன் கூறும் முதல் வார்த்தை "நீ என்ன பொ....டை மாதிரி நடந்துகற" என்பதே. கேட்டால் எனக்கு அம்மா பிடிக்கும், பெண்களை நான் மதிக்கிறேன் என்பான். இதுதான் அந்தச் சமம்.

கதையில் அனைத்தும் நேரடியாக, அழுத்தமாக, சில இடங்களில் அடித்தா(ள்)ற் போல ஒரு ஆணின் மனநிலைக்குள் எழுந்து தொண்டைச் சவ்வை இழுக்கிறது.

இந்திர நீலம் தலைப்பே பேசுகிறது - இந்திர திசை - கிழக்கு திசை, இந்திர நீலம் - வான் நீலம், இரு பொருள் இடம் பொறுத்து. கிழக்கு நீலம், நீலத்தின் அடர்த்தி அதிகம், நீலத்தின் குணம் "கணம்", நீலம் மனதைக் கவரும் வண்ணம், நீலம் கடினமானது, நீலம் எங்கும், நீலமே அதிகம் விரும்பும் வண்ணம்.

இப்படி தலைப்பிலேயே பெண் குணத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த இரண்டும் சமமாய் அமர்கிறது இணையாய். அதுவும் கதையோடு சேர்க்கையில் இரசாயன வண்ணமாய்ப் புதுத் தோற்றம் அடைகிறது. பெண்ணின் உடல், மாதவிடாய், காமம், அந்தரங்கம், உணர்வு, உணர்ச்சி, அழுகை, சமுதாயப் பார்வை, வெளிப்படுத்த முடியாத வலி.. இப்படி நெடு நீள ஒற்றைப் பெண்ணின் முழு நீட்சியே இந்தப் புத்தகச் சிறுகதைகள்.

மென்மை நிலையிலான காமம் ஓர் நிலையில் ஆரம்பித்துப் பல அடுக்குகளுக்குச் செல்ல வேண்டியது. ஆனால் அது நேரத்தின் அட்டவணையில் சுருங்கி ஒருவரின் ஆசையாய்க் கழிகிறது. அடிப்படை ஊற்றே நிலையில்லாமல் இருந்தால், அனைத்தும் உப்பாகிவிடும். இந்தச் சிறுகதைத் தொகுப்பை வாசிக்கும் ஒவ்வொரு ஆண்மகனும் தன்னையும் மறு வாசிப்புக்கு உட்படுத்தி எல்லாவற்றையும் சீர்படுத்த தேவை இருக்கிறது.

‘கண்ணகிக்கு வெளியவே தெரியாது. எந்தச் சட்டை போட்டாலும், முன்னுக்குத் துருத்திக்கிட்டு நிக்காது. “எனக்கு ஏன் இவ்வளவு பெருசா வளர்ந்ததோ”. வளர்ந்த மார்பகங்கள் பார்த்தேன். “காய் மாங்காயாகக் கல்லு மாதிரி இருந்தது”.’

இதைப் படிக்கையில் உணர்ச்சி பெருத்தால் ஆண்களே நிச்சயம் இந்தப் புத்தகத்தைப் படிக்காதீர்கள்.

• •

பலவண்ண மனிதர்கள்

- ஆ.யோகேஷ்வரன்

நூல் : ஆனந்த நிலையம் (பாவண்ணன்)

எழுத்தாளர் பாவண்ணன் எளிய மனிதர்களின் வாழ்வை நம் கண்முன் காட்சிப்படுத்தும் முதன்மை கதையாசிரியர். இந்தத் தொகுப்பில் உள்ள அனைத்துக் கதைகளும் அதை உறுதிப்படுத்துகின்றன.

1) வண்டல் - இதில் தன் நினைவோடையில் நீந்தி, இளம்வயது நினைவுகளைப் பதிவு செய்கிறான் ஒரு சிறுவன்.

2) கடைசிவரை - ஒரு இறப்பு வீட்டில் நடந்தவற்றை, ஒரு இசைக்கருவி வாசிப்பாளன் சொல்வதாகக் கதை.

3) வத்திக்குச்சி கோபுரம் - பழைய நினைவுகளை நண்பர்களுக்குப் பகிர்ந்து சொல்லும் கதை, நம் மனதிலும் தடம் பதித்துச் சொல்கிறது.

4) ஆனந்த நிலையம் - சொத்துப் பிரச்சனை என்பது காலம்காலமாக நம் சமூகத்தில் தொடர்வது. இந்தக் கதையும் ஒரு பாகப்பிரிவினையின்போது ஏற்படும் வலியை விளக்குகிறது.

5) முறிமருந்து - ஒரு மூலிகை மருந்தைத் தேடி பாட்டி செல்வதையும், அவளைத் தேடி பேரன் செல்வதையும் என்று கனத்த கதையாய் இது முடிகிறது.

6) பூக்காத மரம் - ஒரு புகைப்படக் கலைஞன் தான் பூங்காவில் பார்க்கும் காட்சிகளை விளக்கும் கதை இது. மெல்லிய இழையாய் இதயத்தை வருடுகிறது.

7) பழுது - தொலைபேசி பழுது பார்க்கும் நபர், தன் இல்லற வாழ்க்கை கசப்புகளைக் கடந்து வருவது பற்றிய கதை.

8) சங்கராபரணி-துணிக்கடைக்கு வரும் முயல்வேசம் இடும் நபர் அங்கு ஒரு பெண்ணுடன் காதல் கொள்கிறார். அவளைத் தன் மிதிவண்டியில் பத்திரமாக அழைத்துச் செல்வதாய் கதை நீள்கிறது.

9) உத்தமன் கோயில் : முந்திய சினிமா காலத்தில் அடிக்கடி இடைவேளை வரும். அப்போது ஜிம்னாஸ்டிக் செய்யும் நபர் வந்து தன் திறமை காட்டுவார். அவரின் வாயிலாய் இந்தக் கதை செல்கிறது.

10) தனிவழி - சிறுவர்களுடன் நட்பு கொள்ளும் பாட்டுக்காரன். ஒரு சிறுவனுடன் ஏற்பட்ட தனித்த உறவை அழகுறச் சொல்கிறது இந்தக் கதை.

பலவண்ண வாழ்க்கை பின்புல மனிதர்களைக் கதைக்குள் காட்சிப்படுத்தி இருக்கும் இந்தத் தொகுப்பு, பாவண்ணன் அவர்களின் மற்றுமொரு சிறந்த தொகுப்பு.

• •

ஒளியேந்தி நிற்கும் காதல் சுடர்

- பெ.ஜெகந்நாதன்

நூல் : உயிரளபெடை (கயல்)

பெண்களுக்கான கவிதை உலகில், அதன் பரவெளியில் தனித்துவமாய் மிளிர்கிறார் கயல். அவர் கவிதைகள் நின்று நிலைத்துப் பேசும் தன்மையை உடையன. தமிழ்க்கவிதை வரலாற்றில் பெண்கள் எனக் குறிப்பாகக் எடுத்துக்கொண்டால், பேராசிரியர் கயல் அவர்களின் மொழியும் புலமையும் அபாரமானது. இவரின் இன்னுமொரு புதிய படைப்பாய் "உயிரளபெடை" எனும் கவிதைத் தொகுப்பு கொண்டு வந்து இருக்கிறார். முழுவதும் காதல்.. காதல்.. காதலன்றி ஒரு வரி இல்லை.

காதல் மொட்டுக்களால் எழுத்து வரிகளைப் பிணைத்து குழைத்து மாலையாய் காதல் கவிதைகளைத் தந்திருக்கிறார். காதல் சுடர் ஒளியேந்தி நிற்கிறது. கயல் சங்ககால பெண்பாற் புலவர்களின் நீட்சியாய்ப் பரிணமிக்கிறார். "சிராய்க்கும் பனங்கருக்கு உன் ஊடல்" எனப் பாடும் கவிதையில் காதலின் பேரன்பை விவரிக்கிறார்.

• பொன் மஞ்சள் மினுக்குமுன்

முத்தப் பழமருந்த

எத்தனிக்கையில் சிராய்க்கும்

பனங்கருக்கு

உன் ஊடல்

தானே யதார்த்தமாய் நிகழக்கூடிய சிறு நிகழ்வில் காதலின் மனதைக் கவித்துவமாய்க் காட்டி சற்று பிரளயம் நிகழ்த்துகிறார்.

• வருகைக்காக வைக்கப்பட்ட சாளரத்தை

அறைந்து சாத்தியபடியே வரும் காற்று

சந்தித்த மறு நொடி

நீ துவக்கும் பிணக்கு.

கவிஞரின் சில கவிதைகள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. மனம் என்பது வேறொன்றுமே இல்லை. அது நீ மட்டும்தான் எனும் சொல்லில் இதயத்தில் வெளிச்சமேற்றுகிறார். ஐவகை நிலம் தமிழர்களின் வாழ்வியலைப் பேசுகிறது. நீதான் என் மொத்த உலகத்துக்குமான வாழ்வியலைப் பேசுகிறாய் என்று உருகி உருகிக் காதல் இழையை நெய்கிறார்.

• நீயும்

நீ சார்ந்த இடமுமான

திணைக்கு

என் மனமென்று பெயர்.

• •

கண்முன் விரிந்த வனம்

- கஸ்தூரிபா மயில்சாமி

நூல் : ராஜவனம் (ராம் தங்கம்)

அந்த ஒளிபுகாத வனம் எனக்குள் ஏதோ வெளிச்சமாய் ஓடத் தொடங்கியது. காட்டில் பயணம் செய்யும்போது, நாம் தேவையில்லாமல் எந்தச் செடிகளையும் முறிக்காமல் செல்ல வேண்டும் என அக்கதையில் கூறுவது அருமை..

நிறைய வார்த்தைகள் எனக்குப் புதுமையாக இருந்தன.. மரங்களின் பெயர்கள் கூட புதுமையாக இருந்தன. அழகான சொல்லாடல் விரிவான கதைக்களம் அமைதியான அந்த வனம் பாசமிக்க மலை மனிதர்கள் என மனதைக் கொள்ளை கொண்டுவிட்டது இந்த ராஜவனம்.

மலைவாழ் மக்கள் பற்றிச் சொன்னது அருமை... இந்த மாதிரி புத்தகங்கள் வழியாக அவர்களின் பழக்க வழக்கங்கள் மற்றும் உணவு, பண்பாடு பற்றியும் அதன் மீது அவர்கள் கொண்ட நம்பிக்கை பற்றியும் கேட்கும்போது பிரமிப்பாக இருக்கு... அப்பப்பா எத்தனை விலங்குகள், பறவைகள், ஊர்வன எனக் கண்ணுக்குள் வந்து போகின்றன. மட்டுமில்லாமல் அந்தக் காட்டையே மனக்கண்ணுள் கொண்டு வந்துவிடுகிறார்...

ராஜசேகரன் என்ற கதாபாத்திரம் செமயா இருக்கு.. மனுஷன் மாஸ் காட்டிருப்பாரு... எத்தனையோ வனக்காவலர்கள் உயிரோட்டமாக வேலை செய்கிறார்கள் என்று கதையைப் படித்த பின்னரே தோன்றியது...

அரசியல்வாதிகளும், சில முதலாளிகளும், சில அதிகாரிகளும் மற்றும் நிறைய பொதுமக்களும் செய்யும் பெரும் தவறுகளால் நம் கண்ணுக்குத் தெரியாமல் எத்தனை எத்தனை விலங்குகள் கொல்லப்படுகின்றன.

இரண்டு பக்கம் தாண்டியதுமே ஆர்வமும், பரபரப்பும் தொற்றிக்கொண்ட வனம் இந்த ராஜவனம்.

• •

கிராமம் மணக்கும் சொற்கள்

- கனகா பாலன்

நூல் : புழுதி படிந்த சொற்கள் (கவிஞர் க.சித்தார்த்தன்)

சமூக வலைதளங்கள் மனிதனின் நேரத்தை விழுங்கி, தவறான பாதைக்கே அழைத்துச் செல்கின்றன என்ற குற்றச்சாட்டு பொதுவாக உள்ளதுதான். ஆனால் இவை யாவற்றையும் பொய்யாக்கி தன் திறமையைக் காட்டிக்கொள்வதற்கு நல்லதொரு களமாக முகநூலைப் பயன்படுத்தியவர்கள் எண்ணற்றோர். அந்த வகையில் தன் தனித்தன்மைக் கவிதைகளால் சமூகச் சிந்தனையை நம்மிடையே வித்திட்டுக்கொண்டிருப்பவர் கவிஞர் சித்தார்த்தன்.

இரண்டு அல்லது மூன்று பக்கங்களுக்குக் குறையாமல் இருக்கும் இவருடைய கவிதைகள் இந்த நூலில் மொத்தம் 56. இவை யாவையும் வாசிக்க வாசிக்க நம்மிடையே அமைதி காத்திருக்கும் அனுபவ உணர்வுகள் மேலெழும்புகின்றன .

"புழுதி படிந்த சொற்கள்"தான் புத்தகத்தின் தலைப்புமாகி, முதல் கவிதையின் தலைப்புமாக இருக்கிறது.

"நான்

எழுதுகிறேன்...

கருத்துக்களின்

கழுத்தை நெறிக்காமல்

எழுத்தை இறக்கி வைக்கிறேன்..."

இப்படியாகத் தொடங்கியவர், முழுப்புத்தகத்திலும் தன் எழுத்துக் கொள்கையைக் கைப்பிடித்து அழைத்துவருகிறார். கொஞ்சம் கொஞ்சமாகத் தன் சுயத்தைத் தொலைத்துக்கொண்டிருக்கும் கிராமத்தின் முன்னிருந்த வாசனை இவர்தம் கவிதை வரிகள் வழியே கமகமத்துக் கிடக்கிறது.

தூய்மை இந்தியா என்ற தலைப்பிலான கவிதையில் சமூகத்தின் மீதான அக்கறையைக் கோபமாகக் காட்டி கொந்தளிப்பதாகட்டும்..

'சிலுவையா?

சிறகா?

புரியாத ஒன்றை என் தோள்களில்

பொருத்திவிட்டுப் போனவள் அவள்தான்!'

என்று காதலில் கசிந்துருகுவதாகட்டும் தனிமுத்திரை தெரிகிறது கவிஞரின் எண்ணத்திலும் எழுத்திலும்.

அறிவியல் வளர்ச்சி மற்றும் நாகரீக மாற்றத்தினால் வாழ்வியல் முறைப்பாடு நிறையவே மாற்றம் கொண்டுள்ளது. அதன் விளைவாகப் பெற்றது அதிகமானாலும் காணாமல் போயிருப்பதின் வரிசையில் நம் மூத்தோர்கள் பயன்படுத்திய சொற்களும் அடங்கும்தான். இந்த ஆதங்கத்தில்தான் எழுதுகிறார்..

'சட்டையில்லாத அப்பாவின்

வெற்றுடலில் வழியும்

வியர்வையில் நனைந்த சொற்களை

வெயிலில் உலர்த்துகிறேன்.'

புழுதியின் வாசம் நிறைந்த சொற்களைத் தேடித்தேடிக் கொண்டாடுகிறார் கவிஞர். ஒட்டுமொத்தக் கவிதைத்தொகுப்பின் மேன்மைக்குப் பின்வரும் இந்த நான்கு வரிகளே சாட்சி.

'சலூன் கடைக்காரர்

கூட்டிப் பெருக்கி

ஓரம் தள்ளினார்

எல்லா சாதி மயிரையும்.'

எத்தனையோ கவிஞர்களை ஆச்சரியத்தில் திரும்பிப் பார்க்க வைக்கும் எழுத்துக்குச் சொந்தக்காரர் கவிஞர் சித்தார்த்தன்.

• •

■

● கவி : ராம் வசந்த்
● சித்திரம் : அன்பழகன்



பெண் பிள்ளைகள் இல்லாத வீடுகளில்
வண்ண வண்ண ஆடைகள் இருப்பதில்லை.
வானொலியின் பாடலோடு
இணைந்து பாடும்
தேவதைகளின் குரலங்கு ஒலிப்பதில்லை.
பூக்கள் விற்பவன் மணியோசையால்
அவ்வீடு அடிக்கடி ஆசீர்வதிக்கப்படுவதில்லை.
பெண் பிள்ளைகள் இல்லாத வீடுகளில்
பொம்மைகளின் கைகால்களும்
உடைந்து போகின்றன.
வரவேற்பறை சாய்விருக்கை விரிப்புகள்
திரௌபதியின் துயிலாய் களையப்படுகின்றன.
தொட்டி குரோட்டன் செடிகளும்
தோட்டத்து வாதாம் மரமும்
சபிக்கப்பட்ட வாழ்க்கைக்குப் பழகிக்கொள்கின்றன.
பெண் பிள்ளைகள் இல்லாத வீடுகள்
உண்ணுகின்றன,
உடுத்துகின்றன,
உறங்குகின்றன,
பேசுவதில்லை.

• • •

● ஆதிரன்

மன நிலைக் குறிப்புகள் - 7

ஓவிய மனநிலை

நிறம் என்பது ஒரு செயல். உண்மையில் ஒருவர் ஒரு பொருளைப் பார்க்காதபோது அங்கு நிறம் இருப்பதில்லை. நிறம் என்பது ஒரு ஒளிக்கதிர் இயக்கச் செயல்பாடு. பார்வைக்கான கண்ணும் பட்டுத் தெறிக்க ஒரு பொருளும் ஒளியும் சேர்ந்தால்தான் நிறம் கிடைக்கும். கருப்பும் வெள்ளையும் நிறமல்ல. அவை நிறமற்ற நிலை. கண்கள் அவற்றையும் உணர்வதுதான் நிறத்தின் அடிப்படைத் தத்துவம். மனிதக் கண்களால் சிவப்பு, நீலம் மற்றும் பச்சை ஆகிய மூன்று நிறங்களைத்தான் நேரடியாக உணரமுடியும். பொருட்களின் மேல் ஒளி பட்டு பிரதிபலிக்கும் செயல் வெவ்வேறு அலைவரிசைகளில் நிகழ்கிறது. பொதுவாக அவை வானவில்லின் ஏழு நிறங்களை உருவாக்கும். இசையின் – ஒலியின் – ஏழு ஸ்வரங்கள் போல, ஒளியின் ஏழு ஸ்வரங்கள். ஒலியின் ஏழு ஸ்வரங்களிலிருந்து லட்சக்கணக்கான ராகங்கள் கிடைப்பது போல ஏழு நிறங்களின் கலவையில் நாம் லட்சக்கணக்கான நிறங்களை உணரமுடியும். போலவே, மகிழ்ச்சி, சோகம், பயம், ஆச்சர்யம், வெறுப்பு, கோபம், குற்றவுணர்வு என ஏழு வகையான பொதுவான அடிப்படை மனித உணர்வுகள் பற்றி நமக்குத் தெரியும் அல்லவா. ஏழு உணர்வுகளின் இணக்கங்களும் பிணக்கங்களும்தான் மொத்த மனித வாழ்வின் வெளிப்பாடு. இந்த உணர்வுக் குழப்பங்கள் வாயிலாக வெளிப்படும் கலையும் இலக்கியமும் மனித வாழ்வின் பல்வேறு உணர்வுகளை உருவாக்க வல்லவை. ஓவியக் கலையின் அடிப்படையும் இந்த உணர்வு வகைமைகளின் பிரதிகளை நிறங்கள் மூலம் வெளிப்படுத்துவதுதானே. அப்படி பார்க்கப் போனால், நிறங்களின் வரலாறே ஓவியக் கலையின் வரலாறு என்றால் மிகையில்லை. தெற்கு ஆசியாவில் பெரும்பாலும் இந்தியாவின் நிலப்பகுதியில் மட்டுமே கிடைக்கக்கூடிய ஒரு தாவரத்திலிருந்து பிரித்தெடுக்கப்படும் ‘இந்திய நீலம்’ *(indigo)* பற்றி நம்மிடையே பெரும் வரலாறு இருக்கிறது. போலவே பலவகை நிறங்களின் வரலாறுகள் மிகுந்த சுவாரஸ்யம் கொண்டவை. ராஜ ஊதா *(royal purple)* பற்றி மிக அரிதான மற்றும் சுவாரஸ்யமான தகவல்களை அளிக்கும் ஒரு சிறந்த கட்டுரையை நண்பர் நாராயணி எழுதியுள்ளார் *(https://www.vasagasalai.com/kadalum-manithanum-narayani-2)*. நாம் நிறங்களின் உளவியலைப் பற்றி நிச்சயமான ஒரு புரிதலை உருவாக்கிக்கொள்ள வேண்டும். பொதுவாக நிறங்கள் மனித உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ளன. அதனால்தான் நிற மேலாண்மையில் பாண்டித்தியம் அடைந்த ஓவியர்கள் தங்களது படைப்புகளின் மூலம் மனிதர்களைக் கட்டுப்படுத்துகிறார்கள். சர்ரியலிசம் உருவான பின்னான ஓவிய வீச்சு இவ்வாறான நிற வகைமைகள் கொண்ட பல பண்புகளை உள்ளடக்கியதாக மாறியது. இவ்வகையில் கரப்பு ஓவியங்கள் அல்லது மறை ஓவியங்கள் *(abstract painting)* படைக்கும் ஓவியர்கள் உலகம் முழுவதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினார்கள். கலாச்சாரங்களை, பண்பாடுகளை, மனித உணர்வுகளை,

சமுதாயத்தின் அரசியலை, அறிவியலை, அவற்றின் கசடுகளை நிறங்களின் மூலம் வெளிப்படுத்தினர். சமகாலத்தில் ஓவிய உருவாக்கம் மிகப்பெரும் தனிநபர் செல்வாக்கு மற்றும் பணம் ஆகியவற்றை உறுதி செய்யும் வியாபாரமாக மாறியுள்ளதையும் நாம் பார்க்கிறோம். இன்று உலகளவில் நிறங்களுக்கெனப் பெரும் அர்த்தப்பாடுகளை மனிதர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். அவை நாட்டுக்கு நாடு பெரும் வேறுபாடுகளைப் பெற்றிருக்கின்றன. அமெரிக்காவின் புகழ்பெற்ற கருப்பின பெண் ஓவியரான ஆல்மா தாமஸ் இவ்வகையில் ஒரு மிகச்சிறந்த அப்ஸ்ட்ராக்ட் ஓவியராக அறியப்பட்டவர். ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பதுகளில் மிகச் சிறந்த நீர்வண்ண ஓவியங்களை உருவாக்கியவராகக் கொண்டாடப்படும் இவரது ஒரு ஓவியம்தான் நான் பகிர்ந்திருப்பது. நான் இதன் முதல் சட்டத்தில் தேளையும் இரண்டாம் சட்டத்தில் மான் கூட்டத்தையும் மூன்றாம் சட்டத்தில் ஒரு கழுதையையும் பார்க்கிறேன். மீண்டும் மீண்டும் பார்த்தால் வேறேதும் கிடைக்கும். இது ஒரு சுவாரஸ்யமான விளையாட்டு. இதே ஓவியத்தின் வெண்மையைத் தொடர்ந்தால் எனக்குத் தெரிவது பாலைக் காடு. உங்களுக்கு என்ன தெரிகிறது என்பதை நீங்களே தெரிந்துகொள்ளுங்கள். போலவே உங்களைச் சுற்றியுள்ள சமுதாயத்தின் நிறங்களைத் தெரிந்துகொள்ள முயலுங்கள். கூடவே நிறங்களின் அரசியலையும் புரிந்துகொள்ள முயலலாம். இவ்வகையான முயற்சி நமது செயாலாற்றலை அதிகரிக்கச் செய்யும். பகிர்ந்திருக்கும் ஓவியத்தைப் பற்றிய ஓவியரின் குறிப்பு கிடைக்கவில்லை. ஒருவேளை ஆல்மா தாமஸ் இதற்கொரு பெயர் வைத்திருந்தாரென்றால் இதன் அர்த்தப்பாடுகள் வேறுவிதமாகவும் இருக்கலாம். அது நமக்கு உவப்பற்றதாகக் கூட இருக்கலாம். இந்த மயக்கமாயம் நமக்கு சுவாரஸ்யம்தானே. ஆல்மா தாமஸ் ஒருமுறை தமது நண்பர்களிடம் இப்படிக் கேட்டார்: *உங்கள் வீட்டின் அருகில் இருக்கும் மரங்கள் இசைக்குமா... உங்கள் அக்கத்தில் (neighborhood) இருக்கும் மலர்கள் ஆடிப் பாடுமா... நண்பர்களே, நான் கேட்கிறேன் உங்களைச் சுற்றி நீங்கள் பார்க்கும் நிறங்கள் அசையுமா?*

• • •



தத்துவ மனநிலை

மனிதர்கள் சதா எதையாவது புரிந்துகொள்கிறார்கள். புரிந்துகொள்வதற்கான ஏதாவது ஒரு ‘முறை’யைத் தொடர்ந்து கண்டுபிடித்தும் விடுகிறார்கள். ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால் இந்தப் ‘புரிந்துகொள்ளுதல்’ எனும் செயல் மனிதர்களிடையே எவ்வளவு ‘பயங்கரமான’ விசயமாய் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளலாம். மனிதன் எதையாவது புரிந்துகொள்வது என்பது, உலகத்தில், பூமியில், சில நேரங்களில் பிரபஞ்சத்தில் கூட நிறைய கட்டுப்பாடுகளற்ற நேரடி மற்றும் பக்க விளைவுகளை உருவாக்கி விடுவதிலிருந்து அதன் ‘பயங்கரத்தை’ நாம் புரிந்துகொள்ள முடியும். மனிதர்கள் அறிவியலை, வரலாற்றை, பொருளாதாரத்தை, பூமியை, வான்வெளியை எப்படியெல்லாம் புரிந்துகொள்ள முயல்கிறார்கள் என்று பார்த்தோமானால் அவற்றிற்கு எல்லாக் காலத்திலும் ஏதோவொரு வகைமை இருந்துகொண்டே இருக்கும் என்பது தெரியவரும். சரி, எளிய மனிதர்கள் இந்தச் சமுதாயத்தை எப்படி புரிந்துகொள்கிறார்கள்

என்பதைத் தெரிந்துகொள்ள ‘குறிப்புகளின் வட்டம்’ *(circle of reference)* என்று உளவியலாளர்கள் ஒரு ‘வகைமுறையை’ப் பயன்படுத்துகிறார்கள். எடுத்துக்காட்டாக நாம் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைப் பொருளாதார அடிப்படையில் ஏழு வகையாய்ப் பிரித்துப் பார்க்கலாம். பெரும் பணக்காரர்கள், பணக்காரர்கள், மேல் மத்தியவர்க்கம், மத்திய வர்க்கம், கீழ் மத்திய வர்க்கம், ஏழைகள், வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மிகக் கீழ் ஏழைகள் எனப் பொதுவாய்ப் பிரிக்கலாம் அல்லவா. (இதுவொரு எடுத்துக்காட்டுக்காகப் பிரிக்கப்பட்டுள்ளது. உண்மையில் வேறுவகையாகக் கூட இருக்கலாம்). இந்த ‘மாதிரி’ சமுதாயத்தில் ஒரு மனிதர் தான் எங்கு இருக்கிறாரோ அதன் உடனடி சூழலில் கிடைக்கும் தரவுகளின் அடிப்படையில் உலகத்தைப் புரிந்துகொள்கிறார் என்று சொல்லலாம். அதாவது ஒரு மத்திய வர்க்க மனிதருக்குத் தனது உடனடி சூழல் என்பது மத்திய வர்க்கச் சூழலாகவே இருக்கிறது. எனவே அவர் தனது சூழலின் மூலமாக உலகத்தின் மொத்த அமைப்பையும் புரிந்துகொள்ள முயல்கிறார். குறிப்பிட்ட சமுதாயத்தில் மத்திய வர்க்க மனிதர்கள் எதைச் செய்கிறார்கள் அல்லது எதைச் செய்யாமல் விடுகிறார்கள் என்பதைப் பொறுத்து அவர்களின் பண்பாடு மற்றும் பொருளாதார நிலை குறித்து அறிந்துகொள்ள அவர் முற்படுகிறார். மேலோட்டமாகப் பார்க்கும்போது இது சமுதாயத்தைப் புரிந்துகொள்வதற்கு ஒரு எளிய வழிமுறையாக இருப்பது போலத் தோன்றினாலும் உண்மையில் இது பல்வேறு வகையான பிழையான புரிதலுக்கு அவரை இழுத்துக் கொண்டுபோய்விடும் என்றே படுகிறது. ஒரு சிறு எடுத்துக்காட்டாக பறவைக் காய்ச்சல் பரவலை மத்திய வர்க்கச் சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு மனிதர் எப்படிப் புரிந்துகொள்கிறார் என்பதைப் பார்க்கலாம். அவர் காலையில் எழுந்தவுடன் செய்தித்தாளில் பறவைக் காய்ச்சல் பரவல் பற்றிய செய்தியை வாசிக்கிறார் என்று கொள்வோம். வடமாநிலங்களில் சில இடங்களில் தீவிர நிலைப் பரவல் உள்ளது என்றும் நமது அண்டை மாநிலமான கேரளா வரை பரவிவிட்டது என்றும் நிலைத்தகவலைச் செய்தித்தாள் அவருக்கு அளிக்கிறது. அவர் உடனே தனது மற்றும் தன் குடும்பத்தினரின் பாதுகாப்பிற்காகக் கோழி இறைச்சி வாங்குவதை நிறுத்த முடிவு செய்வதோடு மட்டுமல்லாமல் தனது உறவினர்களிடமும் நண்பர்களிடமும் இந்த முடிவைச் சொல்லுகிறார். அந்தக் குறிப்பிட்ட சமுதாயத்தில் மிகக் கணிசமான அளவு கோழி இறைச்சி வாங்கும் செயல் ஏறக்குறைய ஓரிரு நாளில் அமலாக்கப்பட்டுவிடுகிறது என்று வைத்துக்கொள்வோம். சமுதாயத்தைப் புரிந்துகொள்ள முயற்சிக்கும் நபர் தனது சூழலைக் கவனிக்கிறார். பொதுவாக பறவைக் காய்ச்சலிலிருந்து அந்த வர்க்கம் பாதுகாக்கப்பட்டுவிட்டதாக உணர்கிறார். ஆனால் உண்மையில் அந்தச் சமூகம் பாதுகாப்பாக இருக்கிறதா என்ற கேள்விக்கு ஆதாரப்பூர்வமான பதில் அவரிடம் இருக்காது அல்லவா. ஏனென்றால், கோழி இறைச்சி வியாபாரம் என்பது அந்த மத்திய வர்க்கத்தைச் சேர்ந்த கணிசமான மனிதர்களின் வாழ்வாதாரமாக இருப்பதால் அவர்களது வாழ்வு உடனடி உபத்திரவத்திற்கு உள்ளாகிவிடுகிறதை நமது ஆள் கவனிக்கத் தவறிவிடுவார். அவர்கள் பறவைக் காய்ச்சலில் இருந்து தப்பித்துவிடலாம். ஆனால் அதைவிடக் கடுமையான பசியிலிருந்து அவர்கள் தப்பிக்க முடியாவிட்டால் அந்தக் குறிப்பிட்ட சமுதாய வர்க்கம் பாதுகாப்பாக இருப்பதை எப்படி உறுதி செய்ய முடியும். எனவே, ஒரு சமுதாயத்தைப் புரிந்துகொள்ள உளவியலாளர்கள் பல்வேறு வகையான ‘முறை’களைக் கையாள்கிறார்கள். அவர்கள் அதற்காக அடிப்படையில் ஐந்து வினாக்களை எழுப்புகிறார்கள்: 1. முக்கியமான சிந்தனை வடிவம் *(main idea)* என்ன? 2. எங்கிருந்து தகவல்கள் *(data)* பெற வேண்டும்? 3. அந்தத் தகவலின் முக்கியத்துவம் என்ன? 4. தகவல் எவ்விதப் பார்வைக் கோணத்தில் *(perception)* உள்ளது? 5. ஒட்டுமொத்தத் தேவை/நோக்கம் என்ன?

• • •

இலக்கிய மனநிலை

தனிமனிதத் தொன்ம உணர்வு எப்போதுமே சடங்கு வகைமைகளைச் சார்ந்தது. படையலின் தத்துவம். மேலும் மனிதரின் தொன்ம மனம் என்பது நாடோடித் தனமானது. அலைவை மனிதன் வேறெதுவை விடவும் விழைகிறான். காலத்தின் ஆதிக் கண்ணிக்கும் சமகாலத்

தொன்மப் பிரக்ஞைக்கும் இடைவெளியில் சொற்களுக்குப் பனங்கள் ஊற்றுவதன் மூலம் கவிதை சமைக்கிறார்கள் கவிகள். அதன் தமிழ் வெளியில் குறிப்பிடத்தகுந்த ரஸவாதி என். டி.ராஜ்குமார். அவரின் மூன்று கவிதைகள் இங்கு:

1 கடவுளை நான் கட்டவிழ்த்தபோது
அவனில் ஒட்டிக்கொண்டிருந்த
லட்சக்கணக்கான மனிதர்கள்
அம்மணத்தோடு ஓடிப்போய்
தற்கொலை செய்துகொண்டார்கள்
தப்பிவந்த சிலர் இந்த சாவுக்கு
யார் காரணமெனக் கேட்டபோது
எங்களைப் பார்த்து ஆள்காட்டியது விரல்
மல்லுக்கு வந்த மாமிசச்சாமியின்
வெட்டி எறியப்பட்ட விரல் இருந்த இடத்தில்
நவீன ஆயுதம் ஒன்று முளைத்திருந்தது
கடவுள் இருந்த இடம் லட்சணம் கெட்டிருந்தது

2 ஒரு முத்தம் கேட்டு கெஞ்சுகிறேன் நான்
குழந்தையின் மலம் துடைத்தெறிகிறாள் மனைவி
ஒரு முத்தம்கேட்டு அலைகிறேன் நான்
குழந்தையின் மூத்திரத்துணியை கழுவிப்போடத்
தருகிறாள் மனைவி
ஒரு முத்தம் கேட்டு புலம்புகிறேன் நான்
குழந்தையை உறங்கவிடாத நாயின் வள்வள்ளை
திட்டித் தீர்க்கிறாள் மனைவி
ஒரு முத்தம் கேட்டு சண்டையிடுகிறேன் நான்
பால் குடிக்கும் குழந்தையின் மார்பை மறைக்கிறாள்
மனைவி
ஒரு முத்தம் கேட்டு கறங்குகிறேன் நான்
கொசுக்கள் அண்டாமலிருக்க வலைபோட்டு
மூடுகிறாள் மனைவி
அடிவயிர் கிழிசல் காய்ந்தபின்னும்
பச்சை உடம்புக்காரி பதறுகிறாள் என்னைப் பார்த்து
எரிகிற உடலின் மனவிளி நிராகரிக்கப்படுகையில்
புணர்ச்சி பழகிய பேருடலில் விந்து முட்டி நிற்கிறது
எனது மிருகங்களின் கூரேறிய குறிகளை
மிகப்பக்குவமாய் வெட்டிச்சாய்த்தும்
மூளையின் பின்னால் பதுங்கியிருக்கிறதொரு
கலவரமனம்.

3 சாகக்கிடந்தாள் அம்மா
மருத்துவர் சொன்னார் கர்ப்பப்பாத்திரத்தை
எடுத்துவிடவேண்டுமென்று.
எனது முதல் வீடு இடிந்து தலைகுப்புற வந்து
விழுந்த
வேற்றுலக அதிர்ச்சி
எனது மூப்பனின் சுடலையிலிருந்தொரு ஜோதி
ஒரு முட்டையின் வடிவில் பறந்து சென்று
இளமையை வாரிக்குடித்த மயக்கத்தில்
ஒரு தீக்கொழுந்தைப்போல் நின்றுகொண்டிருந்த
அம்மாவின் வயிற்றில் சென்றது கிளிக்குஞ்சாகிக்
கொண்டது.
மண்ணெடுத்துச் சுட்டுப்பொடித்து அரித்துத்
தின்றாளவள்
மண்வாசனை முதலில் வந்தப்பிக்கொண்டதப்படி.
மாடன் கோவில் திருநீறை மடியில் கட்டிவைத்து
அள்ளித்தின்ன
நானந்த சாம்பல் கிண்ணத்தில் பாதுகாப்பாய்
மிதந்தேன்.
பாம்புகள் புணருமொரு பௌர்ணமி நாளில்

மணக்கும் மரவள்ளிக்கிழங்கைப்போல் பூமியில்
வந்திறங்கிய
என்னுடலில் ஒட்டிக்கொண்டிருந்த அழுக்கை
தெற்றிப்பூ, கஸ்தூரி மஞ்சள், சிறுபயறு பொடித்துத்
தேய்த்து

குளிப்பாட்டி முலைப்பால் தந்து உறங்க வைத்த

அம்மா

குடல்புண்ணில் வயிறு நொந்து ஏங்கி அழுகிறபோது

முண்டு மொருவீடு இடிந்தென் தலையில்

வீழுமோவென

மூப்பனின் குரலில் அழுகிறது கிளிநெஞ்சு.

• • •

பொதுவான மனநிலை

அமெரிக்காவின் ஆட்சி மாற்றம் உலகளவில் ஒரு ஆசுவாசத்தை ஏற்படுத்தியிருக்கிறது. முக்கியமாக பேரழிவுத் தட்பவெப்பக் காலநிலை மாற்றம் *(catastrophic climate change)* குறித்தான முதலாளியத்துவப் போக்கிற்குப் பெருத்த பின்னடைவினை உருவாக்கியிருக்கிறது. உண்மையில் மிகவும் மகிழ்ச்சிகரமான செய்தி. பைடன் தனது முதல் நாளிலேயே அமெரிக்காவை மீண்டும் பாரிஸின் காலநிலை ஒப்பந்தத்தில் *(Paris climate accord)* இணைத்ததும் கீஸ்டோன் எக்ஸெல் பைப்லைன் கட்டுமான ஒப்பந்தத்தை ரத்து செய்திருப்பதும் உலக அரங்கில் காலநிலை மீட்பு தொடர்பான செயல்பாட்டில் மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்க வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தச் சூழலில் அமெரிக்காவின் டெஸ்லா நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி எலான் மஸ்க், கரியமிலவாயு வெளியேற்றத்தைத் தடுக்கும் விதமான மிகச்சிறந்த தொழில்நுட்பக் கண்டுபிடிப்பிற்கு பத்து கோடி டாலர் பரிசு அளிக்கப்படும் என்று ரகளையான ஒரு அறிவிப்பை விடுத்துள்ளார் (23.01.2021 – இந்து தமிழ்திசை நாளேடு). 2021ஆம் வருடம் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் விஞ்ஞானிகளுக்கு ஒரு சிறந்த ஆரம்பம் என்றே கொள்ளலாம். அதே சமயம் இன்னும் நாட்டின் குடிமக்கள் பெரிய அளவில் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு அற்ற நிலையில்தான் இருக்கின்றனர். என்ன ஏது என்று அறியாமல் மக்கள் தன்னார்வத்திலும் பயத்திலும் செய்கின்ற சிறுசிறு செயல்கள் கூட சூழல் சீர்கேட்டினை உருவாக்கிவிட்டுக் கொண்டிருக்கிறது. இந்தியாவைப் பொறுத்த அளவில் சூழல் கேட்டின் மிகப் பெரிய நிகழ்வு எதுவென்றால் மிகத் தரக் குறைவான ‘கழிவு மேலாண்மை’ *(waste management)* என்றுதான் சொல்ல வேண்டும். நெகிழிக் கழிவிற்கு நிகராக புதிதாய்ச் சுற்றுச்சூழல் சீர்கேட்டில் முகக்கவச கழிவுகளைப் பார்க்க வேண்டியுள்ளது. போலவே காட்டு விலங்குகளைக் கொல்லும் மனித மனநிலை ஒழுங்கற்ற வடிவில் கொடூரமாக வளர்ந்தவாறு உள்ளது. கடந்த மாதத்தில் சிறு இளைஞர் கும்பல் ஒன்று அரியவகை நன்னீர் டால்ஃபின் மீன் ஒன்றை விளையாட்டாகக் கட்டையால் அடித்துக் கொல்லும் ஒளிப்படக் காட்சியைக் காண நேரிட்டது எனது வாழ்நாள் துரதிர்ஷ்டங்களில் ஒன்று. மிக நாகரீகமடைந்து விட்டதாகக் கருதப்படும் நமது மனித இனம் உண்மையில் அழிவின் விளிம்பு நிலையில் இருக்கும் ஆதிவாசி மனிதர்களின் பழக்கவழக்கங்களைத் தெரிந்துகொள்வதன் மூலம் ஒட்டுமொத்த அழிவிலிருந்து நம்மை மீட்டுக் கொள்ளலாம். உலகம் முழுவதும் அனேக மானிடவியல் ஆய்வாளர்கள் ஆதிப் பழங்குடிகளின் வாழ்க்கை முறையில் இயற்கையின் பங்கு, அவர்கள் இயற்கையைப் புரிந்துகொள்ளும் விதம், பால் பாகுபாடு பற்றிய புரிதல், அவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பதன் அளவுகோல் போன்றவற்றை ஆராய்ந்து பதிவு செய்து வருகிறார்கள். 23.01.2021ஆம் தேதியிட்ட டைம்ஸ் ஆஃப் இண்டியா நாளிதழில் இவை தொடர்பான மூன்று மிகச் சிறந்த கட்டுரைப் பதிவுகளை அளித்துள்ளனர். இணையத்திலும் கிடைக்கிறது. தோராயமாக 476 மில்லியன் பழங்குடியினர் உலகம் முழுக்க தங்களது ஆதி நிலத்தை மிகச் சிறந்த பல்லுயிர் பெருக்கத்தோடும் மாசற்ற சூழலோடும் பாதுகாத்து வருகின்றனர். உலக மக்கள் தொகையில் அவர்கள் மொத்தமே ஆறு சதவீதம்தான். முதலாளியப் பெருநிறுவனங்களும் காலனிய ஆதிக்கவாதிகளும் அவர்களைத் தின்று கொண்டிருக்கிறார்கள். பாதிப்புக்கு உள்ளாகிக் கொண்டிருக்கும் நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

- தொடர்வோம் ■

கடிதம் - 3

எழுதியவர் : கவிஞர் கலாப்ரியா

கோபால்

30.3.81

அன்புள்ள நம்பிக்கு,

வணக்கம்.

உங்கள் *25/3* கடிதம். உங்களுடைய அன்புக்கும், அபிமானத்திற்கும் என் நன்றி.

என்னுடைய மாறுதல் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதற்கும் என் நன்றி.

இத்துடன்ஒருகவிதைஅனுப்பியுள்ளேன். மயனில், பிரசுரிக்க கேட்டிருந்ததற்காக. இதை உங்களுக்காகத்தான் அனுப்புகிறேன். இதில் *Edit* செய்வதற்கு கூடியமட்டும் இடந்தர வேண்டாம். பிரசுரமானால் மயன் ஒரு பிரதி அனுப்புங்கள். பிரசுரம் குறித்து நீங்கள் அதிக சிரமம் எடுக்கவோ, வாதம் செய்யவோ வேண்டாம்.

பிரசுரம் முடியாத பட்சத்தில் திருப்பி அனுப்பிவிடுங்கள். நம்மை ஆதரிக்கிற வேறு யாருக்காவது அனுப்பி வைக்கலாம்.

திரும்பவும் என் நன்றியும் வணக்கமும் எல்லாருக்கும். ராமச்சந்திரனின் நாவலைப் பார்க்க ரொம்பவும் ஆசையாயுள்ளது. நீங்களே *V.P.P*யில் அனுப்பினாலும் பெற்றுக்கொள்வேன். அப்படி அனுப்பினால் ராமச்சந்திரனிடம் சொல்லுங்கள். அவர் வேறு அனுப்பி *duplicate*ஆக வேண்டாம். இத்துடன் உள்ள லெட்டரை சமயவேளிடம் சேர்க்க முயற்சியுங்கள்.

என்றும் உங்கள்

கோபால்.

• •

அடிக்குறிப்புகள் :

1. மயன் : எம்.எஸ். உதயமூர்த்தி நடத்திய பத்திரிக்கை.

2. ராமச்சந்திரன் : வண்ணநிலவன்.

3. சமயவேள் நவீனக் கவிஞர்களில் முக்கியமானவர்.

4. கோபால் : கலாப்ரியாவின் செல்லப்பெயர்.

• • •

கடிதம் - 4

எழுதியவர் : கவிஞர் கலாப்ரியா

9.9.82

கலாப்ரியா :

பிரியப்பட்ட இனியவர் நம்பிக்கு,

என் அன்பான வணக்கம்.

சென்னை வாசம் எப்படியிருக்கிறது.

சென்னைக்குப் போகப் போவதாக என்னிடம் சொல்லவேயில்லையே. என் மீது வருத்தம் என்று நினைக்கிறேன். சரி.

பாலச்சந்திரன் உங்களைச் சந்தித்ததையும், உங்கள் உதவிகளையும் குறித்துச் சொன்னான். என் நன்றி. சமயவேலுவுக்கும்.

தீர்த்தயாத்திரை குறித்து தினமணி சுடர் (கதிர்?) -ல் விமர்சனம் கேட்டிருப்பதாகக் கூறினான். அதற்கு என் அனுமதி குறித்து எழுதும்படி சொன்னான். என் கதைகளில் எதைக் குறித்தும்; எப்பொழுதும் எப்படியும் எழுத உங்களுக்கு நானென்ன என் அனுமதி தருவது. உங்கள் விருப்பம் போல் செய்ய எப்பொழுதும் நான் சம்மதப்படுகிறவனில்லையா.

You have my permission.

அப்படி விமர்சனம் (?) வருகிற தினமணி சுடர் – குறித்து மேல் விவரம் எழுதுங்கள்.

எல்லாருக்கும் என் அன்பு.

என்றும் உங்கள்

கோபால்.

• • •

கடிதம் - 5

எழுதியவர் : கவிஞர் கலாப்ரியா

2.2.83

TkSomasundaram :

Kalapriya – 29, sudalaimadan koil st, Tirunelveli 627006

பிரியப்பட்ட நம்பிக்கு,

வணக்கம்.

உங்கள் கடிதம் கிடைத்தது.

நீங்கள் குறிப்பிட்டுள்ள தகவல்படி, மாலனின் தந்தையிடம் ஞாவகப்படுத்தினேன்.

இப்போது வயதில் சலுகை காட்டக் கூடாதென்று 'போர்டில்' உறுதியாக இருக்கிறார்கள், அதனால்; வெளியில் வேறு ஏதாவது தனியார் நிறுவனத்தில் முயற்சி செய்கிறேன் என்று கூறினார்.

உண்மையும் அதுதான்.

மற்றபடி : வேறு விசேஷமில்லை.

திருநெல்வேலிக்கு வந்தபின் ஓய்வு ஒழிச்சல் இல்லை – எதையும் எழுதவோ படிக்கவோ நேரமிருப்பதில்லை. பொழுதும் உற்சாகமின்றித்தான் போகிறது.

ராமச்சந்திரன் – இங்கு வந்திருந்தார். சந்தித்தேன்.

எழுதுங்கள் –

எ.உ

கோபால்

• •

அடிக்குறிப்புகள் :

1. அன்றைய நாளில் எழுத்தாளர் மாலனின் தகப்பனார் திருநெல்வேலி சௌத் இந்தியன் வங்கியில் தலைவராக இருந்தார். அவரிடம் வேலைக்காக, மாலனுக்கும் எழுதிவிட்டு கலாப்ரியாவிடமும் நினைவுபடுத்தச் சொன்னேன்.

• • •

கடிதம் - 6

எழுதியவர் : கவிஞர் கலாப்ரியா

11.3.86

அன்புமிக்க நம்பிக்கு,

வணக்கம்.

உங்கள் கடிதம் கிடைத்தது. ரொம்பவும் ஆறுதலும் மகிழ்ச்சியும் அளிக்கிற சில கடிதங்களில் எப்போதும் உங்களுடையவைகளும் அடங்கும்.

இம்முறை சற்று அதிகமாகவே ஆறுதல் தேவைப்படுகிற மனநிலைமையில் நீங்கள் எழுதியிருப்பது சந்தோஷமாயிருக்கிறது. மண் கட்டியை காற்று அடித்துப்போகாது; அற்புதமாயிருந்தது. மற்ற இரண்டும் சுமார்தான்.

இடைகால் சகோதரர்கள் கொண்டுவருகிற பத்திரிக்கைக்கு எப்போது பொழுது புலரும் என்று தெரியவில்லை.

இரண்டு நாளாய் பாரதிக்கு உடல் சுகமில்லை. Bronchitis தொந்தரவு. மனதுக்கு நிம்மதியில்லாமல் கழிந்துகொண்டிருக்கிறது. Positive thinking என்பதெல்லாம் எனக்கு அந்நியமாகிக்கொண்டே போகிறது.

இதிலிருந்தெல்லாம் விடுபடத் தேவையான optimismம், தன்னம்பிக்கையும் எப்போ வருமெனத் தெரியலை.

"இதிலிருந்து விடுபட அல்லது அதிலிருந்துகொண்டே சந்தோஷமாயிருக்க;" இதுதான் நான் இனி கவிதையில் சொல்கிற செய்தியாயிருக்கும் என்று நினைக்கிறேன்.

ராஜுவின் விலாசத்தை எழுதுங்கள். என்னிடம் இருக்கிறதென்று நினைத்தேன். இல்லை போலிருக்கிறது. அவனை சந்திக்க வேண்டுமென்று துடிப்பாயிருக்கிறது. அவன் சென்னையைவிட்டு வெளியூருக்கு சமீபத்தில் செல்லுகிறானா என்று தெரிந்தால் எழுதுங்கள்.

ராமச்சந்திரன், சந்திரா, ஆதவன், மல்லீஸ்வரி எல்லாரையும் நாங்கள் மிகவும் விசாரிக்கிறோம். துரைக்கும் எங்கள் அன்பு. அடிக்கடி எழுதுங்கள்.

எ.உ

கோபால்.

• • •

கடிதம் - 7

எழுதியவர் : கவிஞர் கலாப்ரியா

8.8.87

அன்புள்ள நம்பிக்கு,

வணக்கம். கடிதமும் புத்தகங்களும் கிடைத்தன. மிக்க நன்றி.

இன்று காலை மணியை தற்செயலாக பஸ்ஸில் பார்த்தேன். அவரும் நாளை (ஞாயிறு) சுப்பையா சாரை பார்ப்பது பற்றி கேட்டார். நாளை மதியம் 1 மணிக்கு இடைகால் வருவதாகக் கூறினார். அவரிடம் அப்படி வரவேண்டாம் என்று கூறிவிட்டு, நீங்களும் மணியும் சாம்பவர் வடகரைக்கு நேரடியாகச் சென்றுவிடுங்கள். நான் மதியம் 2 மணி பஸ்ஸில் (v.k.புதூர் டவுண்பஸ்ஸில்) அங்கு வருகிறேன்.

வேறு விசேஷமில்லை. நகுலன் இன்று கடிதம் எழுதி பணமும் அனுப்பியிருக்கிறார். அவரும், காசியபன், அவரது மனைவி மூன்று பேரும் வருவதாக இருக்கிறார்களாம். உங்களிடம் தகவல் தெரிவிக்கும்படி குறிப்பிட்டிருக்கிறார். அசோகமித்திரனும் உற்சாகமாய் கடிதம் எழுதியுள்ளார்.

மற்றவை நேரில். நாளை.

என்றும் உங்கள்

கோபால்.

• •

அடிக்குறிப்புகள் :

1. மணி: ச.மணி. தமிழ் முதுகலை பயின்று கூட்டுறவுத்துறை தணிக்கையாளராகப் வேலை பார்த்துவந்தார். இவருக்காக மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத்தலைவர் முத்துசண்முகம் பிள்ளையிடம் சொல்லி இருக்கைக்காக.. பேருந்தில் மணியையும் கூட்டிக்கொண்டு எழுத்தாளர் லா.ச.ராமாமிர்தம் நேரில் அழைத்துச் சென்றது ஒரு முக்கியமான வரலாற்று நிகழ்வாகும்.

2. சுப்பையா சார் : சுந்தரராமசாமியின் ஒரு புளிய மரத்தின் கதைக்கு சுப்பையா சார் எழுதிய கடிதமே அடுத்த பதிப்பில் முன்னுரை போல வெளியிடப்பட்டது. மிகுந்த ஆர்வமுள்ள இலக்கிய வாசகர். தென்காசி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் கணித ஆசிரியராக வேலை பார்த்துவந்தவர். அவருடைய விருந்தோம்பல் பண்பு எங்களை அடிக்கடி அவர் வீட்டுக்கு இட்டுச் செல்லும்.

3. 87இல் நடந்த கலாப்ரியாவின் கவிதைப் பட்டறைக்கு வருவதற்கு முன்பதிவு பணம் அனுப்பியிருக்கிறார் நகுலன்.

4. காசியபன் தமிழின் முக்கியமான கவிஞர்களில் ஒருவர். அவருடைய அசடு நாவல் வாசகர்கள் படிக்கவேண்டிய ஒன்று.

• • •

கடிதம் - 8

எழுதியவர் : கவிஞர் கலாப்ரியா

15.10.88

வணக்கம்.

Workshop பற்றிய கடிதம் கிடைத்திருக்கும் என்று நினைக்கிறேன்.

முதலில் உற்சாகமாய் புது இளைஞர்களிடமிருந்து கடிதங்கள் வந்தன.

• •

பிரபலமானவர்களில் ஞானி, சுந்தரராமசாமி மட்டுமே பணம் அனுப்பியுள்ளனர்.

• •

பிரம்மராஜனின் நண்பர்கள், சிவக்குமார், ரூமி போன்றோருக்கு வரஇயலாத நிலை என்று எழுதியிருந்தனர்.

பிரம்மராஜனுக்கும் சற்று உடல் நலமில்லை. எனவே Workshopஐ ஒத்திப்போட முடியுமா என்று கேட்டு இன்று எழுதியிருக்கிறார். ஆனால் Hall advance, etc போன்ற முன்னேற்பாடுகள் முடிந்துவிட்ட நிலையில் அது சாத்தியமே இல்லை என்று எழுதியிருக்கிறேன்.

• •

இந்த நிலைமையில், புதிய ஆர்வமான இளைஞர்களை வரச் சொல்லிவிட்டு ஏமாற்றி அனுப்ப மனம் இடந்தரவில்லை.

ராஜமார்த்தாண்டன், சுரேஷ்குமார், நந்தலாலா ஆகியோர் வரவிருக்கிறார்கள். ராஜமார்த்தாண்டன் தேக்கநிலை பற்றி கட்டுரை வாசிக்கிறார்.

நீங்கள் அவசியம் வரவேண்டும். அல்லது நான் பெருத்த அவமானமும், ஏமாற்றமும் அடைய நேரிடும். அதனால் பணத்தைப் பற்றியோ, வேறு எதைப் பற்றியும் கவலைப்படாது நீங்கள் அக்டோபர் 20யன்றே வந்துவிடுங்கள்.

• •

சுகுமாரனை சந்திக்க முடிந்தால் அவரையும் அழைத்து வாருங்கள். முடிந்தால் கட்டுரையுடன் வரச்சொல்லவும்.

• •

எந்தக் காரணம் கொண்டும் வராதிருந்து விடாதீர்கள்.

என்றும் உங்கள்

கலாப்ரியா.

• • •

கடிதம் - 9

எழுதியவர் : கவிஞர் கலாப்ரியா

12.2.03

கலாப்ரியா, 4/19, மேற்குத்தெரு
இடைகால் 627804

அன்புமிக்க நம்பி,

வணக்கம்.

தேவமகள் இலக்கியப் பரிசு பெற்றமைக்கு மனங்கனிந்த வாழ்த்துக்கள்.

நேற்று திரு நித்திலன் – கோவையிலிருந்து தொலைபேசியில் பேசினார். விழாவுக்கான முன்னேற்பாடுகள் நடைபெற்றுவருவதாக. உங்களிடமிருந்து தகவல் எதுவும் இல்லை என்று கூறினார். உங்கள் ஒப்புதலையும், உங்கள் Photo, Biodata வையும் உடனடியாக அவருக்கு அனுப்பவும். உங்களைத் தொடர்பு கொள்ள முடியவில்லை என்பதால் என்னிடம் கூறினார். நீங்கள் உடனடியாக அவருக்கு எழுதுங்கள். தொலைபேசி எண் 0422 – 2591242. நீங்கள் ஊரில் இல்லையென்றால் பகவதியிடம் என்னைத் தொடர்புகொள்ளச் சொல்லவும்.

பகவதிக்கும் குழந்தைகளுக்கும் எங்கள் அன்பு.

என்றும் உங்கள்

கலாப்ரியா.

- தொடரும் ■

சிறுகதை

● நாணற்காடன்



கோகுல்

டுர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்....பீப்பீ....டுர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்...

மிக அனாயசமாக வண்டி ஓடிக்கொண்டிருக்கிறது. புகை கக்காத பைக் வண்டி. நேராக ஓடிக்கொண்டிருக்கும் அந்த வண்டி சட்டென்று ஒரு ட வளைவில் திரும்பி மேல் நோக்கி விரைகிறது. இரண்டடி உயரத்திற்குப் பயணித்த அது சடாரெனத் திரும்பி கீழ் நோக்கி வருகிறது. மறுபடியும் அதே ட வளைவுக்கு உடன்பட்டு தரைக்கு வந்து சேர்கிறது. இப்போது அது எல்லா இடங்களிலும் தனக்கான பாதையை உருவாக்கிக்கொண்டு ஓடுகிறது. அல்லது அதன் சக்கரங்கள் போகும் வழியெல்லாம் பாதையாகிவிடுகிறது. டுர் டுர் சத்தமும், பீப்பீ சத்தமும் அந்த அறையின் சுவர்களில் பட்டுத் தெறித்துக் கீழே விழுந்துகொண்டிருக்கின்றன.

சுவரோரம் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிளின் டயர் வளைவில் இப்போது ஓடிக்கொண்டிருக்கிறது அந்த வண்டி. அப்படியே சறுக்கி கம்பி வழியாகக் கீழிறங்கி இடது பெடலில் பயணித்து மேலேறி கேரியருக்குத் தாவி நின்று நிதானித்து பின் சக்கரம் வழியாகக் கீழிறங்குகிறது. பின் சக்கரம் ரொம்பவும் தேய்ந்துபோயிருக்கிறது. தாத்தாவின் மிதிவண்டி இது. டுர்ர்ர்ர்...டுர்ர்ர்ர்... பீபீபீபீ.........

அடுத்ததாய் கட்டிலின் குத்துக்கால் மீதேறி மூங்கில் சட்டங்களில் பயணிக்கிறது. பாட்டி தூங்கிக்கொண்டிருக்கிறாள். பாட்டியின் தூக்கம் கலைந்துவிடாதபடி டுர்...பீப்பீ... சத்தம் மங்கி ஒலிக்கிறது.

ஒரு இருமல் வர வண்டி பிரேக்கிட்டு நிற்கிறது. இரண்டு நாட்களாகவே அவ்வப்போது குத்திக் குத்தி இருமல் வந்துகொண்டுதான் இருக்கிறது. ஆனாலும், தாங்கிக்கொள்கிறாள் ஓவியா. சொன்னால் கேட்பதேயில்லை. மிட்டாய்களைத் தின்று தின்று கடைவாய்ப்பல் ஒன்று சொத்தை விழுந்துவிட்டது. அதிலும் ஜிகினா பேப்பர் சுத்திய சாக்லேட்டுகள் என்றால் அத்தனை பிரியம் அவளுக்கு.

கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக்கொண்டால் தேவலாம் என்றிருக்கும்போல. பைக் பொம்மையை டிவி ஸ்டேண்டு மேல் கிடத்திவிட்டு வாசற்படியில் வந்து அமர்கிறாள். அக்கம்பக்கத்தில் எந்த வீடுகளும் இல்லை. அதோ தூரத்தில் தெரிகிறதே ஒரு ஓட்டுவீடு. அந்த வீடும் இங்கிருந்து இருநூறு அடி தூரத்தில் இருக்கிறது. அதிலும் மனிதர்கள் இருப்பதற்கான அறிகுறிகள் எதுவும் இப்போது தென்படவில்லை. இருமல் மெள்ள மெள்ள மட்டுப்படுகிறது. அப்பாடி என்றிருக்கிறது ஓவியாவுக்கு. அடுத்ததாய் என்ன விளையாடுவது என்ற யோசனை அவளுக்குள் எட்டிப்பார்த்திருக்க வேண்டும். வாசற்படியில் உட்கார்ந்தவாறே அறைக்குள் திரும்பிப் பார்க்கிறாள்.

சிதறிக்கிடந்த விளையாட்டு பொம்மைகளுக்கு நடுவே நீள்வட்ட இரயில்பாதையில் இரண்டு பெட்டிகள் பிணைக்கப்பட்ட இரயில் எஞ்சின் வளைந்த பாதையில் நின்றிருக்கிறது. சேலத்திலிருக்கும் ராஜா மாமாதான் இந்த இரயில் வண்டியை

வாங்கிக் கொடுத்தார். வாங்கிக் கொடுத்த புதிதில் இந்த வண்டியைப் பார்த்தாலே கண்களை இறுக்கி மூடிக்கொண்டு அழத் தொடங்கிவிடுவாள் ஓவியா. அந்த நீள்வட்டப் பாதையில் அது நகர்ந்து செல்வதைப் பார்த்தாலே பூச்சி ஊர்வதுபோல் அவளுக்கு அருவெறுப்பாக இருந்திருக்கும் போல. அத்தனை பயம் சூழ்ந்துகொள்ளும் அவளை. இப்போது பரவாயில்லை. கொஞ்சம் கொஞ்சமாக அதனோடு பழகிக்கொண்டுவிட்டாள். இப்போதெல்லாம் இரயில் பூச்சியைப் பார்த்துப் பயப்படுவதில்லை.

முன்பக்க சக்கரங்கள் உடைந்துபோய் பொக்கையாக இருந்த கார் பொம்மை, பள்ளத்துக் கருப்பணார் கோயில் கிடாவெட்டுக்கு வந்திருந்தபோது கோபால் சித்தப்பா வாங்கிக் கொடுத்தது. அந்தக் கார் வண்டி வீட்டிற்குள் போகாத இடமில்லை. டிவி ஸ்டேண்டின் ஒரு கால் வழியாக மேலேறி டிவி பெட்டியின் தலையில் ஊர்ந்து மற்றொரு கால் வழியாக கீழிறங்கி, பக்கத்திலிருக்கும் மேசை மீது ஏறியிறங்கி, அப்படியே திரும்பி சமையலறைக்குள் நுழைந்து செம்பு அண்டா, பிளாஸ்டிக் குடங்கள் மீதெல்லாம் பயணப்பட்டு, குக்கர் கடந்து, கேஸ் சிலிண்டர் மீதூர்ந்து........

“அடடடா... செத்த நேரம் கம்முனு இருக்கறதில்ல....” பாட்டி செல்லமாய்க் கடிந்துகொள்வாள். பெரும்பாலான நேரங்கள் படுத்தே கிடப்பாள் பாட்டி. முதுமையும் நோய்மையும் கொண்டிருக்கும் பாட்டி ஓவியாவை நெருங்க விடுவதில்லை. ஆனாலும், பாட்டிக்கு ஓவியா ரொம்பவும் செல்லம்.

எங்கோ ஊருக்குப் போன அம்மா கலைடாஸ்கோப் வாங்கி வந்திருந்தாள். அதை வைத்துக்கொண்டு என்ன விளையாடுவது? ஓரிரு முறை அதன் முனையில் கண்ணைச் சுருக்கிப் பார்த்ததோடு சரி. அதன் பின் அதைத் தொடுவதே இல்லை ஓவியா.

பீப்பீ என இசையெழுப்பும் செருப்பும் விளையாட்டுப் பொருளாகிவிட்டது இப்போது. நடை பழகும் வயதில் போட்டிருந்தது. இப்போது அதைக் காலில் அணிந்துகொள்ள முடியாது. முன்பைவிட நன்றாகவே வளர்ந்துவிட்டாள். ஷூ போட்டுக்கொண்டு பள்ளிக்குப் போகிறாள். ஆனால் அந்தச் செருப்பைக் கையில் பிடித்து அழுத்தும்போது பீப்பீ சத்தம் வருமே... அந்தச் சத்தம் ஓவியாவுக்கு மிகவும் பிடிக்கும். ஒரு செருப்புதான் இருக்கிறது. இன்னொன்று எப்படியோ தொலைந்துவிட்டது.

மொக்கு உடைந்த கலர் பென்சில்கள், சில துண்டுக் காகிதங்களில் கலர் கலர் கிறுக்கல்கள், செல்ஃபோன் பொம்மை, உடைந்த டிவி ரிமோட்.. எனச் சிதறிக்கிடந்த விளையாட்டுப் பொருள்களை நோட்டமிட்ட ஓவியாவுக்குப் பிடித்தமானதாய் எதுவுமே தென்படவில்லை. வெறுமனே எப்படி விளையாடுவது? எதாச்சும் பொருள் தேவையாயிருக்கிறது விளையாடுவதற்கு.

“எல்லாம் விளையாடிட்டோம். பைக்கும் ஒட்டி முடிச்சாச்சு. தாத்தா வேற செத்துப்போய்ட்டாங்க.... தாத்தாதான் எப்பவும் எங்கூட வெளையாடுவாரு.. அவரு ஏன் செத்துப்போனாரு? அறிவே இல்ல தாத்தாக்கு... அப்பா வரும்போது இன்னிக்கி என்ன தீனி வாங்கி வருவாரு? அம்மா எப்ப வருவாங்கன்னு தெரியல? சீக்கிரம் வாங்கம்மா.. மோட்டு பத்லு பார்க்கலாம்.” மனசுக்குள் என்னென்னவோ ஓடிக்கொண்டிருந்தது அவளுக்கு.

ஓவியாவின் அம்மா கவிதா காலையிலிருந்து வீட்டில்தான் இருந்தாள். அவளது புதுப்பட்டி மாமாவுக்கு உடம்பு சரியில்லை என போன் வந்ததும் கிளம்பிவிட்டாள். ஓவியாவையும் இழுத்துக்கொண்டு போயிருக்கலாம்தான். அவள் என்ன வரமாட்டேன் என்றா அடம்பிடிக்கிறாள்? பஸ்ஸில் போவதென்றால் ஓவியா உடனே “நான் முந்தி” என வந்து நின்றுவிடுவாளே. நாளை பள்ளிக்கூடம் இருப்பதால் அலைக்கழிக்க வேண்டாமென்றுதான் ஓவியாவை வீட்டிலேயே மாமியார் பொறுப்பில் விட்டுவிட்டுப் போனாள். புதுப்பட்டி இருபது கிலோமீட்டர்தான். மூன்று மணி நேரத்தில் போய்விட்டு என்ன ஏது என விசாரித்துவிட்டு வந்துவிடலாம் என்ற நினைப்பில் கிளம்பிப் போனாள் அவள்.

தனித்த வீடு. தூரத்தில் தெரியும் அந்த ஓட்டு வீட்டைத்தவிர அக்கம்பக்கம் வீடுகள் எதுவுமில்லை. சுற்றிலும் காலி வீட்டு மனைகள். இனிதான் இங்கு வீடுகள் முளைக்க வேண்டும்.

ஓவியாவுக்குத்தான் இந்தத் தனிமை வாட்டியெடுக்கிறது. இந்த விளையாட்டுச் சாமான்கள் மீதும் விருப்பங்கள் குறைந்துகொண்டிருக்கின்றன. கொஞ்ச நேரம் அவற்றோடு மல்லுகட்டி விளையாடுவாள். சற்றைக்கெல்லாம் அப்படியே தளர்ந்துபோய் விடுவாள். இந்த விளையாட்டுப் பொம்மைகள் உயிரற்றவை என்பதைப் புரிந்துகொள்ளும் பக்குவம் வந்துவிட்டது அவளுக்கு.

ஆனாலும் எதாவது விளையாடித்தான்

இன்றைய இந்தப் பொழுதைப் போக்கியாக வேண்டும்.

உள்ளே சென்று அறைமுழுதும் நோட்டமிட்டாள். வீட்டு மூலையில் ஒரு லிட்டர் பிளாஸ்டிக் தண்ணீர் பாட்டில் ஒன்று காலியாகக் கிடந்தது. அதை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வெளியே வந்தாள். வாசலில் ரோஜாச் செடி இரண்டு மொக்குகள் விட்டிருந்தது. மாதுளையின் கிளையில் ஒரு தேன்சிட்டு உட்கார்ந்திருந்தது. பாகல் கொடியில் மஞ்சள் பூக்கள் அங்கங்கே விரிந்திருந்தன. வேலியோரம் கோவைப்பழங்கள் சிவந்திருந்தன. ஓவியாவைவிட கொஞ்சம் உயரமாக வளர்ந்திருந்த கொய்யா மரத்தடியில் இரும்பு வாளியில் தண்ணீர் நிறைந்திருந்தது. ஒரு பழுத்த கொய்யா இலை அந்தத் தண்ணீரில் மிதந்துகொண்டிருந்தது. ஓவியாவும் அவளது அம்மாவும் சேர்ந்துதான் இந்தச் செடிகளுக்குத் தண்ணீர் விடுவார்கள். செடிகள் பச்சை பிடித்திருக்கின்றன.

மறுபடி வீட்டிற்குள் ஓடிப்போய் ஒரு டம்ளரை எடுத்துக்கொண்டு வாளியருகே வந்து அமர்ந்த ஓவியா தண்ணீர் பாட்டிலின் மூடியைக் கழற்றி வாளி நீரில் மிதக்கவிட்டாள். ஒவ்வொரு டம்ளராய் தண்ணீர் மொண்டு பாட்டிலை நிரப்பத்தொடங்கினாள். சிந்தி சிந்தி ஊற்றினாள். பாட்டில் மூடி வாளி நீரின் அலைக்குத் தக்கவாறு மிதந்து மிதந்து அலைந்துகொண்டிருந்தது. அவளது குட்டைப்பாவாடை மெள்ள மெள்ள ஈரமாகிக்கொண்டிருந்தது.

ஏழெட்டு டம்ளருக்குப்பின் அந்த பிளாஸ்டிக் பாட்டில் நிரம்பியிருந்தது. வாளியில் மிதந்துகொண்டிருந்த மூடியை எடுத்து பாட்டிலை இறுக்க மூடினாள். அந்தப் பிஞ்சுவிரல்களின் இறுக்கம் அவ்வளவு இறுக்கமாக இல்லாமல் மிகவும் மென்மையாக இருந்தது.

ஒரு லிட்டர் எடை கொண்ட அந்த பாட்டிலைத் தூக்கி இடுப்பில்பொருத்திக்கொண்டு அறைக்குள் திரும்பினாள். கட்டிலில் பாட்டியின் தலைமாட்டில் கிடந்த துண்டை எடுத்து அந்த பாட்டில் மேல் போர்த்திவிட்டபடியே மீண்டும் வாசற்படிக்கு வந்து உட்கார்ந்துகொள்கிறாள்.

பாட்டிலை மடியில் கிடத்தி "அழாதடா செல்லம்... பப்பு சாப்புடு...இந்தா" என்றபடி கை விரல்கள் குவித்து அந்த பாட்டிலுக்குச் சோறு ஊட்டிவிட்டாள். முகம் துடைத்துவிட்டு "குளிக்கறயா செல்லம்...." என்றபடி அதை வாஞ்சையோடு அணைத்தபடி வாளியருகே வருகிறாள். ஒரு டம்ளர் நீர் மொண்டு குளிப்பாட்டுகிறாள். ஓவியாவின் வாஞ்சை பாட்டிலின் தலையிலிருந்து கால்வரை நனைந்து வழிகிறது. சோப்பு போடுவதுபோல் பாட்டிலைத் தடவித் தடவி விடுகிறாள். அடுத்த டம்ளர் நீரில் பாட்டில் குளித்து முடிக்கிறது.

மீண்டும் வாசற்படிக்கு வந்தமர்ந்துகொண்டு, பாட்டிலை மடியில் கிடத்தி மிக மிருதுவாகத் துவட்டிவிடுகிறாள். தூரத்தில் ஹாரன் சத்தம் கேட்கிறது.

"ஐ...அப்பா வந்தாச்சு..." என்றபடி அந்த பாட்டிலை எடுத்துப்போய் அறை மூலையில் நிற்கவைத்து துண்டு போர்த்திவிட்டு "தூங்கு செல்லம்...." என்று கூறிவிட்டு வாசல் கடந்து அப்பாவின் வண்டி நோக்கி ஓடுகிறாள்.

...

"சவிதா.. இது யாரு?"

"எந்தம்பி."

"உன் சொந்த தம்பியா?"

"ஆமா... நானும் இவனும் எங்கம்மா வயித்தில இருந்துதான் வந்தோம். எனக்கப்பறமா இவன் வந்தான்."

"உந்தம்பி பேரு என்ன?"

"கௌதம்."

"நானும் அவன தம்பின்னு கூப்டட்டுமா?"

"ம்ஹீம்.... இவன் எனக்கு மட்டுந்தான் தம்பி."

அந்தப் பள்ளிக்கூடத்தின் மதிய உணவுப்பொழுதின் களேபரச் சத்தங்களுக்கு நடுவில் ஓவியாவின் பதிலற்ற அமைதிக்குள் பேரிரைச்சலுக்கான முதல் அலை வீசித் தொடங்கியது.

டிபன் பாக்ஸிலிருந்து பிடி சோற்றை வாயில் திணித்தபடி,

"ஓவியா...உனக்குத் தம்பி இல்லையா" என்றாள் சவிதா.

"ம்....இருக்கான்..."

"எங்க இருக்கான்...."

"வீட்ல இருக்கான்."

"வீட்ல என்ன பண்றான்?"

"வீட்டு மூலைல தூங்கிட்டிருக்கான்."

"அவன் பேரு என்ன?"

மென்றுகொண்டிருந்த இட்லி விள்ளலை அதக்கியவாறு வெடுக்கெனச் சொன்னாள் ஓவியா..

"கோகுல்." ■

● பிருந்தா சாரதி

பச்சையம் என்பது பச்சை ரத்தம்

ஒரு மரம் செய்யும் வேலையை உலகில் வேறு யாரும் செய்ய முடியாது. நமக்கான சுவாசக்காற்றை அதுதான் தயாரித்துத் தருகிறது. தாவரங்கள்தான் நமக்கான உணவைத் தயாரிக்க முடியும். மனிதனுக்கும் விலங்குக்கும் தாவரங்கள்தானே உணவு. தாவரங்களை உண்டு வாழும் விலங்குகள் இருந்தால்தான் மாமிச உண்ணிகளும் உயிர்வாழ முடியும். இந்த அடிப்படையைப் புரிந்துகொண்டால் மரங்களை, தாவரங்களை, புல்லை, பூண்டை எல்லாவற்றையும் நாம் நேசிக்கத் தொடங்கிவிடுவோம்.

"பச்சையம் என்பது பச்சை ரத்தம்" - இந்தச் சூழலியல் சிந்தனையோடு புனையப்பட்ட கவிதைகள்.



*

ஆயிரம் கால் மண்டபத்தையா
ஒளித்து வைத்திருந்தாய்
ஆலமரமே சிறு விதைக்குள்?
*

நிமிர்ந்து வளர்ந்ததுதான்
தேக்குமரம் செய்த தவறு
கோடரியுடன் வியாபாரிகள்.
*

மரத்தடியில் கடவுளா
மரமே கடவுள்தான்
மூச்சுக் காற்றும் அதன் அருள்.
*

உணவு உடை உறையுள்
இன்னும் வேண்டுவன கேள்
வரம் தரும் மரம்.
*

உணவு தரும் மரத்திற்கு
வயிற்றைக் கருப்பையாய்
வழங்கும் பறவை.
*

மரத்திடம் கையசைத்தபடியே
உ...தி...ர்...கி....ற...து...
சருகு.
*

யாருக்குச் சொந்தம்?
வேலி தாண்டி
விழும் நிழல்.
*

மரம் ஏற்றிச் செல்லும் லாரி
என்ன நினைப்பான்
பாரி?
*
தாத்தாவின்
இரண்டு கைகள்
கலப்பை மண்வெட்டி.

*
கிணற்றை இரைத்த சால்
துருப்பிடித்த பின்தான்
நடந்தது பத்திரப் பதிவு.
*
கண்ணுக்குத் தெரியாத
கோடரி
மரபணு மாற்றம்
*
ஆறாம் அறிவின்
உயரம்
போன்சாய் மரம்.
*
இதயம் இல்லாத மனிதன்
விதைக்கிறான்
விதை இல்லாத கனி.
*
எல்லாச் சாயங்களும்
வெளுத்துவிடும்
பச்சை பட்டுவிட்டால்.
*
பூத்துக் குலுங்கும் பூமியைப்
பூட்டுகிறது நெகிழி
மலரஞ்சலிக்காவது பூப்பூக்குமா?
*
பூப்பறி
பூச்செடியைப் பறிக்காதே
பூமியின் வேண்டுகோள்.
*

ஆயிரம் ஆண்டு மரத்தை
வெட்டுகிறாய்
நூறையே தொடமுடியாத நீ.
*

(வெளிவர இருக்கும் படைப்புப் பதிப்பக வெளியீடான இயக்குனர் பிருந்தா சாரதி எழுதிய 'பச்சையம் என்பது பச்சை ரத்தம்' ஹைக்கூ தொகுதியிலிருந்து....)

நூல் விமர்சனம்

● பா.செல்வகுமார்

ஓடிக்கொண்டே தன்னைக் கலைக்கும் நதி

குறத்தியம்மன் - மீனா கந்தசாமி அவர்களால் எழுதப்பட்ட ஆங்கில நாவல். அணங்கு பதிப்பில் இதனைத் தமிழில் மொழிபெயர்த்தவர் பிரேம். தஞ்சாவூர் மாவட்டம் மிகுந்த செழுமையான பாசன வசதி மிகுந்து, விளைநிலங்கள் அதிக விளைச்சலைத் தருபவையாக இருந்தன. தமிழ்நாட்டின் மொத்த நெல் உற்பத்தியில் முப்பது சதவிகித விளைநிலங்கள் தஞ்சை மாவட்டத்தின்கீழ் இருந்தன. தஞ்சையில் நிலங்களில் வேலை செய்யும் வேளாண் தொழிலாளர்கள் பலர் இருந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் பள்ளர், பறையர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அங்கிருந்த நிலக்கிழார்கள் அவர்களை அடிமையாக நடத்திவந்தனர்.

குறத்தியம்மன் நாவலானது தஞ்சாவூர் மாவட்டத்தோடு அமைந்துள்ள நாகப்பட்டினம் மற்றும் அதைச் சுற்றியுள்ள ஊர்களைக் களமாகக் கொண்டது. குறிப்பாக இரிஞ்சியூர், கீழ்வெண்மணி, பொறையூர், கோரையாறு, காரைக்கால் போன்ற ஊர்கள் வெளிப்படையாகத் தெரியும் வண்ணமாக அமைந்துள்ளன. மலேசியா, சிங்கப்பூரில் வேலைசெய்து திரும்பி வந்தவர்கள் வழியாக வந்த கம்யூனிஸச் சிந்தனைகள் மக்கள் மத்தியில் அங்கு பரவலாகப் பரவியிருந்தன.

1965இல் கீவளூர்ச்சேரி மக்கள் தங்கள் தெரு வழியாகத் தேர் செல்ல மறுக்கப்பட்டதற்குத் தேரினை உடைக்கின்றனர். இந்த விழிப்புணர்ச்சி கூலி விவசாயிகளுக்கும் சென்றடைந்து அவர்கள் உழைப்புக்கேற்ற ஊதியத்தைக் கேட்கின்றனர். ஏற்கெனவே கொதித்துப்போயிருந்த பண்ணையார்கள் இப்போது நெல் உற்பத்தி சங்கம் என்ற பெயரில் அவர்களை அடக்கத் திட்டமிடுகின்றனர். கூலி விவசாயிகள் கம்யூனிஸ்டு கட்சிப் பக்கமாக நிற்கிறார்கள். இறுதியில் இப்போராட்டம் 44 விவசாய மக்களைக் கூண்டோடு கூண்டாக ராமையா என்பவரின் குடிசை வீட்டில் தீ வைத்து எரிக்கும் நிலைக்குச் செல்கின்றது. இதில் அரசியல்வாதிகள், நீதிபதிகள், சட்டம், நீதிமன்றம் நடந்துகொண்ட முறைகள் என்று இக்கதைக்களப் பின்னணி அமைகிறது.

மெட்ராஸ் பகுதியில் கிராமப்புறப் பயங்கரவாதம் பரவியது; விவசாயக் கூலிகள் விளைச்சலில் அதிகப் பங்கு கேட்டதால்

நெல் உற்பத்தி விவசாயிகளுக்கும் கூலித்தொழிலாளிகளுக்கும் இடையில் உருவான மோதலில் கடுமையான விளைவு. அதனைப் பற்றிய குறிப்பு அவ்வளவுதான். வெற்றிடமாக விடப்பட்டவைகளை நிரப்பத்தான் இந்தக் கதையை நான் சொல்கிறேன் (ப. 30) என்பதன் மூலம் இச்சம்பவம் எவ்வாறு எடுத்துரைக்கப்பட்டது மற்றும் அது எவ்வாறு புரிந்துகொள்ளப்பட்டது என்பதும் முக்கியமானது ஆகும்.

கூலி விவசாய மக்கள் நடத்திவந்த இரவுநேரக் குடிசைப் பள்ளியை நாயுடுகள் நிறுத்தச் சொன்னார்கள். மக்கள் மறுத்தனர். ஆதிக்கச்சாதியினர் எலும்புத்துண்டுகளை வீசி காவல்துறையை அனுப்பினர். மக்கள் காவல்துறையை அடித்து உதைத்து விரட்டினர். மறுநாளே ரிசர்வ் படை வந்து இறங்கியது. முக்கியமான இரண்டு பேரை அழைத்துச் சென்று சிறையிலடைத்தது. இப்படி புகைந்துகொண்டே வந்த பிரச்சனை முற்றி இறுதியில் நடந்தேறியதுதான் 5 ஆண்கள், 20 பெண்கள், 19 குழந்தைகளைப் பலிகொண்ட அந்தத் திட்டமிட்ட படுகொலை.

சமூகத்தில் மேம்பாடு அடைய நினைக்கும் மக்கள், பண்ணையார்களால், சாதியப் பாகுபாடுகளால் மீண்டும் மீண்டும் கீழே தள்ளப்படுவது இங்கு முக்கியமானது. மேலும் இனவேற்றுமையும் இங்கு நீரில் பூத்த நெருப்பாக இருக்கிறது. இதைவைத்து அரசியல் இலாபமடைய நினைப்பவர்கள் அம்மக்களைக் காப்பாற்றுவதாகக் கூறுகின்றனர். உண்மையில் அரசியலானது அதிகார வர்க்கத்தோடும், பொருளாதார வர்க்கத்தோடும் கைகோர்த்துக்கொண்டு மீண்டும் தொழிலாளர்களை வஞ்சிக்கிறது. இறுதியில் ஒரு பெரிய கலவரத்திற்கு வழிவகுத்து, விவசாய மக்களைக் கூண்டோடு அழிக்கிறது. சட்டமும் நீதியும் அம்மக்களுக்கு எட்டாக் கனிகளாகிவிடுகின்றன. **இந்தப் பகுதி மக்களின் வாழ்க்கை, உற்பத்தி உறவுகள் சார்ந்த நிலவுடைமை அமைப்பின் அடிப்படையில் இயங்குவதில்லை. அது சாதி அமைப்பின் அடிப்படையில் இயங்குகிறது (ப. 73)** என்னும்போது இன்னும் விரிவாக நம்மால் அனுமானிக்க இயலுகிறது. இந்நாவல் சாதியக் கட்டுமானத்தைக் காத்தல் என்ற அளவில் அவர்கள் விவசாயக் கூலிகளின் இரத்தத்தைக் குடித்தார்கள், அவர்களது வர்க்கப் போராட்டத்தைத் தடுத்து ஒரே கொடுமையைத் திரும்பத் திரும்பச் செய்தார்கள் என்பதையும் இங்கே கவனப்படுத்திக் கொள்ளலாம்.

விவசாயக் கூலிகள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்படும் போதெல்லாம் காவல்துறையினரிடம் தஞ்சம் அடைகிறார்கள். பாதுகாப்பு அளிக்க வேண்டிய அவர்களோ பண்ணையார்களிடம் பணம் வாங்கிக்கொண்டு, அரசுக்கு எதிராக மக்கள் நிற்பதாக பொய் வழக்குப் போட்டு அவர்களின் போராட்டத்தையும் உரிமையையும் திசைதிருப்பி அவர்களைக் குற்றவாளிகளாகச் சமூகத்திற்கு அறிமுகப்படுத்துகிறார்கள். சொத்து என்பது விவசாயிகளினால் உருவானது என்பதைத் திசைதிருப்புபவர்கள், அரசின் அதிகாரத்தைத் தங்களுக்கானதாக மாற்றிக்கொள்பவர்கள், போராடும் மக்களை அரசுக்கு எதிராகத் திருப்புபவர்கள், தங்களுக்குப் பாதுகாப்பாகக் காவல்துறையினரை விலை கொடுத்து வைத்துக்கொள்பவர்கள்.. நிலக்கிழார்கள்.

போராட்டத்தில், **மக்கள் தலைவர் ஒருவரைக் கொன்ற பண்ணையார் அவர் உடலைக் காணாமல் அடித்துவிடுகிறார். பண்ணையார்களின் பலம் அவர்களுடைய துப்பாக்கிகளில் இருந்தது. துப்பாக்கி வைத்திருக்கும் ஒரு மிராசுதாரரை நெருங்குவதற்கு முன் குறைந்தது ஆறு விவசாயிகளாவது செத்துவிழ வேண்டியிருக்கும் என்பது கட்சிக்காரர்களுக்குத் தெரியும் என்பதைப் பண்ணையார்கள் தெரிந்து வைத்திருந்தனர்.** விவசாயிகளின் கூக்குரலுக்குப் பணிந்து போவதை அவமானமாகக் கருதுகிறார்கள்.

அரசியல் தலைவர்கள், விவசாயக் கூலிகளின் போராட்டத்தை எதிர்கொள்பவர்களாக அல்லது அதற்கு உடனடியாக விளைவுகளைத் தெரியப்படுத்த முடியாதவர்களாக வந்து போகிறார்கள்.

கோபாலகிருஷ்ண நாயுடு, மகானுக்கு உரிய உயர்ந்த பண்புகள் எல்லாம் ஒன்றிணைந்து தனக்குள் இருப்பதை உணர்ந்து கொண்டவராகவும், நாகப்பட்டினம் நிலச்சுவாந்தார்களுக்கெல்லாம் ஒரு தந்தை போலத் தன்னை நினைத்துக் கொண்டதுடன் அவர்களின் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றிவைக்கும் பெரும் பணியையும் தானே ஏற்றுக் கொண்டவராகவும் இருப்பவர்.

நாவலில், **காந்தியிடம் இருந்த அகங்காரம், தன்னை உத்தமர் என்று நம்பும் குணம், அத்துடன் மனிதகுலத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற சிறிய ஆசை என எல்லாவற்றையும் தனக்குள் வரித்துக்கொண்ட ஒருவர்தான் கோபாலகிருஷ்ண நாயுடு (ப.55)** என்று அறிமுகப்படுத்தப்படுகிறது.

எனினும் இவரைப் பற்றிய அறிமுகம் நாவலின் முகவுரைப் பகுதியிலேயே கிடைத்துவிடுகிறது. அதில் முதலமைச்சருக்குக் கோபாலகிருஷ்ண நாயுடு எழுதிய கடிதம் தரப்பட்டுள்ளது. 1968ஆம் ஆண்டில் மே மாதம் ஒன்றாம் நாளன்று அக்கடிதம் 'நெல் உற்பத்தி விவசாயிகளின் துயர்களைக் களைய உடனடி நடவடிக்கை எடுக்கக் கோரி மாண்புமிகு மெட்ராஸ் மாநில முதலமைச்சர் அவர்களுக்கு விண்ணப்பம்' என்னும் தலைப்புடன் அப்போது இருந்த முதலமைச்சரான அறிஞர் அண்ணா அவர்களுக்கு எழுதப்பட்டுள்ளது.

நான்கு பாகம் கொண்ட இந்நாவலில், இரண்டாம் பாகம்: நாற்றாங்கால் என்னும் பகுதியில் உள்ள 3. கழுத்தறுக்கும் காம்ரேட்டுகள் என்னும் தலைப்பின்கீழ் அமைந்த பகுதியில் இருந்தே கோபாலகிருஷ்ண நாயுடு என்பவரின் பாத்திரம் என்ன என்பது தெளிவாகத் தொடங்குகிறது. இப்பின்னணியிலிருந்தே அந்த முகவுரைக் கடிதச் செய்திகளும் நமக்கு கோபாலகிருஷ்ண நாயுடு என்பவர் யார் என்னும் விரிவைத் தருகிறது. விவசாயத் தொழிலாளர்களை ஒடுக்க நினைத்த மிராசுதாரர் என்பதும் விவசாயத் தொழிலாளர்கள் 44 பேர் இறப்பதற்குக் காரணமானவர் என்பதும் இதன் பின்னணியில் சொல்லப்படுகிறது.

கோபாலகிருஷ்ண நாயுடுவை முழுமையாக அறிமுகப்படுத்தும் விதமாகவும், கிண்டலாகவும் திரைப்படத்தில் வரும் வில்லனுக்கு விஞ்சியவனாகக் காட்சிப்படுத்தும் பகுதியும் கவனிக்கத்தக்கது.

புழுக்கம் நிறைந்த ஒரு ஜூலை மாதப் பிற்பகல் நேரம்; கோபாலகிருஷ்ண நாயுடுவின் பளபளக்கும் பிளஷர் கார், ஏரிகளையும் ஆறுகளையும் பச்சைபசேலென்ற வயல்களையும் தென்னந் தோப்புகளையும் கடந்து ராமுத்தேவரின் அரண்மனை போன்ற மாளிகை முன் வந்து நிற்கிறது. திரைப்படத்தின் வைட் ஆங்கிள் காட்சியில் சாம்பல் நிற அம்பாசிடர் காரின் கதவு திறப்பது தெரிகிறது. முதலில் கோபாலகிருஷ்ண நாயுடுவின் தங்க மோதிரம் அணிந்த வலதுகை பார்வையில் படுகிறது. அதனைத் தொடர்ந்து தூசுதும்பு படியாத வெள்ளை வெளேரென்ற பருத்தி உடையணிந்த அவரது முழு உடம்பும் காட்சியளிக்கிறது. காரைவிட்டு இறங்கி வீட்டிற்குள் போகும் காட்சி உங்கள் கண்முன் தோன்றும்போது பின்னணி இசையுடன் ஒலிக்க வேண்டிய பாடல் இது: கோடியிலே நீ ஒருவன் தங்கமே / குறையாத வீரம் கொண்ட சிங்கமே / தேடி வந்து பகை முடிக்கும் திலகமே / தீராத புகழ்பாடும் உலகமே (ப.56), இது அவர்களின் அதிகாரத்தையும், ஆணவத்தையும் கீழிறக்கும் விதமாகச் செய்யப்படும் பகடி எனவும் கொள்ளலாம்.

கோபாலகிருஷ்ண நாயுடு தன்னுடைய பேச்சால்அனைவரையும்கட்டிப்போடக்கூடியவர். அதாவது அவரது பேச்சு அனைவரையும் மிரட்டுவதாக இருக்கும். சாதிப்பெருமை, பண்ணையார் பெருமை, ஊரின் கட்டுமானம், விவசாயக் கூலிகளை ஒடுக்க நினைத்தல், தன் சாதியிலேயே தான்தான் உயர்ந்தவன் என்னும் கர்வம் தொனிப்பதாக இருக்கும்.

விவசாயக் கூலிகள் தங்களுக்கு எதிராகத் திரும்பியதற்குக் கம்யூனிஸ்ட்களே காரணம் என்னும் கோபாலகிருஷ்ண நாயுடு அதற்கான வாதத்தைத் திறம்பட முன்வைப்பவராகிறார். கம்யூனிஸ்டு ஒருவன் இறந்தாலும், ஒருவனை ஒருவன் அடித்துக் கொன்றாலும் கம்யூனிஸ்டுகாரர்கள் தங்களைத்தான் குற்றம் சுமத்துகிறார்கள். அவர்களுக்குச் சாட்சி சொல்ல ஆறும் ஊரும் ஓடி வருவதாகவும், தங்களுக்கு அப்படி யாரும் இல்லை என்றும் திரித்துக் கூறக்கூடியவராக இருக்கிறார். இந்தப் பேச்சினால்தான் அவரை நம்பும் கூட்டம் உருவாகிறது. கீழ்வெண்மணி உட்பட நாகப்பட்டினம் பகுதியில் கோபாலகிருஷ்ண நாயுடு தன்னுடைய செல்வாக்கை எப்படி உயர்த்திக்கொண்டார் என்பதற்கு அவரது சொல்லே, அவரது கடிதத்தின் வழியாக சாட்சியாக நிற்கிறது.

கம்யூனிஸ்ட் தலைவர்கள் மனம்போன போக்கில் பல கோரிக்கைகளைப் பட்டியலிட்டுக் கொடுத்து அவர்களுடைய தொண்டர்களை விவசாய வேலைநிறுத்தம் செய்யத் தூண்டுகின்றனர். அவர்களின் நியாயமில்லாத கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாதபோது அவர்கள் அரசாங்கத்தினரை அணுகுகின்றனர். அரசாங்கம் நிலச்சுவாந்தார்களுக்கும் கூலித்தொழிலாளர்களுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தி தற்காலிக உடன்பாடுகளை உருவாக்கி வருகிறது. ஒவ்வொரு பேச்சுவார்த்தையின் போதும் விவசாயிகளுக்கு அதிக உரிமைகள் உறுதி செய்யப்படுவதால் கம்யூனிஸ்ட் தலைவர்கள் அதிக அதிகாரம் பெற்று மேலும் துணிச்சலுடன் செயல்படுவது நடக்கிறது. இந்த மண்ணில் பஞ்சத்தை உருவாக்கி மாவோயிசத்தைச் செழிக்கச் செய்வதுதான் இவர்களின் நோக்கம்...

கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களும் அவர்களின் பொய்ப் பிரச்சாரத்திற்குப் பலியான ஏமாளி கூலித்தொழிலாளர்களும் எங்கள் நிலங்களில் அத்துமீறி நுழைந்து எங்கள் நிலங்களின் விளைச்சல்களைக் கொள்ளையிட்டுச் சொல்லொணாத் துயரங்களை எங்களுக்கு விளைவித்தபோதும் நெல் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்களாகிய நாங்கள் உறுதியான அகிம்சை வழியையே கடைப்பிடித்து வருகிறோம். இந்தத் தொடர்ச்சியான அச்சுறுத்தல் மற்றும் தவறான தூண்டுதல்களால் நடத்தப்படும் தாக்குதல்களில் இருந்து எங்களைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்காகத் தங்களிடம் முறையிட்டு நீதிவழங்குமாறு வேண்டிக்கொள்ளும் பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது (பக்.12 - 13) *என அவரின் சொல்லின் வீரியம் அமைகிறது.*

மேலும் அவர் அன்றைய முதலமைச்சரான அறிஞர் அண்ணா அவர்களின் நூலான தீ பரவட்டும் என்னும் நூலினைக் குறிப்பிட்டு பகுத்தறிவின் தீ பரவட்டும் மூடநம்பிக்கைகள் அழியட்டும் என்ற சிந்தனையைச் சிலாகித்து, மக்களை வர்க்கங்கள் என்று பிரித்து ஒருவருடன் ஒருவர் மோதிக்கொள்ள வழிவகுக்கும் கம்யூனிசம் என்னும் மூடநம்பிக்கையை அழிக்க வேண்டியகாலம் வந்துவிட்டது. சமூகத்தின் இந்தக் களைகளை அழிக்காவிட்டால் எதிர்கால விளைச்சலுக்கான நம்பிக்கைகளை இவை அழித்துவிடும் எனத் திறமையாக முன்வைக்கிறார். இந்தியாவில் எப்படி விடுதலைச் சிந்தனைகள் மிதவாதமாக, தீவிரவாதமாக வெளிப்பட்டதோ அதைப்போல கம்யூனிஸச் சிந்தனையும் மார்க்சியமாக, மாவோயிசமாக நின்று தொழிலாளர்களைப் பாதுகாத்தது என்பதையும் இங்கு நாம் புரிந்துகொள்ள வேண்டும். ரஷ்யாவிலும் சீனாவிலும் இருந்து பரவிய இச்சிந்தனை அன்றைய எல்லா அரசுகளையும் திணறச் செய்தது என்பதையும் இங்கு கவனிக்க வேண்டும்.

மண்எண்ணெய் கோவிந்தா, பாலகிருஷ்ணா, ராமானுஜா, மூர்த்தி, கிட்டு கொலை வழக்கு, கோதண்டம் பொறையார் கற்பழிப்பு வழக்கு, ராமுத்தேவரின் ஆள்கடத்தல் கொலை முயற்சி. முதலியார் அய்யா மேலகூட இளம் வயசுல குற்றவழக்குப் பதிவாகி இருக்கனும். இந்த நேரத்துல வினாயகம் அய்யா நம்மோட இல்லை. நாளைக்கு என்ன வந்து பாக்கிறதா ஆள்விட்டு சொல்லியிருக்கார். அவர் மேல எத்தனமுறை விசாரணை நடந்திருக்குன்னு யாராவது சொல்ல முடியுமா? நம் நடவடிக்கை ஒவ்வொன்னுலயும் அவரும் இருந்திருக்கிறார், நம்ம பகுதியிலேயே இவருதான் பெரிய தி.மு.க தலைவர். அவர் அஞ்சா நெஞ்சம் கொண்டவர், வழக்கெல்லாம் அவர அசைக்க முடியாது. உங்க மேல ஒரு குற்றச்சாட்டு வருதுன்னா நீங்க நல்லா வேலை செய்யிறீங்கன்னு அர்த்தம். (ப.61) *என்று அவரைச் சுற்றி இருக்கும் கூட்டம் தனக்குக் கீழ் உள்ள மக்களை அடிமைப்படுத்தி அவர்களைச் சுரண்டும் முகமாக அவர்களைத் துன்பப்படுத்தித் தங்களுடைய வாழ்க்கையை வசதிகளைப் பெருக்கிக் கொள்ளும் கூட்டமாக இருப்பதை இதன் வழியாகக் காணமுடிகிறது.*

கோபாலகிருஷ்ண நாயுடு தன்னுடைய அரசியலை இன்னும் தீவிரமாக்கவும், தன்னுடைய காய்நகர்த்தல்களை இன்னும் பலமாக்கவும், தனித்தன்மையுடையவராக யாரும் தன்னை எதிர்க்க முடியாதவராக நிறுவிக்கொள்வதில் முனைப்புடையவராக இருக்கிறார். தன்னுடைய அதிகாரம் மேலும் மேலும் பெருகவேண்டுமே அன்றி ஒரு சிறிதும் குறையக்கூடாது என்பதில் கவனமாக இருக்கிறார். இந்த நிலையில் தன்னை நம்பி இருக்கும் கூட்டத்திற்கு எதிரிகளைக் காட்டி, அந்த எதிரிகளைத் தன்னால் மட்டுமே வெல்ல முடியும் என்று ஒரு சூழ்நிலையை உருவாக்குகிறார். அதுவே தன்னுடைய அடையாள அரசியல் என்றும் காலகாலத்திற்கு அதுவே நிலைக்க வேண்டும் என்ற எண்ணமுடையவராகவும் இருக்கிறார்.

அவருடைய முதல் தாக்குதல் கம்யூனிஸ்டுகள். கேள்வியற்று, கொடுத்ததை வாங்கி, தங்கள் நிலத்தில் உழைத்த மக்களைத் தங்களையே கேள்வி கேட்கும் அளவுக்குத் துணிச்சலாக்கியது கம்யூனிஸ்டுகள் என்ற பார்வையைக் கொண்ட கோபாலகிருஷ்ண நாயுடுவின் எண்ணத்தை நாவல் முழுக்கக் காணமுடிகிறது.

மாண்புமிகு முதல்வரான நீங்கள் இந்த அச்சுறுத்தும் பிரச்சினையைத் தீர்க்க உடனடி நடவடிக்கை எடுத்துத் தொடர்ந்து அச்சத்தில் வாழ்ந்துவரும் நிலச்சுவாந்தார்களின் இழந்துபோன நம்பிக்கைகளை மீட்டுத்தர ஆவன செய்யவேண்டும் என்றும்; கம்யூனிஸ்டுகளின் பிடியில் சிக்கியுள்ள நாகப்பட்டினம் பகுதியை மீட்டு அங்கு வன்முறையும் ரத்தப்பெருக்கும் நிகழாமல் பாதுகாக்க வேண்டும் என்றும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம் (பக். 15 - 16).

*முதலமைச்சருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் மேற்கண்டவாறு கூறுபவர், நெல் உற்பத்தியாளர் சங்கத் தலைவராகப் பேசும்போது, ...**இப்போ இரிஞ்சியூர்ல கம்யூனிஸ்டுங்கிற பேச்சே கிடையாது. நம்ம நெலத்தில இருக்கனும்னா அவங்க நம்ம சட்டதிட்டத்துக்குப் பணிஞ்சிதான் நடக்கனும்..... சரி தொல்லை கொடுக்கிற ஆட்களோட பெயர சொல்லுங்க. அவுங்க ஒவ்வொரு ஆளாதீத்துடலாம். செத்துப்போனபிறகு யாரும் கூட்டத்துல நின்னு பேசறதோ கத்தறதோ இல்லை.... அவங்களோட அச்சுறுத்தலுக்கு நாம ஒருக்காலும் பணியமாட்டோம் அப்படீங்கறத கம்யூனிஸ்டு கட்சிக்காரங்க புரிஞ்சிக்கனும். நம்ம தெரு வழியா ஊர்வலம் நடத்தறானுங்க, நம்ம திடல்ல கூட்டம் நடத்தறானுங்க.... (பக். 15 - 16)** என்னும் குரல்வழி அவரின் அரசியல் நாடகங்கள் தெளிவாகின்றன.*

*சன்னாசியைப் பற்றிச் சொல்லுவதற்கு முன் அவன் வாழ்ந்த கீழ்வெண்மணி ஊரைப்பற்றிச் சொன்னால்தான் மந்திரவாதியான சன்னாசியின் இடம் என்ன என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியும். **அந்த மண்ணில் மக்களின் எண்ணிக்கையைவிடத் தெய்வங்களின் எண்ணிக்கை அதிகம். இந்த மண்ணின் பேய்களும் பிசாசுகளும் சாத்தானைவிட வலிமையானவை. பேய்கள் பகல் நேரங்களில் சுழல்காற்றாக வீசி இலைகளையும் கிளைகளையும் சிதறடித்துவிடும். இரவு நேரங்களில் சில பேய்கள் தீப்பந்துகள் போல மிதந்து செல்லும். சில பேய்கள் கொள்ளிக் கண் கொண்ட பூனை வடிவத்தில் அலையும். பின்வாட்டமாக நடந்து செல்லும் பெண் சடலமாக மாறி சில அச்சுறுத்தும். கண்ணில் படாத குதிரைகளின் மீது ஏறி நாடுவிட்டு நாடு பறந்து செல்லும் போட்டிகளை நடத்தும் சில பேய்கள். பில்லி சூனியப் பேய்கள் பலரின் தொழிலை நாசம் செய்யும். விளைச்சலை அழிக்கும் சில ஊர்ப்பேய்கள். சில பிசாசுகள் வீடுகளின் உள்ளே கல்லை எறிவதும், ஊர்ச் சொத்துக்களை நாசம் செய்வதும் உண்டு. சில***

பிசாசுகள் வெறிபிடித்துப்போய்ப் பல ஊர்களைக் கொள்ளையிட்டு மக்களை விரட்டிவிடுவதுண்டு. பாட்டிமார்கள் சொல்லும் கதைகளில் மக்களை மிரண்டு ஓடச்செய்வதுதான் இந்தப் பேய்களின் வேலை. ஓலைக்குடிசைகளை எரித்துச் சாம்பலாக்கும் பயங்கரமான பேய்களும் உண்டு. குடிசைகளைக் கொளுத்திச் சாம்பலாக்கும் இந்தப் பயங்கரமான பேய்களிடம்தான் கவனமாக இருக்க வேண்டும்.

அதிகாரம் செல்வம் குவிந்த மனிதர்களின் செயல்கள் பேய்களாகப் பிசாசுகளாக உருவகம் செய்யப்படுவதைப் புரிந்துகொள்ள முடியும். சன்னாசி அந்த உருவகங்களில் இருந்து மக்களைக் காப்பாற்றுபவனாக மந்திரவாதியாக இருக்கிறான். அவன் திடகாத்திரமான ஆள்.

ஊரைவிட்டு ஒதுக்கிவைக்கப்பட்ட மந்திரவாதியின் தம்பி தைய்யான் ஒரு வயது அண்ணன் மகனைப் பார்க்க கீழ்வெண்மணிக்கு இரகசியமாக வந்தபோது அடித்துக் கொல்லப்பட்டான். அவனது உடலை மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்தியிருந்தார்கள். அவன் வந்த செய்தியை மறைத்ததற்காகச் சன்னாசியையும் பெரியானையும் அவர்கள் ஈவு இரக்கமின்றி அடித்து நொறுக்கினார்கள். பொறையாரில் இருந்த பண்ணையாரின் தோட்டத்திற்குத் தீவைக்க முயன்ற தைய்யான் அதில் மாட்டிக் கருகிவிட்டதாகக் காவல்துறை பதிவு செய்துகொண்டது.

*கீவளூர்ச் சேரியைச் சேர்ந்த மக்கள் தங்கள் தெருக்கள் வழியாகத் தேர் இழுக்கும் உரிமை மறுக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து 1965 ஏப்ரல் 14ஆம் நாள் கோயில் தேரினை உடைத்தனர். தீட்டுப்பட்ட தேரைச் சாதி இந்துக்கள் எரித்துவிட்டனர். **சன்னாசிதான் மக்களைத் தூண்டிவிட்டதாகச் சந்தேகப்பட்ட ஊர்க்காரர்கள் அவனைக் கடத்திச் சென்றனர்.***

இரண்டு வாரங்களுக்குப் பிறகு அவனது சடலம் காரைக்கால் பகுதியில் கிடந்தது. மர்மமான சாவு என்று குறிப்பிட்டுக் காவல் துறையினர் அந்த விசாரணையை முடித்துக்கொண்டனர் (ப.42).

கோபாலகிருஷ்ண நாயுடுவின் கூற்றுப்படி, **சன்னாசி என்ற நபர் காரைக்காலுக்கு அருகில் உள்ள கிராமம் ஒன்றிற்குச் சென்றிருந்தபோது மிராசுதாரர்கள் அந்த நபரைக் கொலை செய்துவிட்டார்கள் என்ற வதந்தி திட்டமிட்டுப் பரப்பப்பட்டது. இந்த வதந்தியின் அடிப்படையில் புகார் பதிவாதற்கு முன்பாகவே சன்னாசி கள்ளச்சாராயம் குடித்து அந்தக் கிராமத்திலேயே இறந்துவிட்ட உண்மை தெரியவந்தது. கம்யூனிஸ்ட் கட்சியினரின் வன்முறை நடவடிக்கைகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருந்துவரும் எனக்கு எதிராக அவர்கள் பலவித சதிகளைச் செய்துவருகிறார்கள் என்பது மேற்குறித்த சம்பவங்களில் இருந்து புலனாகிறது (பக். 13 - 14).**

சன்னாசியின் மனைவி பெயர்தான் மாயி. மாயி வாழ்க்கைப்பட்ட ஊரான கீழ்வெண்மணியானது கிழக்குத் தஞ்சைப் பகுதியில் இருப்பது. கோரையாறு, கடுவையாறு என்ற காவிரியின் இரண்டு கிளைநதிகளின் பாசனம் கொண்டது. இவர்கள் இருவருக்குமான உறவை, காதலை, திருமணத்தை மிகச் சுருக்கமான புனைவில், **அவள் அவனிடம் சென்றாள். அவள் தனது மதர்த்த மார்புகளை அவனுக்கு அளித்தபோது அவன் தன் பூசாரி விரதத்தை முடித்துக்கொண்டான். அடுத்த கோடைக்கு முன் அவர்களின் கல்யாணம் முடிந்து அவனுக்கு ஒரு மகனையும் அவள் பெற்றுக்கொடுத்தாள் (ப.42)** என்றமைகிறது.

இங்கே சன்னாசி இறந்தது.. அவனுக்கு ஊர் கட்டுப்படுகிறது என்பதுடன் வெளிநாடு சென்று கம்யூனிஸம் பயின்று வந்த அவனது தம்பியாலும்தான். தைய்யான் எனப்படும் சன்னாசியின் தம்பியும் சன்னாசியும் கொலை செய்யப்படுவது வர்க்கப் பார்வை, சாதியப்பார்வை, அதிகாரப் பார்வை போன்றவற்றாலும் அமைகிறது.

சன்னாசி இறந்தபிறகு, அவனைக் கொலை செய்தோரைப் பழிவாங்குவதற்காக மாயி கம்யூனிஸ்டு கட்சியில் சேர்கிறாள். கீழ்வெண்மணியைச் சேர்ந்த தோழர்கள் மாயியைப் பற்றிப் பேசும்பொழுது, அவருக்கு எதனை எப்பொழுது வேச வேண்டும் என்பது தெரியும். எதனை எப்படிச் சொல்ல வேண்டும் என்பது தெரியும், எப்பொழுது கேள்வி கேட்க வேண்டும், எப்பொழுது எங்கே பேச்சை நிறுத்த வேண்டும் என்பது தெரியும் என அவளுடைய ஆளுமை வளர்ந்திருக்கும் விதத்தைக் குறிப்பிடுகின்றனர். ஆனால் பண்ணையாரோ, **ஓ! அந்தக் கிழவியா? தகராறு செய்யற கம்யூனிஸ்டு நாயா? அந்தப் பறை, வேசியைப் பத்தியா கேக்கிற? (ப.43)** என்று பொருமுபவராக இருக்கிறார். இதுதான் அடித்தட்டு மக்களுக்கும், செல்வம் பொங்கிய பண்ணையாருக்கும் உள்ள வித்தியாசமாக இருக்கிறது.

துப்பாக்கிக் காயம்பட்டவர்கள், அடிபட்டவர்கள், உடலில் வெட்டுப்பட்டவர்கள், கட்சிவேலை செய்பவர்கள், அடிபட்டவர்களின் நண்பர்கள் எல்லாரும் ஒரு வகையில் கொடுத்து வைத்த மனிதர்கள் என்ற பார்வையைப் பெற்றாள் மாயி. **வலிதான் அவர்களைப் பக்குவப்படுத்தும், வலிதான் அவர்களைத் தொலைந்து போகாமல் காக்கும், வலிதான் அவர்களை விழுந்துவிடாமல் தாங்கும் என்று நம்பிக்கை அளிப்பவளாக இருக்கிறாள் மாயி (ப.180) .**

நந்தன் அங்கு நடந்த கலவரத்தில் பாதிக்கப்பட்ட சிறுவன். அவனுடைய கைகளில் கோபம் முறுக்கேறியிருந்தது. மாயிக்கு அது தெரிந்தது. அவனுடைய நரம்புகள் முண்டும் முடிச்சுமாகப் புடைத்துக் கொண்டிருந்ததும், கால் எலும்புகளில் கனப்பு எரித்துக் கொண்டிருந்ததும் அவளுக்குத் தெரிந்தது. அவன் கல்லை எடுத்து வீசிக்கொண்டே இருந்தான், ஒன்னு, ரெண்டு, மூணு, நாலு. எதையாவது உடைத்துக்கொண்டே இருந்தன கற்கள். நாப்பத்தி ஒன்னு, நாப்பத்தி ரெண்டு, நாப்பத்தி மூணு, நாப்பத்தி நாலு. அவன் வாய் எண்ணிக்கொண்டே இருந்தது. அவன் எதையும் மறக்கவில்லை.

அவன் கையை எடுத்துத் **தன் கைக்குள் வைத்துக்கொண்ட மாயி, உன் கோபத்தையெல்லாம் உன் தலைக்குள் அடக்கு, உன் நெஞ்சுக்குள் புதைத்துக்கொள் என்று சொல்லிக் கொண்டிருந்தாள். விரலிலும் உள்ளங்கையிலும் அதை வைத்துக்கொண்டிருந்தால் திடீரென அது சிதறிப்போகும். பார்த்துக் கொண்டிருக்கும்போதே அது காணாமல் போய்விடும். பெரிய மனுசம்னுக்கான கோவம் உன்னிடமிருக்கு. மூத்த ஆளுக்குரிய பொறுமை வேணும் (ப.180)** என்று நம்பிக்கையையும் அதற்கான வழியையும் அளிக்கும் மாயியின் கோபமும் இங்கு உள்ளார்ந்த வடிவமாகத் தெரிகிறது.

இராமையாவின் குடிசை எரிக்கப்பட்ட துக்கம் நடந்ததிலிருந்து மாயி தன்னை நிலைகுலைந்து போகாமல் பார்த்துக்கொண்டாள். பத்திரிக்கைக்காரர்கள் அவளைத் தேடி வந்தனர். நடந்ததைப் பற்றி அவளுக்குத் தெரிந்ததைக் கேட்டு எழுதிச் செல்ல விரும்பினர். நடந்ததைப்பற்றி அவளுக்குத் தெரிந்ததைக் கேட்க விரும்பினர்.

குந்தியுட்கார்ந்து அவள் பேசும் தோற்றத்தை, பேசும்போது புகையிலை எச்சிலைத் துப்பும் லாவகத்தை, ஒப்பாரி பாடும்போது அவள் தலைமுடி கலைந்து ஆடுவதை, ஊரின் துக்கத்தைப் பற்றிப் பேசும்போது அவள் கைகள் அலைவதை அவர்கள் படம் பிடித்துக்கொண்டார்கள். தன் வயிற்றில் அடித்துக்கொண்டு பண்ணையார்களைச் சபித்து அவள் மண் அள்ளி வீசுவதை அவர்கள் பயத்துடன் பார்த்தார்கள். கொலைகாரப் பாவிகள் வீடுகள் குட்டிச்சுவராகி எருக்குப் பூக்கட்டும் என்று அவள் சாவினை சொல்லும்போது கொதிக்கும் அவளுடைய கண்களையும் படம் பிடித்துக் கொண்டனர் (ப.185). இப்படி, மாயியின் தோற்றம் ஒரு காவல் பெண் தெய்வமாக இருக்கிறது.

மாயி அம்மக்களின் உணர்வலைகளைக் கடத்தி அதை அடுத்த தலைமுறைக்குள்ளும் விதைப்பவளாக மனிதாபிமானத்தின் சின்னமாக நாவலில் முன்வைக்கப்பட்டுள்ளாள்.

நிலப்பிரபுக்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையேயான வர்க்கப் போராட்டமாக இந்தப் பிரச்சினை எப்படி சாதி எனும் கொடூர வடிவத்தைத் தன்னோடு இணைத்துக்கொண்டது, வறியவர்கள் அடிபடுகையில் அரசாங்கம் எப்படி கண்மூடிச் செல்கிறது, அதிகாரம் எப்படியெல்லாம் உழைப்பாளிகளை அடக்கிவைத்திருக்கிறது, அரசாங்கம் அதிகாரம் போன்றவை எப்படியெல்லாம் பணம் படைத்தவர்களைக் காத்தும், ஏழைகளை எரித்தும் வந்திருக்கின்றது என்று இந்தப் பிரச்சினையின் அடித்தளம் வரை போய் அலசுகிறது இந்நாவல்.

என்ன மாதிரியான சூழ்நிலை அப்போது வெண்மணியில் இருந்தது, யாரெல்லாம் இந்தப் பிரச்சினையில் சம்பந்தப்பட்டு இருந்தார்கள், எப்படி இந்தப் பிரச்சினை படிப்படியாக விஸ்வரூபம் எடுத்தது, படுகொலை நடந்த அந்த நாளில் என்ன நடந்தது, யார் நடத்தியது என்பதைப் பல கோணத்தில் இருந்து புலப்படுத்துகிறது.

பாதிக்கப்பட்ட பொதுமக்கள், சங்கங்களை சார்ந்தவர்கள், இயக்கங்களைச் சார்ந்தவர்கள் என அனைவரது பார்வையிலும் நகர்த்தப்பட்டாலும், கொலைகளைச் செய்த கூட்டத்திலிருந்தும் அதற்குத் துணை போன கூட்டத்திலிருந்துமே வாக்குமூலங்களைப் பெற்று அதையும் இக்கதையில் இணைத்ததுதான் இந்நாவலின் வெளிச்சம்.

இந்தக் கட்டத்தில் இது ஒரு நாவல் என்பதைத் தாண்டி, ஒரு வழக்கு விசாரணையை நேரில் பார்ப்பதுபோன்ற ஒரு அசல் உண்மையான முகத்தை அணிந்துகொள்கிறது. வாதி, பிரதிவாதி ஆகிய இருவரின் வாக்குமூலங்களையும் சேகரித்ததைப் போல, ஒவ்வொருவரின் பேச்சும், சட்டம் தவறவிட்ட உண்மையின் மேல் மெல்ல மெல்ல நீரூற்றி விலக்குகின்றது. ஒவ்வொருவர் கூற்றின் வழியும் சம்பவங்கள் வேறுவேறு வகையில் நம் கண்முன் விரிய, உண்மை ஒரே வகையில் நம்முன் அறைகிறது.

சமூகத்தில் மறைக்கப்பட்ட, நீதியின் முன் பதுங்கிய, அரசியலால் புதைக்கப்பட்ட, அதிகாரத்தால் எரிக்கப்பட்ட உண்மைகளை வெளிச்சம் போட்டுக் கொண்டுவந்து அடுத்த தலைமுறைக்குத் தெரியவைப்பதில்தான் இதுபோன்ற நாவல்களின் கடமையும் தேவையும் இருக்கிறது.

நம் முன் கண்முன்னே விரியும் கொடுமைகளின் வலியைப் பங்குபோட்டுக்கொள்கிறது மனம். ‘அங்க என்ன நடந்துச்சுனா’ என்று பாட்டி கூறும் கதையை வாய்மூட மறந்து நாம் பார்த்துக்கொண்டிருப்பதைப் போல, அப்படுகொலைகளின் முழு வரலாற்றையும் அறிய அடுத்தடுத்த தகவல்களையும், வாக்குமூலங்களையும் தேடிக் காத்திருக்கத் துவங்குகிறது நம் மனம். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் செயல்பாடுகளையும், வெண்மணியில் இயக்கத்தின் ஈடுபாட்டையும், கட்சிப் பத்திரிக்கையின் பதிவுகளையும் மட்டுமே காட்டுவது போல் தெரிந்தாலும், இப்பிரச்சினையில் வேறு எந்தக் கட்சியோ ஊடகமோ முழுமையான உணர்வோடு ஈடுபடவில்லை என்பதும் வரலாறுதான்.

பல நதிகளின் வழி வந்து ஒரு திவலைக்குள் சேர்ந்து தன்னையே பகடியாக்கிக் கலையும் இந்நாவலின் கதைச்சொல்லி முறையைத் தனியாக ஆவர்த்தனம் செய்யவேண்டும். ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது என்பதே தெரியவில்லை என்பதற்கு பிரேம் காரணமாகலாம்.

பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள்

● ஜின்னா அஸ்மி

ஏன் தவித்துக்கொண்டிருக்கிறாய்
என்று கேட்டபடியே எனக்குள்ளிருந்து
வெளியே வந்தான் அவன்...

தாகம் எடுக்கிறது என்றேன்...

தண்ணீர் குடி...
தாகத்தைத் தீர்க்க தண்ணீரைத் தவிர
வேறெதுவும் இல்லை இங்கு...

முக்கால் பாகம் தண்ணீர்
எங்கும் நிறைந்திருக்கிறது...
இந்த உலகிலும்
உன் உடலிலும்...

உன்னால்
தண்ணீரைத் தவிர்க்கவோ
தடுக்கவோ முடியாது என்றான்...

அணைகட்டி அடக்கிவிட முடியாதா என்றேன்...

மயங்கி விழுந்தது
மருத்துவராக இருந்தாலும் - முதலில்
தண்ணீர் தெளித்துதான் தட்டிஎழுப்ப வேண்டும்...

தரம் பார்ப்பதில்லை
தாகம் தீர்ப்பதில்...
நிறம் பார்ப்பதில்லை
நிறையும் குடங்களில்...

முதன் முதலில் சமத்துவத்தை
மழையாகப் பொழிந்து
மனிதர்களுக்கு உணர்த்தியதே தண்ணீர்தான்...

நீ உழைக்கிறாய் என்பதை
வியர்வையின் வழியே
வெளியே சொல்வதே தண்ணீர்தான்...

உன்னை உயர்த்துவதும்
உயிரோடு வைத்திருப்பதும்
உன்னைவிட உயர்ந்ததும் தண்ணீர்தான்... என்றான்

சுனாமி வழியே சூறையாடிச் சென்ற
இந்தத் தண்ணீரையா உயர்ந்தது என்கிறாய்?
என்றேன்....

அது நீங்கள்
இயற்கையை அழித்ததற்கான
எச்சரிக்கை மணி...

உண்மையாகவே
உனக்கொரு சோகமென்றால்
தண்ணீரால் தாங்கிக்கொள்ள முடியாது...
கண்களின் வழியே காட்சி தந்துவிடும்
கண்ணீராக...

வாழ்க்கையே
தண்ணீரில்தான் இருக்கிறது...
பனிக்குடத்தில் ஆரம்பித்து
நீர்க்குடத்தில் நிறைவடைகிறது

- அவன் இன்னும் சொல்வான்

• கவிஜி

தி பைசைக்கிள் தீஃப்

போருக்குப் பின்னாலான சீரழிந்த ஒரு நாட்டில் தனித்து விடப்பட்ட ஒரு குடும்பத்தை அந்தக் குடும்பத் தலைவன் வழிநடத்திச் செல்ல படும் பாடுதான் துயர் மிகுந்த இந்தப் படம்.

எத்தனை முறை பார்த்தாலும் அத்தனை முறையும் அந்த ஆழ் துயரம் நம் கழுத்தைச் சுற்றிக்கொண்டிருப்பதை இம்முறையும் உணர்ந்தேன். இரண்டாம் உலகப்போருக்குப் பின் ‘இத்தாலி’ நிலை குலைந்திருந்த நேரம். வேலையின்மை பசி பட்டினி என்று எங்கு திரும்பினும் துயரமும் துக்கமும்.. குடும்பம் குடும்பமாய்த் தனித்திருந்ததைப் படத்தின் ஆரம்பமே நமக்குக் காட்டிவிடுகிறது.

சைக்கிள் இருந்தால் ரிச்சிக்கு போஸ்டர் ஒட்டும் வேலை கிடைக்கும். வேறு வழியே இல்லாமல் சைக்கிள் இருக்கிறது என்று பொய் சொல்லி வேலை வாங்கிவிடுகிறான்.

வீட்டுக்கு வந்து மனைவியிடம் புலம்ப அவள் பாரத்தின் விளிம்பில் எரிச்சலூட்டும் உடல்மொழியோடு ஏதேதோ முயற்சித்துப் பார்த்து முடியாமல் ஒரு முடிவுக்கு வருகிறாள்.

“இனி பெட்சீட் இல்லாமல் தூங்கு. ஒன்றும் ஆகாது” என்று முணங்கிக்கொண்டே பெட்சீட்டைக் கட்டிலில் இருந்து உருவி அதைச் சுத்தம் செய்து விற்கிறாள். மிகக் குறைவான தொகைதான் கிடைக்கிறது. பரவாயில்லை. வேறு வழி இல்லை. அதை வைத்து ஒரு சைக்கிளை வாங்கிவிடுகிறார்கள்.

ரிச்சிக்கு நிம்மதி பெருமூச்சு. அடுத்த நாள் ஒரு ராஜா மாதிரி வேலைக்குக் கிளம்புகிறான். வேலைக்குப் போகும் சந்தோஷத்தில் ஒரு சிறு பிள்ளையைப் போல மனைவியைப் பிடித்து இழுத்து அசைத்து வம்பிழுத்து கசகசத்து கட்டிக்கொள்ள முயற்சிக்கையில் ‘ஐயோ விடு.. வேலைக்குப் போயா’ என்பது போன்ற பாவனையில் அவள் தலை களைந்து அரசல் புரசல் உரசலில் பொய் உடல்மொழி கொண்ட கோபம்.. என்று சில வினாடி காட்சிக்குள் காதல் பூப்பதைக் காண்கிறோம். அந்தக் காட்சி முடிவில் இருவரும் ஒருவரையொருவர் காதல் பார்வை பார்க்க.. அவன் அவளை அணைத்துக் கன்னத்தோடு சேர்ந்து நெற்றியில் அழுத்தமாய் முத்தமிட்டுக் கிளம்புகிறான். பொருளாதாரமே காதலைக் காக்கும் கடவுள் என்று புரியும் இடம் இது.

ரிச்சியின் எட்டு அல்லது ஒன்பது வயது மகன் ‘புருனோ’ இந்தப் படத்தில் மிக முக்கியமான சாட்சியாக இருக்கிறான். காலையில் ஆறு மணிக்கே அப்பாவோடு ரெடியாகி அப்பாவின் சைக்கிளைத் துடைத்துப் பளிச்சென ஆக்கி இருக்கும் ஆடையை நேர்த்தியாக அணிந்துகொண்டு ஒரு பெரிய மனிதத் தோரணையில் அவன் நடந்துகொள்வது.. வறுமை சிறுவர்களையும் சீக்கிரமாகவே பெரியவர்களாக்கி விடுகிறது என்ற உண்மையை நாம் புரிந்துகொள்ளச் செய்கிறது. மதியத்துக்கான சிற்றுண்டியை

ஆளுக்கொன்றாகக் காகிதத்தில் மடித்து மனைவி தர அப்பாவும் மகனும் வாங்கி அவரவர் பாக்கெட்டில் வைத்துக்கொள்ளும் காட்சியில் உலக வறுமை ஒவ்வொரு பாக்கெட்டிலும் நிறைந்து இருப்பதை உணர்கிறோம். வெளியே கிளம்பும் நொடியில் கழுத்தில் தொங்கும் மப்ளரைப் பட்டென்று எடுத்து ஒரு சுற்று தோளில் போட்டு சரி செய்துகொள்ளும் புருனோ அந்த வீட்டின் இன்னொரு தூண்.

தோளில் ஏணியைக் கிடைமட்டமாகத் தாங்கிக்கொண்டு சைக்கிளில் பசை கொண்ட வாளியை மாட்டியபடி ஒரு கையில் சைக்கிளை ஓட்டிச் செல்லும் ரிச்சி மற்றும் ரிச்சியைப் போல உள்ள மற்றவர்கள் என்று அந்தக் காட்சி வாழ்வின் நெடுந்தொடரில் மீந்திருக்கும் துக்கத்தை மிகக் குறைவான நேரத்தில் நாம் கண்டடையும் காட்சி. நிழற்படங்களைப் போல மூன்று வேளை வயிறு அவர்களைத் துரத்தும் ஆவணம்.

பையன் புருனோவை அவன் வேலை செய்யும் பெட்ரோல் பங்கில் இறக்கி விட்டுவிட்டு மாலை ஏழு மணிக்கு வந்து அழைத்துக் கொள்கிறேன் என்று சொல்லி முதல் நாள் வேலைக்குச் செல்கிறான் ரிச்சி. வறுமை ஓடிவிடும் என்றுதான் அவன் கால்கள் மிதிவண்டியில் பெடல் இடுகின்றன.

ஆனால் விதி வலியது. அதுவும் விதியற்றவனுக்கு விதி ஓவர் டைமில் வேலை செய்யும்.

பணி நேரத்தில் ஒரு கயவன் ரிச்சியின் சைக்கிளைத் திருடிக்கொண்டு செல்கிறான். உயிரே போனது போல விரட்டுகிறான் ரிச்சி. ம்ஹூம். அவன் திருடனை விரட்டுவதை விட இந்த உலகின் துயரமெல்லாம் சேர்ந்து ரிச்சியை விரட்டுகிறது. களைத்து திகைத்து காவல் நிலையம் செல்கிறான். காவல் நிலையம் அப்போதும் இப்போது இருப்பது போலத்தான் போல. உலகமெல்லாம் ஒரே சீருடைதான் அதற்கு. லெத்தாஜிக். கதை 1948 இல் நடக்கிறது. அப்போதும் பொதுமக்களிடம் காட்டும் அதே ஏதேச்சதிகார லெத்தாஜிக் மனநிலைதான் போலீஸ் ஸ்டேஷன் எனும் தத்துவம் கொண்டிருக்கிறது.

மாலை 7.30க்கு மகனிடம் சோர்ந்துபோய்ச் செல்கிறான் ரிச்சி. '7 மணிக்கு வரேன்னு சொல்லி 7.30 க்கு வர்ற' என்று கோபித்துக்கொள்கிறான் மகன். அதே நேரம் சைக்கிளை 'எங்க...?' என்று கேட்கிறான். ரிப்பேர் என்று ரிச்சி பொய் சொல்கிறான். மகனை வீட்டில் விட்டுவிட்டு இரவு முழுக்க நகரத்தைச் சுற்றுகிறான். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னான வறுமையின் கோரப் பிடியில் சிக்கிய இத்தாலி நகரத்தின் இரவு நம்மை அச்சமூட்டுகிறது. வாழ்வாதாரங்களுக்காக ஆங்காங்கே நடக்கும் கேளிக்கை நிகழ்ச்சிகள். இழந்த வாழ்வை மீட்டெடுக்க ஆங்காங்கே நடக்கும் போராட்ட ரகசிய திட்டங்கள் என்று இன்னொரு உலகம் அங்கே சுழன்றுகொண்டிருக்கிறது. நிழலைப் போலப் படர்ந்துகொண்டிருக்கும் வெறுமையின் இயலாமையில் ரிச்சிக்கு சோர்வுதான் மிச்சம்.

விடிந்ததும் தெரிந்தவர் மூலமாக நகரத்தையே அலசுகிறார்கள். திருட்டு பொருள்களெல்லாம் வந்து சேரும் மார்க்கெட்டில் தேடுகிறார்கள். ஒரு கடையில் நின்று தன் சைக்கிளைப் போலவே இருக்கும் ஹேண்டில் பார் கொண்ட சைக்கிளை சந்தேகத்தோடு பார்த்து சண்டை கூட போடுகிறான் ரிச்சி. ஒன்றும் நடப்பதில்லை. சைக்கிள் இருந்தால்தான் வேலை. வேலை இருந்தால்தான் உணவு. என்ன செய்வது. பகல் தேய்ந்துகொண்டே இருக்கிறது. ரிச்சியின் மனமும் தேய்ந்துகொண்டே இருக்கிறது. மகன் புருனோவும் அப்பாவோடு சேர்ந்து அதே பதைபதைப்போடு அலைவது நம்மைத் துயரத்தின் உச்சிக்குக் கொண்டு செல்கிறது.

இடையே மழை வேறு. துக்கப்பட்டு விசனப்பட்டு இருக்கையில் மழை வேண்டா விருந்தாளிதான். நகரம் மழைக்கொதுங்கி நிற்கிறது. நரகத்தில் அப்பாவும் பையனும் ஒதுங்கி நிற்கிறார்கள். ஒதுங்கி நிற்கும் காட்சி விலகி அமர்ந்திருக்கும் காட்சியெல்லாம் உலக வறுமை வரைபடங்கள். சொல்லொணாத் துயரங்களைச் சுமந்தலையும் ரிச்சி ஒரு கட்டத்துக்குப் பின் நாமாகவே ஆகிவிடுகிறான். பிறகு நாம்தாம் இத்தாலி வீதிகளில் சுற்றித் திரிகிறோம்.

வீதிவீதியாய் சந்தேகப்பட்டுக்கொண்டே அலையும் மனம் நேரம் கூடக்கூட கனம் ஏறி நிற்பதைக் காண்கிறோம். இடையே மகனைக் கூட்டிக்கொண்டு உணவகம் செல்கிறான் ரிச்சி. மகனுக்கு வேண்டும் என்பதை வாங்கித் தருகிறான். மகன் புருனோவோ சிறுவனுக்கே உண்டான இயல்பில் பக்கத்து டேபிளில் அமர்ந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கும் பணக்கார வீட்டுப் பையனை ஏக்கத்தோடு பார்க்கிறான். அவன் பீஸா மாதிரி இருக்கும் உணவை வாயில் கவ்வி இழுத்து நீட்டி விளையாட்டு போக்கில் சாப்பிடும் காட்சியை ஆசையோடு காண்கிறான். அந்த உணவை வாங்க நாம் அவர்கள் மாதிரி சாம்பாதிக்க வேண்டும். இப்போது அது முடியாது என்று அதே மாதிரி இருக்கும் அதன் அடுத்த லெவல் உணவை வாங்கித் தருகிறான் ரிச்சி. வேறு வழி இன்றி அதை அந்தப் பணக்கார வீட்டுப் பையன் சாப்பிட்டது போலவே சாப்பிட்டுப் பார்க்கிறான் புருனோ. நாமும் கூட ஒரு கணம் புருனோவாக ஆகி சாப்பிடுவது போன்ற பாவனையை உணர்கிறோம். சிறுபிள்ளையின் வேட்கை உணவில் தேடி கலைகிறது. அங்கு அமர்ந்தே இருவரும் சைக்கிள் இருந்தால் ஒரு நாளைக்கு எவ்வளவு சம்பாதிக்க முடியும். அதுவே ஒரு மாதத்துக்கு எவ்வளவு என்றெல்லாம் கணக்கு போடுகிறார்கள். எத்தனை துன்பம் வந்தாலும் நாம் நம்மை சந்தோசமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்றெல்லாம் பேசி மகனுக்கு உத்வேகம் அளிக்கும் ரிச்சி ஒரு கட்டத்துக்கு மேல் தன்னைத் தானே அமர்த்திக்கொள்ள இயலாமல் பாதி சாப்பாட்டைப் பட்டென வைத்துவிட்டு அயர்ந்து மகனைப் பார்க்கும்போது.. வாழ்வின் கோரப் பசி.. நாளை என்றொரு பூதத்தை மிகப் பயங்கரமாக கண் முன் நிறுத்துகிறது.

பேருந்தில் அடித்துப் பிடித்து ஏறும் கூட்டம்... ரிச்சி பேசிக்கொண்டிருக்கையில் பக்கத்து வீட்டுப் பெண்மணி ஜன்னலை அடைப்பது... அவர்களுக்கு இன்னொரு குழந்தையும் இருக்கிறது என்பதைக் காட்டும் ஒரே ஒரு காட்சி... அந்தக் காட்சியில் அறைக்குள் வந்து தங்கையை ஒரு பார்வை பார்த்துவிட்டு அந்த அறையின் ஜன்னலை அடைத்து தங்கைக்குப் பாதுகாப்பு அளித்ததாக உணர்ந்து செல்லும் புருனோ... என்று படம் நெடுக ஆங்காங்கே குறியீடுகளைக் காண முடிகிறது. கலையின் நுட்பம் துளிர்க்க ஆரம்பித்த காலகட்டம். நியோரியலிசம் என்ற வகைமைக்குள் பொது இடங்களில் தொழில் முறை நடிகர்கள் அல்லாதவர்களை வைத்து எடுக்கப்பட்ட படம். வாழ்வியல் நிஜத்தை ஜன்னல் வழியே காண்பது போல வீதி மக்களின் கண்களை நாம் பொருத்திக் கொண்டிருக்கிறோம். படம் நெடுக நாமும் நம்மைச் சார்ந்தவர்களும்தான் நடமாடுகிறோம்.

படம் முடிய இன்னும் 10 நிமிடங்கள்தான் இருக்கின்றன. வேறு வழி இல்லாமல் ரிச்சி ஒரு வேலையைச் செய்கிறான். அதன் நீட்சி மகன் புருனோ அப்பாவாக ஆகிவிடும் தருணத்தைத் தருகிறது. மிரண்டு தவித்து இடது பக்கமிருந்து வலது பக்கத்துக்கு நகரும் அவனது பார்வை... அந்த ஒரே ஒரு பிரேமிலேயே அதிர்ச்சியைக் கடத்திவிடும் கருப்பு வெள்ளை சம்பவம். ப்ருனோக்கள் அப்பாவின் இடத்துக்குச் சீக்கிரம் வரக் கூடியவர்கள். மிகவும் பலம் பொருந்தியவனும் நிலைகுலைந்துபோகும் இடத்தில் ரிச்சி சிறுபிள்ளையைப் போல ஆகி விடுவதும் அப்பாவுக்கு நடக்கவே கூடாத ஒன்றையெல்லாம் மகன் பார்த்து விடுவதும் நம்மை இன்னும் இன்னும் துக்கத்தில் ஆழ்த்திவிடுகின்றன. சட்டென பெரிய மனிதனாகத் தன் அப்பாவுக்கே அப்பாவாகிவிடும் மகன் அப்பாவின் கையை ஆறுதலாய்ப் பிடித்துக்கொள்கையில் இனம் புரியாத நம்பிக்கை அப்பாவுக்கும் நமக்கும். ஒரு நண்பனைப் போல நடந்துகொள்ளும் புருனோ... அப்பாவின் எல்லாமும் அறிந்தவனாக ஆகி அவர்களுக்கான வழியைக் காட்டிக்கொடுக்கிறான்.

கூட்டத்தோடு கூட்டமாக இத்தாலி நகரத்துக்குள் காணாமல் போகும் அவர்கள்.. அவர்கள் மட்டுமா என்ன.... நீங்களும் நானும்கூடத்தான்.

திரைப்படம் : தி பைசைக்கிள் தீஃப்

இயக்குநர் : Vittorio De Sica

மொழி : இத்தாலி

ஆண்டு : 1948

● பிரேம பிரபா பிரேம் குமார்
● ஓவியம் - அழ.ரஜினிகாந்தன்

ஜோ என்ற நான்

பறவைகளின் மொழியை ஒருவாறு கண்டறிந்து, ஒரு கிளியுடன் பேசிக்கொண்டிருக்கும் போதுதான், 'ஜோ' என்ற நம் கதையின் கதாநாயகி, காற்றினை மெலிதாக அதிரவைத்து என் அருகில் வந்தாள். வழக்கமாக, வாஞ்சையுடன் அவளின் சருமத்தைத் தடவிக் கொடுத்தேன். பலவிதமான இசைக் குறிப்புகளைத் தன்னுள்ளில் சேமித்துவைத்திருக்கும் ஒரு இசையமைப்பாளரின் வாத்தியக்கருவி ஏதோ ஒன்றை நம்மிடம் கூற விழையும் தவிப்பு ஜோவின் குரலில் அன்று இருந்தது.

முதன்முதலாக, ஜோவின் ஏற்ற இறக்கமான குரலுடன் அவளின் உடல் மொழியையும் கண்களின் பாவத்தையும் கணக்கிலெடுத்து, அவள் மொழியில் பேச ஆரம்பித்தபோது மிகுந்த சிக்கல் இருந்தது. தினமும் ஒரு பயிற்சிக்காகக் காலை நேரங்களிலும், பின் இரவுக்காலங்களிலும் பால்கனியில் அமர்ந்துகொண்டு அவளுடன் பேசிப் பழக, அவளின் மொழியில் எனக்குக் கூடுதல் ஆளுமை கைகூடியது.

எங்களின் சந்திப்பின் ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு பகுதியாக அவளின் சுய சரிதையை என்னிடம் கூறினாள். அதன் முழுத் தொகுப்புதான் இது. முதலில் அவளுடைய பூர்வீகம் குறித்த நினைவுகளிலிருந்து தொடங்கினாள்.

“அப்போது எனக்கு ஒரு வயதிருக்கலாம். சரியாக நினைவில்லை. அந்த ஆசிரமத்தின் நிர்வாகியின் முகத்தை இன்றளவும் என்னால் மீட்டெடுத்து, தெளிவாக உன்னிடம் வர்ணிக்க முடியும். சிறிது சதைப்பற்றான உடம்பு. அடர்த்தியான முடியை மேற்புறமாக அழுந்தச் சீவியிருப்பார். ஒடுங்கிய கண்கள் என்றாலும் அளப்பரிய கருணையை அள்ளித் தருவது போல அவருடைய பார்வை இருக்கும். அவரது வலதுபுற நெற்றியில் இருக்கும் ஒரு கருப்பு மருவை முதலில் பார்ப்பவர்கள் சற்றே முகம் சுளித்தாலும், அவரின் பிம்பத்தை எத்தனை வருடங்கள் ஆனாலும் மீட்டெடுக்க அந்த மருவே அவர்களுக்குப் பல தடவை உதவியிருக்கிறது.

அவருடைய மடியில்தான் நான் அதிகமான ஓய்வு நேரத்தைக் கழித்திருக்கிறேன். அவர்தான் எனக்கு 'ஜோ' என்று நாமகரணத்தைச் சூட்டியிருக்க வேண்டும். அவரின் மிக நேர்த்தியான விரல் நகங்களில், காலைச் சூரியனின் ஒளிபட்டுச் சிதறும் அழகினை நான் பலமுறை அவரின் மடியில் அமர்ந்துகொண்டு மிக அருகாமையில் ரசித்திருக்கிறேன். அவரும் பலவிதமான செல்லப்பெயர்களுடன் என்னைக் கொஞ்சி மகிழும்போது அவரின் மெலிந்து நீண்ட விரல்களை அளப்பரிய வாஞ்சையுடன் நக்கிக் கொடுப்பேன்.

ஒருநாள், தொடர்ந்து மழை பொழிந்துகொண்டிருந்தது. இடித்து ஓய்ந்த வானம் மேகங்களைத் தனக்குகந்தவாறு மீண்டும் மாற்றியடுக்கும் முயற்சியில் தோற்றுக்கொண்டிருந்தது. ஒரு வெள்ளிக் கம்பியினைப்போல ஒரேகோட்டில்விழும்தொடர் மழைத்துளிகள் காற்றிற்கு லேசாகத் தடுமாறி, ஒரு கைதேர்ந்த பாலே நாட்டியக் கலைஞரின் இடுப்பசைவிற்கிணங்க ஒரே சீராக அசைந்து கொடுத்தது. தூரத்திலிருக்கும் மகிழ மரத்தினடியில் நின்றுகொண்டிருந்த ஆசிரம நிர்வாகி ஒரு பெரிய குழியைத் தோண்டிக்கொண்டிருந்தார். மழையில், தான் தொப்பலாக நனைந்ததைக்கூட துளியும் பொருட்படுத்தாமல் குழி தோண்டுவதை அவரின் வாழ்க்கையின் முதல் லட்சியமாக நிறைவேற்றிக் கொண்டிருந்தார்.

சிறிதுநேரம் கழித்து விடுதியின் இடதுபக்க மூலையில் இருந்து ஒரு பெண்ணின் உடலைத் தோள்களில் சுமந்து கொண்டுவந்து குழியில் மிகுந்த அக்கறையுடன் கிடத்தினார். மழை நின்று காற்று அடித்தது. இலைகளில் தேங்கியிருந்த நீர்த்திவலைகள் பெருமழையாக மீண்டுமொரு முறை பொழிந்து ஓய்ந்தது. குழியினருகில் அமர்ந்துகொண்டு நிர்வாகி அந்தப் பெண்ணை உற்றுப் பார்த்துத் தன் இரண்டு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு கேவிக்கேவி மிகுந்த சப்தத்துடன் அழ ஆரம்பித்தார். நடுங்கிக்கொண்டே நீண்ட மரக் கைப்பிடியுள்ள மண் வாரியை எடுத்துக் குழியினை நிரப்பினார். எதுவும் நடவாததுபோல பால்கனியில் வந்தமர்ந்தார்.

தயக்கத்துடன் தற்காப்பு இடைவெளியுடன் அவர் அருகில் நின்றுகொண்டிருந்த என்னை, அதே அன்புடன் அழைத்தார். என்னை அப்படியே வாரி அணைத்துக்கொண்டு மடியில் வைத்துகொண்டார். வழக்கமாக, அவரின் விரல் நகங்களைப் பார்த்தேன். விரல் இடுக்குகளில் உறைந்திருந்த உதிரத்தின் மணம், அவர் என்னுள் என்னையுமறியாமல் திணித்த சைவ உணவுப் பழக்கத்தை முதன்முதலாக அசைவமாக மாற்றியது. நிர்வாகியின் திடீர் மரணம் குறித்துப் பலவிதமான யூகங்களை, மிகுந்த நேர்த்தியான புனைவுடன் விடுதியில் உள்ள பலர் அரங்கேற்றிக்கொண்டிருந்தார்கள்.

அதன்பிறகு என் வாழ்க்கையின் தடமே ஒட்டுமொத்தமாக மாறிவிட்டது. எங்கெங்கோ அலைந்து திரிந்தேன். ஒரு காட்டுப்பூனையின் காமவேட்டையில் இருந்து தப்பித்து தலைதெறிக்க ஓடும்போதுதான் கருப்பனைச் சந்தித்தேன். அகலமான அச்சுறுத்தும் விழிகள். சாம்பல் போர்த்திய கரிய நிறம். சதைப் பிடிப்பான ஒரு பஞ்சுப்பொதியல் போல உப்பிப் பருத்த கன்னங்கள். இப்படி ஏதோ ஒன்று அவனிடம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அதைத்தான் அவன் காதல் என்று என்னிடம் அடிக்கடி பிதற்றிக்கொண்டிருப்பான். எங்கள் இருவரின் குடும்ப வாழ்க்கை மிகவும் மகிழ்ச்சியாகத் தொடர்ந்தது. எந்த ரகசியத்தையும் நான் கருப்பனிடம் மறைத்தது இல்லை. எப்படியாவது என் கடந்தகால வரலாற்றை அவனிடம் கூற ஒரு நல்ல சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தேன்.

ஒரு நிலாக்காலத்தில் கருப்பனை அருகில் இருக்கும் உயரமான குன்றிற்கு அழைத்துச் சென்றேன். நிலவொளியில் நிறைவான கலவியில் இருவரும் ஈடுபட்டோம். கருப்பன், தன் வழக்கமான முத்தங்களால் என்னை முழுவதும் நிறைத்தான். பிறகு ஒருவாறு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அவனிடம் ஒன்றுவிடாமல் அனைத்தையும் கோர்வையாகக் கூறினேன்.

முதன்முதலாகக் கருப்பனின் பாத நகங்களைப் பார்த்தேன். அவற்றின்மேல் நிலவொளி பட்டு என் கண்களை மேலும் பிரகாசமாக்கியது. மெலிதாக விசும்பிக்கொண்டே குற்ற உணர்ச்சியால் தலையைக் கவிழ்த்துக்கொண்ட என்னை, கருப்பன் தன் முத்தங்களால் தேற்றினான். அதுவே நான் அவனைச் சந்தித்த கடைசி நாளாகப் போனது.

அவனுடைய திடீர் முடிவு என் வாழ்க்கையை அப்படியே புரட்டிப்போட்டுவிட்டது. அவனில்லாமல் என் வாழ்க்கையை என்னால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை. அனைத்தும் கண் மூடித் திறக்கும் நேரத்திற்குள் நடந்தேறிவிட்டது. எங்கோ தொலைவிலிருந்து காற்று கொண்டுவந்த கருப்பனின் உதிரத்தின்

மணம், என் நெஞ்சில் இரண்டாம் முறையாக நிறைந்து வழிந்தது.

மீண்டும் முதலிலிருந்து ஆரம்பம், பெரும் போராட்டமென வாழ்க்கையை நகர்த்த வேண்டியிருந்தது. அடிக்கடி நிர்வாகியும் கருப்பனும் கனவில் வர ஆரம்பித்தார்கள்.

அப்போதுதான் ஒருநாள், உன் மனைவியை அவள்வழக்கமாகவரும்பல்பொருள்அங்காடியில் சந்தித்தேன். பார்த்தவுடனேயே அவளை எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. எவரையும் நொடியில் கவர்ந்திழுக்கும் எழிலான முகம். எங்களைப் போன்ற அனாதைகளுக்கு எப்படியாவது உதவத் துடிக்கும் இரக்க குணம். அவளைப் பின்தொடர்ந்து வந்து காரில் ஏறிக்கொண்டேன். என் உரிமையான செய்கைக்கு அவள் மறுப்பேதும் கூறவில்லை. உங்கள் வீட்டின் முடிசூடா ராணியாக வலம் வந்தேன்.

இதே பால்கனியில், அவளின் மடியில் அமர்ந்து அவளின் வாசம் மிகுந்த கன்னத்துடன் என் கன்னத்தை இழையோட்டினேன். முந்திய தினம் நீ அவளைக் காயப்படுத்தியிருக்க வேண்டும். அவளின் மேலுதட்டின் சிறிய சதைப்பிளவில் இருந்து உதிர்ந்த உதிரம் என்னை இரண்டாவது முறையாக மிருகமாக்கியது. மறுபுறம் நன்றியுணர்ச்சியால் என் நெஞ்சு விம்மியது.

என் நாவு, முழு நிலாக்காலத்தில் கடற்கரையில் தன்னிலை மறந்த அலைகளைப் போல உயரே எழும்புவதும் அடங்குவதுமாக இருந்தது. அவளின் பிடியிலிருந்து என்னை விடுவித்துக்கொள்ள நான் அதிகம் போராடவேண்டியிருந்தது, பதற்றத்துடன் என்னை விடுவித்தவள், என் திடீர்ப் பாய்ச்சலால் நான் எங்கே பால்கனியில் இருந்து கீழே விழுந்துவிடுவேனோ என்று அஞ்சி, பால்கனி சுவற்றினைத் தடுமாறிக்கொண்டே பிடிக்க, நிலைகுலைந்து ஆறாவது மாடியிலிருந்து கீழே விழுந்து இறந்துவிட்டாள். அவளை நான் கொல்ல துளியும் திட்டமிடவில்லை. மிகவும் ஏதேச்சையாக, என் கண்முன்னேயே நடந்தேறிய உன் மனைவியின் மரணம், ஒரு துர்பாக்கியமான சம்பவம்தான்.

உனக்கெல்லாம் அப்போது என்னிடம் துளியும் பிரியம் இருந்ததில்லை. ஏதோ, ஒரு அருவருப்பான மிருகத்தைப் பார்ப்பதுபோலத்தான் என்னைப் பார்ப்பாய். எவ்வளவு முயன்றும் உன் அன்பிற்குப் பாத்திரமாக என்னால் நடந்துகொள்ளவே இயலவில்லை. உன் மனைவி இறந்தபிறகுதான் என்னையும் ஒரு உயிராக மதிக்கக் கற்றுக்கொண்டாய்.

உன் மனைவி இறந்தது குறித்து நீ மிகப் பெரிதாய் வருத்தப்பட்டு நான் பார்த்ததேயில்லை. அவளின் மரணம் ஏதோ ஒருவழியில் உனக்கு நிம்மதியைத் தேடிக் கொடுத்ததாக நான் உணர ஆரம்பித்தேன். உன் வினோதமான இந்தச் செய்கை, எனக்கு மிகுந்த வியப்பை அளித்தது. கூடவே பதற்றமாகவும் இருந்தது.

ஒருநாள், உன் படுக்கையறை மேஜையில் ஒளித்துவைத்திருந்த அவளின் கடிதத்தையும் ஒரு சிறிய காலியான விஷக் குப்பியையும் பார்த்தேன். அவளைத் தற்கொலைக்குத் தூண்டியது நீதான் என்று புரிந்துகொண்டேன். பால்கனியில் இருந்து அவள் தள்ளாடி விழுந்தது என்னால் இல்லை என்று அறிய மனதிற்கு மிகவும் ஆறுதலாக இருந்தது. உன் மனைவியின் மரணம் குறித்து உன்மேல் சாற்றப்பட்டிருக்கும் குற்றம் நிச்சயம் ஒருநாள் நிரூபிக்கப்பட்டு, உனக்கான மரண தண்டனை நிறைவேற்றப்படுவது என்னவோ உறுதி''.

எனக்கு படபடப்பு கூடியது. ஜோவின் கண்களைப் பார்க்க மிக அச்சமாக இருந்தது. என்னையே உற்றுப்பார்த்தவள், வேகமாக என்னை நோக்கி விரைந்து வந்தாள். நான் தற்காப்புக்காக அனிச்சயமாக கைகள் இரண்டையும் எக்ஸ் போல வைத்துக்கொண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டேன்.

அந்தப் பதற்றத்தில், என் திருமண மோதிரம் தெறித்து கீழே விழுந்து உருண்டோடியது. என் முகத்தில் படர்ந்த கலவரத்தை அதிகம் ரசித்தவாறு வெகுஅலட்சியமாக என்னைக் கடந்துசென்றாள். மீண்டுமொருமுறை என்னைத் திரும்பிப் பார்த்தவள், "அடுத்து நான் எங்கு செல்லப்போகிறேன் என்று நீ கேட்கமாட்டாயா?" என்று அதிகாரத்துடன் என்னை மிரட்ட, மிகுந்த அச்சத்துடன் "எங்கே?" என்று திணறிக்கொண்டே கேட்டேன்.

"ஏன், உனக்குத் தெரியாதா? உன்கள்ளக்காதலி பெமீலாவின் வீட்டிற்குத்தான்" என்று வாலைச் செங்குத்தாக நீட்டிக்கொண்டு என்னைத் திரும்பிப் பார்க்காமல் சென்று விட்டாள், ஜோ.

அடுத்தநாள் செய்தித்தாளில், பெமீலாவின் சர்ச்சைக்குள்ளான திடீர் மரணம் மற்றும் அவளருகில் கிடந்த திருமண மோதிரம் குறித்துப் பல யூகங்களைப் பத்திரிக்கையாளர்கள் எழுப்பியிருந்தார்கள். என் பார்வை மங்கிக்கொண்டே வந்தது. ■

கற்பதுவே.. கேட்பதுவே..!

அய்யப்ப மாதவன்

விமர்சனக் கூட்டங்களில் தொடர்ந்து உரையாடப்படும் கவிதைகளின் உண்மையான மதிப்பை (அதாவது ஓர்த்) எளிமையாகப் புரிந்துகொள்ள முடியும். ஆனால், அப்படியான உரையாடல் எதுவும் இல்லாமல் ஒரு தொகுப்பை (விருது போன்ற விசயங்களுக்காக) சிறந்தது என்று எதன் அடிப்படையில் தேர்வு செய்கிறார்கள்?

தமிழில் கவிதை நூல்களுக்கு விமர்சனக்கூட்டம் நடத்துவது சீர் செய்வது போன்றுதான். கவிஞன் தன் கவிதை நூலுக்குத் தானே கூட்டம் நடத்தும் அவலம் நம்ம ஊரில்தான் இருக்குமென்று நினைக்கிறேன். யாரிடமாவது கடன் வாங்கியாவது கூட்டம் நடத்தினால்தான் கவிஞனுக்கு ஜென்ம சாபல்யம் கிட்டும். சீர் செய்ய நான்கு பேரைப் பேச அழைக்க வேண்டும். பெரும்பாலும் கவிஞனின் நண்பர்களாய்த்தான் இருப்பார்கள். விமர்சகர்கள் என்று தமிழில் குறிப்பிட்டுச் சொல்லும்படி இருப்பவர்கள் அழைத்தால்கூட வரமாட்டார்கள். அவர்களை அழைக்க வேண்டுமெனில் நீங்கள் சமூகத்தில் வசதியுள்ள கவிஞராக இருக்க வேண்டும். புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். இதை நிறைய முறை கண்கூடாகவே பார்த்திருக்கிறேன்.

இன்னொன்று நீங்கள் எழுதும் கவிதைகள் உலகத்தரத்திற்கு இல்லாதிருப்பதும் ஒரு குறை. அந்த விமர்சகர்கள் எல்லாம் உலகக் கவிதைகள் படித்து வளர்ந்தவர்கள். இங்கு எழுதுபவர்களைக் கண்டு அவர்கள் கேலியும் கிண்டலும் செய்வதைத் தவிர வேற எதையும் செய்வதில்லை. கூட்டம் நடத்தி கவிஞனின் ஏதோ இரு கவிதைகள் வாசித்து கவிஞனைத் திருப்திபடுத்திவிட்டதாய் நினைத்துக் கலைந்து போய்விடுவார்கள். இங்கு கவிதை எழுதுவது ஏனெனில் கவிஞனின் மனம் அமைதிகொள்ள மட்டும்தான். அவன் ஏனோ கவிதை எழுதுவதில் தன்னைப் பறிகொடுத்தவன் ஆகிறான். அதுவே அவன் வாழ்வாகிப் போகிறது.

ஒரு கவிதை நூலைச் சிறந்த கவிதை நூல் என்று எப்படிச் சொல்கிறார்கள் என்பது புதிரைப் போலத் தோன்றலாம். பொதுவாகவே நல்ல கவிஞர்களை இங்கு அடையாளப்படுத்துவது நடப்பதே இல்லை. நிறைய இருட்டடிப்பு வேலை செய்வார்கள். மூத்த கவிஞர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் மூத்த எழுத்தாளர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் பெரும்பாலும் ஒரு நல்ல கவிதையை ஒரு சிறந்த கவிஞனைப் பற்றி எங்கும் குறிப்பிடுவதுமில்லை. பேசுவதுமில்லை.

எஸ்.ரா. குறிப்பிடுவது இரண்டு பேரைத்தான்.. எப்போதும் எங்கும் சொல்லிக்கொண்டே இருப்பார். வேறு யாரையும் அவர் எங்கும் சொல்லியிருக்கிறாரா என்று தெரியவில்லை. இன்னொன்று நீங்கள் விசுவாசிகளாய் இருந்தால் உங்கள் கவிதை நூல் வெளி உலகத்திற்கு எளிதில் தெரிய வரும். உங்கள் நூல் வெளியீட்டிற்குப் பெரும் எழுத்தாளர்கள் வருவார்கள். அப்புறம் உங்கள் நூலுக்கு விருது தானாகவே வந்துவிடும்.

போன வருடம்கூட இது போன்ற ஒரு நிகழ்வை நாம் கண்கூடாகப் பார்த்தோம். தேர்வாளர்களுக்கு ஏதோ ஒரு வழியில் விருது

பெறும் கவிஞர்கள் விசுவாசத்தோடு இருக்க வேண்டும். அதாவது ரகசிய அடிமையாய்க் கூட இருக்கலாம். அது தப்பில்லை. விருதும் புகழும் ரொம்ப முக்கியம். நல்ல கவிதைகள் கொண்ட நூலினை வைத்து ஒருபோதும் இங்கு விருதுகள் வழங்கப்படவில்லை. கவிஞனின் புற உலகமும் அவன் பின்புலமும் அவன் விசுவாசமுமே அவன் கவிதைகளின் தரத்தை நிர்ணயிக்கின்றன. இங்கு நல்ல கவிஞர்கள் சாகப் பிறந்தவர்கள்.

அனுபவ வாழ்வோடு புனைவைக் கூட்டும்போது கவிதைக்குத் தனித்துவம் உண்டாகுமா? இல்லை, புனைவும் அனுபவமும் ஒன்றிணைய முடியாமல் கவிதையின் தனித்துவம் கெடுமா?

கவிதைக்குள் புனைவு என்பது அவசியம் என்றே தோன்றுகிறது. படிமங்கள் தோன்றுகையில் அங்கு புனைவும் வந்துவிடும்தான். ஒரு கவிஞனின் தனித்துவமென்பது அவனது தனிப்பட்ட விசாலமான கற்பனை மற்றும் கனவு. நான் கவிதைகள் எழுதும்போது இயற்கைக்குள் மூழ்கிப்போகிறேன். இயற்கையின் காட்சிகள் என்னை மயக்கமுறச் செய்கின்றன. என் கவிதைகளில் காற்றும் மழையும் நிலவும் சூரியனும் இல்லாமலிருப்பதில்லை. இயற்கை தரும் காட்சிப் படிமங்களால் என் கவிதைகள் தனித்துவத்தை எய்துகின்றன.

வாழ்வுக்கு நெருக்கடியை ஏற்படுத்துகிற கவிதையுடனான உறவைக் கவிஞன் ஏன் மேலும் இறுக்கமாகக் கட்டிக்கொள்கிறான்.. கவிதைக்கென்று மந்திர சக்தி ஏதாவது இருக்கிறதா?

கவிதை ஒரு லாகிரி வஸ்து. கஞ்சாவைப் போன்று கவிஞனைக் கிறுகிறுக்கச் செய்வது. வசிய மருந்துபோன்றதும்தான். வேறெதுவும் இல்லாமல் இருந்துவிடலாம். ஆனால் இந்தக் கவிதைப் பித்து அவ்வளவு எளிதாய் நம்மைவிட்டு நீங்கிவிடாது. கவிதை என் காதலிபோலத்தான். அவள் நான் இறக்கும்வரை என்னோடு இருக்க வேண்டுமென நினைக்கிறேன். அவளே என் மிகப்பெரும் ஆறுதல். அடைக்கலம். எல்லோரும் என்னைக் கைவிடும்போது அவள்தான் இறுகப் பற்றிக்கொண்டு நீவிவிடுகிறாள். அவளுக்குள் நுழைந்துவிடுகையில் என்துயர்கள் வேதனைகள் அழுகைகள் எல்லாம் மறைந்துவிடும். அது ஒரு மந்திர சக்தி. மொழியும் கவிஞனின் புனைவும் ஒன்றாகக் கலந்து தோன்றுகிற மாயசக்திதான் இந்தக் கவிதை.

• • •

ரமேஷ் பிரேதன்

தமிழ்க் கவிதை, இயல்பில் இயற்கையை வசப்படுத்த உருவான ஒரு மந்திரத் தன்மையிலிருந்தே தோன்றியிருக்க வேண்டும். யோசிக்கும்போது, அந்த மந்திரத் தன்மைதான் கவிதைமீது இத்தனை ஈர்ப்பை உண்டாக்குகிறதோ என்று தோன்றுகிறது. உங்கள் கருத்தை எதிர்பார்க்கிறேன்.

கோளகையில் உள்ள உயிரினங்களில் மொழிவழி தமது அறிவைத் தொகுத்துக்கொண்டும் வளர்த்துக்கொண்டும் ஓயாமல் புதுப்பித்துக்கொண்டும் இருப்பது மனிதவிலங்கு மட்டுமே. அம்மொழிவழி அது உருவாக்கிக்கொண்ட கலைப்படைப்புகளின் தொகுப்பை இலக்கியம் என்று பெயரிட்டுக்கொள்கிறோம். கலைவடிவங்களில் மொழியாலானதால் இலக்கியவடிவம் முழுமுற்றான பொருண்மையானது. எனவே, கவிதை உட்பட அனைத்தும் மாயம், மந்திரம் போன்ற அபௌதிகத்தன்மை அண்டாத பொருள்முதற்தன்மையது.

சொற்களை உருக்கி வார்க்கும் தொழில்நுட்பம்.. ஒவ்வொருவரின் அறிதலுக்கேற்ப வளம் கூடும். தொழில்நுட்ப நேர்த்தியே உள்ள ஈர்ப்பை உண்டாக்குகிறது. இயற்கை, செயற்கை என்ற அறிவுத்தொகைமைப் பகுப்பை நாம் கடந்துவிட்டோம். உணவில் சைவம் என்பது தாவரவுண்ணிகளாகவும் அசைவம் என்பது புலாலுண்ணிகளாகவும் பிரிந்துநின்றாலும், எல்லா உணவும் இயற்கை விளைவேயாகும். அதுபோலவே எதிலும் இயற்கை, செயற்கை என்பது இல்லை.

மனிதராலான எல்லாமே இயற்கைதான். பூமிக்கு வெளியிலிருந்து, ஐம்மூலகங்களுக்கு வெளியிலிருந்து மனிதரால் கவிதை உட்பட எந்தவொன்றையும் ஆக்கமுடியாது.

தமிழ்மொழி கவிதையால் வளர்ந்த மொழி. ஓசையும் பின்னணியும் ஆழமும் விரிவும் கொண்ட வடிவமாகக் கவிதை விளங்கிற்று. இன்று அந்த ஆஜானுபாகுவான தோற்றம் காணாமல் போய்க்கொண்டிருப்பதாகப் படுகிறது. நிச்சயம் மரபுக் கோளாறு இல்லை. வேறு எதனால் இந்தப் பாதிப்பு?

நீங்கள் எதைச் சொல்கிறீர் என்பதை உள்வாங்கிக்கொண்டேன். கவிதையால் மொழி வளர்வதில்லை; மொழியால்தான் கவிதை வளர்கிறது. மொழியின் ஒரு கூறு இலக்கியம், அவ்வளவே. மொழி என்பது பரந்துபட்ட அறிவுத்தொகைமைகளின் இயங்குத்தளம். மொழி, அனைவருக்குமானது; கவிதை உட்பட்ட கலை இலக்கியம் என்பவை பொதுவில் இருந்தாலும் அவற்றை அனைவரும் அறிவதில்லை. கவிதை உட்பட அனைத்து அறிவுத்துறைகளுக்கும் இது பொருந்தும்.

கடல்வாழ் உயிரினம்போல எண்ணிலடங்காக்கவிகளைக் கொண்டது தமிழ்ச் செம்மொழி. பாரதிதாசனுக்கு மறுபிறவியில் நம்பிக்கையில்லாமல் இருக்கலாம்; ஆனால், எனது ஊரில் பாரதிதாசன்களின் போக்குவரத்து நெரிசலில் சிக்கித் தவிப்பவன் நான். தமிழ்மொழி கவிஞர்களின் பிராய்லர் கோழிப்பண்ணை. என்னையும் நான் கறிக்கோழியாகவே உணர்கிறேன். நாமக்கல்லில் கோழிப்பண்ணைகள் ஏராளம்; இங்கு மயில் பண்ணைகள் இல்லை. இது மரபுக் கோளாறோ உயிர் மரபியல் கோளாறோ இல்லை; கருவில் குருதி ஊறுவதற்கு முன் மொழியூறிய குடிவழி வந்தவர் நாம். ஒவ்வாதவையை உட்கொண்டால் உடம்பு தானே அதை வெளித்தள்ளிவிடும்; ஒரு மொழிக்கும் சமூகத்திற்கும் வரலாற்றிற்கும் இது பொருந்தும்.

பண்டைய மனிதனின் பாறை ஓவியத்தைப் பார்ப்பதைப்போல், காட்டின் மர்மத்துக்குள் நுழைவதைப்போல், கொலை விலங்கின் பால் சுரந்த மடிமீது வாய் வைத்து ஊட்டிக் கொள்வதைப்போல் கவிதையை அணுகும் ஒருவர் நீங்கள். இந்தக் குணாச்சாரம் இயல்பானதா? இல்லை, படிப்படியாக வளர்ந்த ஓர் அறிவு நிலையா?

உலக உயிரினத்தில் மனிதரைவிடப் பெரிய கொலை விலங்கு எது? அப்படியான ஒரு தாய் விலங்கின்காம்புகளைக்கவ்விஐந்து வயதுவரை, சுரப்படங்கிய பிறகும் பருகியவன் நான். அரசமரத்து அடிநிழலில் ஞானமுழுமையடைந்த சித்தர்களின் நிலத்தில் பிறந்த நான் பெண்களின் உடம்பாலும் உணர்வாலும் அறிவாலும் வளர்ந்து ஆளானவன். திருவள்ளுவரையும் திருமூலரையும் உள்வாங்கினால் தமிழ் அறிவு பொருண்மைப்படும். திருக்குறளின் கவிதையியல் ஒரு பெரும் புதிர்வட்டப்பாதை; இது லூயி போர்கஸ் அறியாதது.

• • •

ரவிசுப்பிரமணியன்

புரிந்துகொள்ள பயிற்சி தேவைப்படும் கவிதைகள், இலகுவான மொழிதலைக் கொண்டிருக்கும் கவிதைகள் - இவற்றில் வாசிப்பு அனுபவத்தை அதிகரிக்கக் கூடியது எது?

நீங்கள் குறிப்பிடும் இரண்டிலும் தேர்ந்த கவிதைகள் அமைகையில் அவை நம் வாசிப்பு அனுபவத்தை அதிகரிக்கவே செய்யும். பொதுவாய் புரிந்துகொள்ள கடினமான கவிதைகள் மட்டுமே அத்தகைய வாசிப்பு அனுபவத்தைத் தரும் என்ற முன் வரையறைக்கு அப்பாற்பட்டது கவிதை.

உள்ளடக்கத்தை நீங்கள் கொண்டாடலாம். அல்லது கட்டி ஏறலாம். ஆனால், மொழிதல் என்பது ஒரு கவியின் தனிப்பட்ட சுதந்திரம். அதை வெவ்வேறு காரணிகள் தீர்மானிக்கின்றன. சொல்லிச் சொல்லி அலுப்பூட்டும் பிராண்டட் கவிகளின் கவிதைகளை விடுத்து இரு உதாரணம் சொல்கிறேன்.

ஞாயிறு போற்றுதும்

மாட்டுக்கறி வாசம்
மீன் கவிச்சிகளால்
ஆசீர்வதிக்கப்பட்ட ஞாயிறுகள்
நிறைந்த மாதத்தில்
பிறந்த இவன்
உள்ளுணர்வுப் பட்சி
அங்குமிங்குமாய் சிறகடிக்கிறது
மருந்திடப்படாத வறியவனின்
கேட்பாரற்ற புண்களில்
மொய்க்கும் ஈக்களாய்
ஞாயிறெனில்
மக்கள் இறைச்சிக் கடையில்
ஒரே ராகத்தில் எழுப்பும் அறைகூவல்
'அரசரே எமது எச்சில் தட்டுகளில்
கைவைக்கும்
உமது திட்டம் பலிக்காது'
ஆறு துண்டுகளாக ஈரலைப் பிளந்து
காந்தள் மலரென
நீட்டுபவன் முகத்தில்
ஒரு கணம் படர்ந்து நீங்குகிறது
சங்க காலத்தின் நிழல்
ஈரம் மினுக்கும்
நங்கையின் மேனியிலிருந்து
வழியும் வாசமிகு நாளில்
மகிழ்ச்சி என்பது
கசாப்புக் கடைக்காரர் தராசில்
ஏறி இறங்குகிறது
எஞ்சிய கிராமிற்கு
கொத்துமல்லி புதினா இஞ்சி சேர்க்கிறது
'வெங்காயம் பூண்டு' மணக்கும் மனம்
குழம்பு சட்டியில்
மஞ்சள் உப்புச்சாற்றில்
கழுத்தளவு சாதகம் செய்து
புல்லாங்குழல் ஆகி
இசைக்கப்படக் காத்திருக்கிற
சிறு நல்லியை
வெட்டும் விரல்களுக்கு
இசைஞனின் கை லாவகம்
வேறொன்றுமில்லை
ஞாயிறுதோறும் வீட்டின் அருகில்
மீசை உயர்த்திக் காத்திருக்கும்
சாம்பல் நிறப் பூனையை
ஏமாற்றாத வாழ்வையே கேட்கிறேன்
சிறு உயிர்க்காக
இறங்கிவரும் நீர்
இந்த எச்சிலொழுகும் வறிய நாக்கிற்கு
எலும்புத் துண்டுகளையேனும்
நீட்டாமலா போவீர்?

- ஸ்டாலின் சரவணன் (ரொட்டிகளை விளைவிப்பவன் தொகுதி, பக் : 19)

•

ஆதித்ய ஹ்ருதயம்

மகளே
நாம் எப்போதும்
இந்த சிறு விளக்கின் கை பற்றி
நடப்போம்
அதிலிருந்துதான்
இந்த உலகைக் காக்கும் சூரியன்
ஒளியைக் கடன் வாங்கி
பகலும் இரவும் காய்கிறான்
என்பதை மறந்துவிடாதே!

- வி.ஜே.வசந்த் செந்தில் (திராவிட அழகி தொகுதி, பக் : 31)

அர்த்தங்களுக்கு பொழிப்புரை பதவுரைகளுக்கு நான் போகவில்லை. இரண்டுமே எனக்கு சமமான வாசிப்பனுவத்தையே தருகின்றன. இதில் கூட்டிக் குறைத்துச் சொல்ல கோரும்போதே வேறொரு முன்முடிவு ஒன்றுக்கு நீங்கள் ஏதோ குறிப்பிட்ட விழுக்காட்டைச் சேர்க்க பிரயத்தனப்படுகிறீர்கள்என்றுதான்சொல்வேன். எல்லாவித மொழிதலும் இங்கு தேவைதான். ஒன்றின் இருப்பின் மூலமே இன்னொன்றின் ஸ்திதியை நீங்கள் அறிய இயலும். அதற்கான தேவையும் இங்கு இருக்கிறது.

நெடுங்கவிதைகள் எழுதுவது முற்றிலும் இல்லை என்றே தோன்றுகிறது. அந்த வடிவத்தில் ஒரு காவியத் தன்மை இருக்கும். அதில் வாசக மனதுக்கு நெருக்கமும் உண்டாகும்.

தற்போது எழுதப்படும் நீள் கவிதைகளும் குறுங்கவிதைகளும் என்ன மாதிரியான குணங்களைக் கொண்டிருக்கின்றன?

நல்லவேளை- தோன்றுகிறது என்று சொன்னீர்கள். எழுதப்பட்டிருக்கிறது என் நண்பர்களாலேயே. ஆனால் அதற்கான காலமாக இது இல்லாததால் கையில் வைத்திருக்கிறார்கள்.

காவியத் தன்மை வாசக மனசுக்கான நெருக்கம் போன்றவை அவற்றில் பாத்திரங்களோடு கதையோட்டமும் கலந்துவிடுவதால் இயல்பாய் நிகழ்ந்துவிடுகிறது. நீங்கள் சொன்னதை நான் குறுங்காவியம் என்ற பொருளில் எடுத்துக்கொண்டு பேசிக்கொண்டிருக்கிறேன்.

தற்காலத்தில் நீள் கவிதைகள் துர்லபம். என்னளவில் அதிகம் பார்க்கக் கிட்டவில்லை. இது குறுங்கவிதைகளின் காலம் என்றுதான் தோன்றுகிறது. கவிதைக்குள் இதுவரை வராத பாடுபொருள்கள், புதிய சொலல் முறைகள், போலச்செய்யாது தனித்துவத்துடன் இருக்கும் உறுதி, கிடைக்கும் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி வித்தை காண்பிப்பது, வீச்சு, வேகம், வெறி இப்படி பல சாதகமான அம்சங்களைப் பார்க்கிறேன். ஒரு தொகுப்பில் எங்கேனும் ஒரு இடத்திலேனும் கவியின் ஆன்மாவைக் கண்டுகொள்ள முடிவது இதெல்லாம் சந்தோஷமான விஷயங்கள். 'களமாடுங்க ராஜா. நல்லா இருங்கப்பா' என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. ஆனால் பெரும்பாலும் எல்லாருக்குள்ளும் சைத்தான் போல வந்து சேர்ந்திருக்கும் செஃப் மார்கெட்டிங்தான் அவ்வளவு எரிச்சலாக இருக்கிறது. ஏண்டா இது என்ன கமாடிட்டியா. ராத்திரி எழுதிட்டு விடியகாலம்பற உலகம் முழுக்க அத தலைப்பு செய்தியா போடணும்ன்னு பரபரன்னு ஆர்வகோளாறுல செஞ்சு திரியற விஷயங்களைவிட்டு இன்னும் இன்னும் செய்யும் காரியத்தில் ஆழ்ந்தா அது தானா ஒருநாள் நடக்கும்.

வாழ்வை, அதன் பொருளை, அதன் சுவையை எழுதிப் பார்க்க, சிறந்த இலக்கிய வடிவமாகக் கவிதையைக் கொள்ளலாமா?

கண்டிப்பாகக் கொள்ளலாம். சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை என மாயக்கண்ணன் வாயில் உலக உருண்டை தெரிந்தது போல காட்ட முடியும்.

நம் சங்கப்பாடல்களில் எத்தனை நாடகங்கள், சிறுகதைகள். நாம் கணிதம், மருத்துவம், தத்துவம், இலக்கணம் உட்பட எல்லாவற்றையும் கவிதையில் சொல்லிப்பார்த்த நீண்ட நெடிய மரபுக்குச் சொந்தக்காரர்கள்.

என்ன நாம் அதன் மேன்மைகளை முற்றிலும் உணர்ந்தவர்கள் இல்லை. அதுதான் துர்பாக்கியம். நம் பக்தி இலக்கியத்தில் உள்ள எத்தனை எத்தனையோ சம்பத்துக்கள் கேவலமான அரசியல் மதக் காரணங்களால் இன்னமும் முழுசும் கண்டுகொள்ளப்படாதது யாருக்கு நஷ்டம்.

எல்லாவற்றிலும் சொல்லலாம். கட்டுரையில் சொல்ல வேண்டியதை எப்படி சிறு கவிதையில் சொல்வீர்கள் என்று உங்களுக்குத் தோணலாம். நம் எழுத்துகால முன்னோடி கவி எஸ். வைத்தீஸ்வரனின் ஒரு கவிதையைச் சொல்கிறேன் கேளுங்கள். நீங்கள் இதற்குப் பத்து பக்கம் கட்டுரை எழுத வேண்டாம்.

"நம்மாலும்

இந்த உலகம்

அழியாமல் இருக்கட்டும்".

இறுதியில் அடியேனின் நான்காம் தொகுப்பில் பதிமூணு வரியில் எழுதப்பட்ட ஒரு பயாகிராஃபி கவிதையோடு நமஸ்காரம். இதெல்லாம் சாத்தியம் ஸ்வாமி கவிதையில்.

"சீம்பாலில் அருந்திய நஞ்சு

குளத்து நீரில் சிதறிய தைலம்

திணை மாறிய சீராடல்

ஒட்டுச்செடியில் கசப்பின் கலப்பு

ஒளிவந்த வேளை பாலை

புனிதம் காக்கும் பூதம்

நூதன சிலிர்ப்பில் தவிப்பு

இலச்சினை கேட்கும் வினோதரஸ மஞ்சரி

சித்தமெனக் காலடியில்

திருவுளம் இரங்காதேவி

இந்தத் தொடர்பறுந்த வரிகளுக்குள்

உலவும் கவிதையே

நான்."

-தொடரும். ■

இறகுகள் சேமிப்பவன்

சேமித்த இறகுகளைக் கொண்டு
ஒரு வானமும் ஒரு நிலவும் செய்தேன்
கானகத்தைக் கடந்து வந்து
சில பறவைகள்
வானும் நிலவும் தங்களது என
உரிமை கொண்டாடின
வானத்தையும் நிலவையும்
உடைத்துவிட
எனது மனம் நாடியது
எனினும் பின் யோசிப்பில்
அதனைக் கைவிட்டுவிட்டு
பறவைகளின் மகிழ்வான
ஒரு தருணத்திற்காகக் காத்திருக்கிறேன்
மகிழ்வான தருணமொன்றில்தான்
வானமும் நிலவும் செய்த
இறகுகளை பறவைகள்
உதிர்த்திருந்தன.

– ஏ.நஸ்புள்ளாஹ்.

•

யானையிடம் பற்றிய தீ
இருளிலும் தெரிகிறது
மனிதனின் முகம்...

– ஐ.தர்மசிங்

•

யார்_கண்டது?

மணித்துளிகளைக் கூறுகளாக்கித்
தனித்தனியாக வைக்க யத்தனிக்கிறேன்!
எத்தனை முயன்றும் ஒன்றே போல
பங்கு பிரித்துக் குவிக்க முடிவதில்லை!
சில நொடிகளாகவும் சில நாட்களாகவும்
சில நிமிடங்களாகவும் சில வருடங்களாகவும்
தத்தித் தத்தி மாறிக்கொண்டே இருக்க...
சரி, உணர்வுகளின் அடிப்படையில்
பிரிக்கலாகுமா என்று முயற்சிக்க
பல்வண்ணக் காட்சிக் கருவியொன்று
வடிவங்கள் திறம்படக் காட்டுவது போல
அவை பல்வேறு தொகுப்புகளாக
சேர்க்கை விதியை மாற்றியமைக்க
அதன் வரம்புகளற்ற நிகழ்தகவின்
சாத்தியங்களில் ஸ்தம்பிக்கிறேன்!
அலசி ஆராய்ந்து ஓய்ந்து பின்னர்
அறை முழுவதுமாய் இறைந்து கிடக்கும்
துளிகளைத் திரட்டி அள்ள இயலாது
கையாலாகாத நிலையில் அமர்ந்திருக்கிறேன்!
போவது புதைகுழிக்கெனத் தெரிந்தும்
விரல்களை விட்டு நழுவும் ஒவ்வொரு
இறந்த விநாடியையும் முத்தமிட்டே
என்னுடன் சேர்த்துப் புதைக்கிறேன்!
பாதாளத்தின் இருட்டில் தடுமாறுகையில்
என்னைச் சுற்றி அவை ஒருவேளை
மின்மினிகளாக வட்டமிடலாம் !
யாருமற்ற தனிமையில் துணையாகலாம்!
பார்வையிழந்த என் கையில் விளக்காகலாம்!
யார் கண்டது? புதைத்தலின் அவசியத்தை...

– ரத்னா வெங்கட்

•

பழைய பாலம்

•

பாலத்தின் கடைசி
மரத்தை விட்டுச் செல்கிறது
பின்பனி இரவு.

– ராஜகுமாரன்

•

பாலத்தின் கீழ்
தூணில் சாய்ந்திருக்கும்
யாசகர் படுக்கை.

– தட்சணா மூர்த்தி

•

பழைய பாலம்
புயலுக்கு உடைந்தது,
மரக் கிளை.

– எம். எல். எம். அன்சார்

•

பாலத்தைக் கடக்கும்
போதெல்லாம் தூக்கி எறியப்படும்
நதியின் மேல் கல்.

– ராஜிலா ரிஜ்வான்

•

அக்கரையை
தொட்டபடி மிதக்கின்றது
பாலத்தின் நிழல்

– ஷர்ஜிலா யாகூப்

•

பழுதான பாலத்தில்
படரும் கொடியின் மேல்
சிறகு விரிக்கும் பட்டாம்பூச்சி

– பாண்டி ராஜ்

•

பழைய பாலம்
மெல்ல கடக்கிறது
உதிர்ந்த பூ.

– கவி. விஜய்



தொடர் – 17

தேநீர் சாலை

● கரிகாலன்

ராப் - தெருக்களின் குரல்!

ராப் பாடல் 70களில் அமெரிக்காவில் பிரபலமடையத் தொடங்கியது. வறுமையும், நிறவெறியும் கருப்பர்களை மிருகத்தனமாகக் கவ்வியபோது அதற்கெதிராக ஹிப் ஹாப் பாடல்கள், தெருக்களின் குரலாக ஒலிக்கத் தொடங்கின.

அக்குரல்களை அமெரிக்காவால் கட்டுப்படுத்த முடியவில்லை. அந்தப் பாடல்களின் அடுத்த வார்த்தைகள் அந்தக் கணங்களில், அந்த நேரத்து உண்மைகளில் இருந்து பிறந்தன.

கேன்யே வெஸ்ட், கிறிஸ்டோபர் பிரவுன், ஜே, மார்க் வால்பெர்க், ட்ரே, எம்.சி.ரென், சக் டி இப்படி ஏராளமான ஹிப் ஹாப் கலைஞர்கள் தோற்றம் கண்டனர்.

சொற்களை அடுத்தடுத்து விரைவாக உதிர்க்கும் இந்த ராப் வகைப் பாடல்களை, நம் பழந்தமிழ்ப் புலவர்களும் எழுதியிருக்கிறார்கள்.

'முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக்குருபர எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் அடிபேணப்'

என்ற அருணகிரிநாதரின் திருப்புகழெல்லாம் ஹிப்ஹாப் வாசனையுடைய பாடல்களே.

இதே ராப் சந்தத்தைக் கலிங்கத்துப்பரணியிலும் கேட்க முடியும்.

ராப் இசை, உலகம் முழுவதும் கோபம் கொண்ட இளைஞர்களை வசீகரிக்கும் பாடல் வடிவமாக மாறியது.

இப்படி ராப்பும் காதலும் கொந்தளிக்கிற ஒரு இந்தி படத்தைச் சமீபத்தில் பார்க்க முடிந்தது. அந்தப்படம் கல்லி பாய் (Gully boy) .

ரன்வீர்சிங், அலியா பட் நடிப்பில் சோயா அக்தர் இயக்கிய படம். இந்தப் படம் இந்தியாவின் சார்பில் ஆஸ்கர் விருதுக்கு அனுப்பப்பட்டது.

முராத் அகமது தாராவி சேரியில் வசிப்பவன். கல்லூரி இறுதியாண்டு மாணவன். அவனது தந்தை அப்தாப் ஷாகிர் இளம்வயது பெண்ணை முராத்துக்குச் சித்தியாக அழைத்து வருகிறான். முராத்தின் நண்பர்கள் கார் மெக்கானிசம், கார் திருட்டு எனப் பிழைப்பு நடத்துபவர்கள். முராத் மீது டாக்டருக்குப் படிக்கும் ஸஃபீனாவுக்கு முரட்டுத்தனமான காதல். முராத்தை நெருங்குபவர்களைப் பிளந்து கட்டுகிறாள்.

முராத் கல்லூரிக்குப் பாட வருகிறான் எம்.சி. ஷேர் எனும் ஹிப் ஹாப் கலைஞன். அவனால் வசீகரிக்கப்படும் முராத் ராப் மீது காதல் கொள்கிறான். ஷேர் அவனை ஊக்குவிக்கிறான்.

பெர்க்லீ மாணவியான ஸ்வேதா மேத்தா ஷேர் மற்றும் முராத்தை வைத்து ஒரு ராப் ஆல்பம் தயாரிக்கிறாள். இந்த ஆல்பம் பிரபலமாகிறது. ஒரு கணத்தில் தன்னிலை மறந்து ஸ்வேதாவும் முராத்தும் இணைகிறார்கள். இதனால் ஸஃபீனா பிரிகிறாள். ஆனாலும் இருவராலும் ஒருவரை ஒருவர் மறக்க முடியவில்லை.

ஸஃபீனா இல்லாமல் உன்னால் வாழ முடியாதா? ஸ்வேதா கேட்கிறாள். 'வாழமுடியும். ஆனால் அந்த வாழ்க்கை, ஒருவன் இளம்பருவமே இல்லாமல் வாழ்வதைப்போல் இருக்கும்!' என்கிறான் முராத்.

இதே வேளை, மிகப் பெரிய ராப் போட்டி நடைபெறுகிறது. அதில் கலந்துகொள்ள விரும்புகிறான் முராத்.

முராத்தின் அப்பா, 'நாம் அடிமை வேலை செய்யப் பிறந்தவர்கள். யதார்த்தத்துக்கு முரணான கனவுகளைக் காணாதே. வாழ்வு பாழாகிவிடும்!' என்கிறார். 'அடிமைகளின் கனவுகளும் வெல்லும். ஒருநாள் அவை யதார்த்தம் ஆகும்!' எனப் போட்டியில் கலந்துகொள்கிறான் முராத்.

ராப் போட்டி சொற்களால் நடக்கும் ஒருவித மல்யுத்தம். ஒருவரை ஒருவர் கடினமான சொற்களால் தாக்கிக்கொள்வதே ராப் போட்டி.

‘தன் தெருவின் ஏழ்மையை, அதற்குக் காரணமான அரசியலைப் பாடி, அதைப் புரட்டிப்போடும் வலிமை தன் தெருவுக்கு உண்டு!’ என்பதாகப் பாடுகிறான் முராத்.

அது முராத்தின் குரல் இல்லை. இந்திய சேரிகளின் குரல். ஒடுக்கப்பட்ட மக்களின் அவமானங்களில் இருந்து, சாதியும் மதமும் உரசிய காயங்களில் இருந்து எழும் குரல் அது.

தாராவி பகுதிகளில் வசிக்கும் பெரும்பாலோர் தமிழர். அங்கு ராப் பாடுபவர்களில் பெரும்பாலானோர் தலித்துக்கள். ஆனால், இது இந்திப்படம் என்பதால் தமிழ் அடையாளங்களைக் காண முடியவில்லை.

கல்லி பாய் என்றால் தெருப் பையன். கல்லி பாய் போட்டியில் வெல்கிறான்.

தங்கள் தெருப் பையன் ஜெயித்ததைத் தாராவி கொண்டாடுகிறது. சாதாரண ஓர் இளைஞனின் பாடல் உலகத்தின் காதில் விழத் தொடங்குகிறது.

இது பனி பொழியும் மார்கழி காலம். மியூசிக் அகடமிகளையும், ஃபைன் ஆர்ட்ஸையும் தெருப்பையன்கள் வெல்லும் காலம்!

•

யமுனை வீதியில் ஓர் ஆண்டாள்!

நடைப்பயிற்சியில் இருந்தேன். யமுனை வீதியில் ஓர் இளம்பெண் கோலமிட்டுக் கொண்டிருந்தாள். அவள் இளம் உதடுகள் பாடலொன்றைச் சன்னமாக முணுமுணுத்தன. நடையைச் சற்று மெதுவாக்கிக் கவனித்தேன்.

‘மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால் நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்’ - மார்கழித் திங்கள் மதிநிறை நன்னாள் என்கிறாள் ஆண்டாள். இந்தியா வெப்ப மண்டல நாடு. இங்கு நிலவு நாளென்பது கொண்டாட்டம். ‘நீராடப் போதுவீர்’ இது குறிப்பால் உணர்த்துகிற சொல்.

சங்க இலக்கியங்களில் நிறைய இடங்களில் ‘புனையாடல்/ சுனையாடல்’ என்கிற சொற்கள் வருகின்றன. இவை ஆண், பெண் கலவியைக் குறிக்கும் வார்த்தைகள். எட்டுத்தொகை ‘புனலாட்டுப் பத்து’ பாடுகிறது. புனலாடல் தமிழர்களின் திருவிழா வடிவமாக இருந்ததைப் பட்டினப்பாலை பகர்கிறது. இங்கு ‘நீராடப்போவது’ என்பது பெண் சமூகத்தின் குழூஉக்குறி.

நீர் மனிதர்களின் தாகம் தீர்க்கும் திரவம். கண்ணன் தாகம் தீர்க்கும் நீராலானவன். கண்ணன் என்கிற குளத்தில் மூழ்கித் தன்னைக் கரைக்க விரும்புகிறவளே ஆண்டாள்.

குளித்தல் என்பது குளிர்தலில் இருந்து பிறந்த சொல். ஆணோ பெண்ணோ காமச் சுனையில் மூழ்கி எழும்போது அவர்தம் உடல்சூடு தணிகிறது. கர்ப்பகாலத்தில் பெண்ணை, எங்களூரில் ‘குளிக்காமல் இருக்கிறாள்!’ என்பார்கள். திருப்பாவையிலும் அகப்பாடல்களிலும் குளித்தல், நீராடல், புனலாடல், சுனையாடல் என்பவை *metaphor* ஆக மாற்றப்படுகிறது. நம் யமுனை வீதி ஆண்டாள் ஈரக் கூந்தலைத் தேங்காய்ப்பூத் துண்டால் முடிந்திருந்தாள். நீர்ப்பூக்கள் உதிர்ந்து அவள் கோலம் நனைகிறது.

ம்ம்.. வேறென்ன. ஆண்டாள் நீராடியிருக்கிறாள். காதலில் குளிரட்டும் நம் மார்கழி!

•

கேசாதி பாதம்!

வழக்கம்போல நேற்றிரவு ஒரு பாடலைக் கேட்டு உறங்கச் சென்றேன். காதலுக்குக் கண் இல்லை என்பார்கள். ராஜபார்வை படத்தில் கமலுக்குக் கண்ணில்லை. கமல், மாதவியின் அழகை வர்ணிப்பதாக அமைந்த பாடலைத்தான் நேற்றிரவு கேட்டேன். பார்வையற்றவர்கள் யானையைத் தடவி, அது உலக்கையைப் போல் இருக்கிறது, முறத்தைப்போல் இருக்கிறது... எனப் புரிந்தார்கள். ஆனால் பார்வையற்ற காதலன் காதலியைக் காண்பது அப்படியல்ல. அவன் ஆன்மாவால் பார்க்கிறான்.

கண்ணில்லாதவனால் முகர முடியும்தானே! இங்கு கமல் மாதவியை முகர்ந்து, முகத்தைத் தாமரை என்கிறார். பல்லை முல்லை என்கிறார். இடையைப் பூ உலவும் கொடி என்கிறார். அழகே அழகு எனத் தொடங்குகிறது பாடல். இந்தப் பாடலை எழுதியவர் கவியரசர் கண்ணதாசன்.

சங்க காலத்தில் பெண்களைக் கேசாதி பாதம் வரை வர்ணித்தார்கள். இப்படிப் பாடுவது சிற்றிலக்கியத்தில் ஒரு மரபு வகையாகப் பின்னர் மாறியது. சங்ககாலத்தில் விறலிகளைப் புகழ்ந்து பாடும் பாணர்களின் குரலை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை நூல்களில் கேட்கலாம்.

இன்றைய திரைப்பட நடிகைகள் போலவே விறலிகள் தங்கள் உடல் வனப்பைப் பேணிக் காத்திருக்க வேண்டும். அவர்களுக்குப் பொற்பூவைப் பரிசிலாகத் தந்தனர். இப்படி விறலிகள் அழகைப் பாடும், பாணர்கள் அவர்களைத் தலையில் இருந்து கால்நோக்கி வர்ணித்துப் பாடினார்கள். இதுதான் கேசாதி பாதம்.

‘அறல் போல் கூந்தல்,
பிறை போல் திரு நுதல்,
கொலை வில் புருவத்து,
கொழுங் கடை மழைக் கண்,
இலவு இதழ் புரையும்
இன் மொழித் துவர் வாய்,

பல உறு முத்தின்
பழி தீர் வெண் பல்,
மயிர் குறை கருவி
மாண் கடை அன்ன
பூங் குழை ஊசற்
பொறை சால் காதின்,
நாண் அடச் சாய்ந்த
நலம் கிளர் எருத்தின்,
ஆடு அமைப் பணைத் தோள்,
அரி மயிர் முன்கை,
நெடு வரை மிசைய
காந்தள் மெல் விரல்,
கிளி வாய் ஒப்பின்
ஒளி விடு வள் உகிர்,
அணங்கு என உருத்த
சுணங்கு அணி ஆகத்து,
ஈர்க்கு இடை போகா
ஏர் இள வன முலை,
நீர்ப் பெயர்ச் சுழியின்
நிறைந்த கொப்பூழ்,
உண்டு என உணரா
உயவும் நடுவின்,
வண்டு இருப்பு அன்ன
பல் காழ் அல்குல்,
இரும் பிடித் தடக் கையின்
செறிந்து திரள் குறங்கின்,
பொருந்து மயிர் ஒழுகிய
திருந்து தாட்கு ஒப்ப
வருந்து நாய் நாவின்,
பெருந் தகு சீறடி,
அரக்கு உருக்கு அன்ன
செந் நிலன் ஒதுங்கலின்,
பரல் பகை உழந்த
நோயொடு சிவணி,
மரல் பழுத்தன்ன
மறுகு நீர் மொக்குள்
நன் பகல் அந்தி
நடை இடை விலங்கலின்,
பெடை மயில் உருவின்,
பெருந் தகு பாடினி'

- (பொருநராற்றுப்படை, 25-47)

இது கேசாதிபாதம் முறையில் விறலியின் அழகைப் பாணன் புகழும் பாடல். கேசாதி பாதம் முறைமையில்தான் 'அழகே அழகு' பாடலைக் கவியரசர் எழுதியிருப்பார். இப்போது கண்ணதாசனின் பாடலைக் கேட்போம்.

'அழகே அழகு தேவதை
ஆயிரம் பாவலர் எழுதும் காவியம்
கூந்தல் வண்ணம் மேகம் போல
குளிர்ந்து நின்றது
கொஞ்சுகின்ற செவிகள் ரெண்டும்
கேள்வியானது
பொன்முகம் தாமரை
பூக்களே கண்களோ
மனக்கண்கள் சொல்லும் பொன்னோவியம்
சிப்பி போல இதழ்கள் ரெண்டும்
மின்னுகின்றன
சேர்ந்த பல்லின் வரிசை யாவும்
முல்லை போன்றன
மூங்கிலே தோள்களோ
தேன்குழல் விரல்களோ
ஒரு அங்கம் கைகள் அறியாதது
பூ உலாவும் கொடியைப் போல
இடையைக் காண்கிறேன்
போகப் போக வாழை போல
அழகைக் காண்கிறேன்
மாவிலை பாதமோ
மங்கை நீ வேதமோ
இந்த மண்ணில் இது போல் பெண்ணில்லையே!'

சினிமா ஒரு வணிகம்தான். ஆனாலும் அதில் இலக்கியம் குழைத்தளித்து தமிழரைச் சங்கம் பயில வைத்தவர் கண்ணதாசன்.

இப்படி கேசாதி பாதம் பாடிய காலம் மாறியது. தமிழில் பக்தி இலக்கியம் உருவானது. பெண்ணைப் பாடுவது சிற்றின்பமாகக் கருதப்பட்டது. ஆண் கடவுளைப் பாடுவது பேரின்பமானது. ஆண் கடவுளின் அழகைப் பாடும் போக்கு வளர்ந்தது. கேசாதி பாதத்தை மாற்றி, பாதாதி கேசமாகப் பாடினார்கள்.

இதில், 'ஈர்க்கு இடை போகா ஏர் இள வன முலை, நீர்ப் பெயர்ச் சுழியின் நிறைந்த கொப்பூழ்' எனப் பாடிய கவிமனம் அழிந்தது.

வெளியில் தெரியும் உறுப்புகளை மட்டுமே பாடும் குற்ற மனம் உருவாகியது. கவிமனதுக்கும் மதம் உருவாக்கிய பக்தி மனசுக்குமான இடைவெளியை நாம் உணர வேண்டும். பாவத்தைப் போக்க பாதத்தைச் சரணடை எனப் பாதாதி கேசம் முறையைத் தமிழர்க்குப் பிழைபட கற்பித்தது பக்தி இலக்கியக் காலம். ஆண்டவனின் கால் பிடிக்கத் தொடங்கியவர்கள், ஆள்பவரின் பாதம் பணியத் தொடங்கினார்கள். இப்படி பக்தி இலக்கிய பாதாதி கேசம், சமகாலத்தின் அரசியல் நிகழ்வாக மாறியதைப் பார்த்தோம்.

ஆனால் படுக்கையறைப் பாடலில், ஆணோ பெண்ணோ, பாதத்தில் தொடங்கினாலென்ன? கேசத்தில் தொடங்கினாலென்ன? கரும்பை எந்த முனையிலிருந்தும் கடிக்கத் தொடங்கலாம். எப்போதும்போல், தமிழர் மனதில், அன்பும் காதலும் பொங்கட்டும்! ■

● கு. ஜெயசுதா

இன்னும் பல வெண்ணிலாக்கள்

அன்று, தில்லி செல்வதுபற்றி பெரிதாக மகிழ்ச்சியில்லை என்பதால் தனியாகவே பயணத்தைத் தொடர்ந்தார், அன்பரசன். மெல்ல வேகமெடுத்த ராஜதானி எக்ஸ்பிரஸின் லோ பெர்த் சீட்டில் அமர்ந்தவர், சாளரத்தின்வழியே சென்னையின் குடிசைவாழ் சிறுவர்கள் தண்டவாளத்தின் அருகே வெட்டவெளியில் மலம் கழித்துவிட்டு பிட்டம் தெரிய நடந்துசெல்வதைப் பார்த்து 'இவர்கள் பள்ளியில் சேர்ந்து படிக்கிறார்களா? இல்லையா?' என்று தனக்குத்தானே கேட்டுக்கொண்டார். ஒரு ஆசிரியராக வேறு என்ன தோன்றப் போகிறது அவருக்கு?

இன்று செப்டம்பர் 2, இன்னும் மூன்று நாட்களில் தில்லியில் ஜனாதிபதி கையால் தேசிய நல்லாசிரியர் விருது பெறப் போகிறார், தமிழாசிரியர் அன்பரசன். இருந்தும் அவர் தன்னைத் தோல்வியுற்றவராகவே கருதினார். முப்பது வருட ஆசிரியப் பணியில் ரவிச்சந்திரனின் படிப்பைத் தொடரவைக்க முடியவில்லை என்ற ஆதங்கம் அவரை நோயாய்ப் பீடித்திருந்தது. ரவிச்சந்திரன் இப்போது என்ன பெயரோடு இருக்கிறான்? எங்கு இருக்கிறான்? எந்த விடையும் அவரிடம் இல்லை.

ரவி, திறமையான மாணவன். எப்போதும் அவனே வகுப்பில் முதல் இடம் பிடிப்பான். எட்டாம் வகுப்பு படிக்கும்போது அவனிடம் சில மாற்றங்கள். கை முழுக்க மருதாணி போட்டிருந்ததை யாரும் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் அவன் தங்கையின் கொலுசுகளை அணிந்து வந்தபோது அவன் நண்பர்களுக்குக் கேலிப் பொருளானான். ஒன்பதாம் வகுப்பில் அவன், ஆண் வரிசையிலும் இல்லை, பெண் வரிசையிலும் இல்லை, தனித்து உட்கார்ந்தான். 'ரவி! ரவி!' என்று அழைத்த நண்பர்கள் அவனை 'ஆறேகால் ரெண்டே முக்கால்' என்றனர். பல நாட்கள் அவன் பள்ளிக்கு வருவதே இல்லை. ஒருநாள், அவன் தாய் தலைவிரிகோலமாகத் தலையில் அடித்துக்கொண்டு தலைமை ஆசிரியர் முன் அழுதாள். அதன்பிறகு அவன் வருகைபற்றி யாரும் கண்டுகொள்ளவில்லை.

அன்பரசன் ஆசிரியரின் எந்தத் தனிப்பட்ட உரையாடலும் அவனைப் பள்ளியில் நிலைக்கச்

செய்யவில்லை. பத்தாம் வகுப்பில் ஜூன் மாதத்தில், ஒரு நாள் முழுக்க அவனிடம் பேசிப் பார்த்தார். அவனும் பொறுமையாகக் கேட்டான். இடையிடையே அழுதான். சொல்வதை எல்லாம் கேட்டுத் தலையாட்டினான். பின்பு வெளிப்படையாகப் பேசினான், "சார்! நீங்க சொல்றது எல்லாம் எனக்குப் புரியுது. என் உடம்பும் மனசும் மாறிடுச்சி! நான் எந்த டாய்லெட்ல யூரின் போவேன் சொல்லுங்க? வீட்ல, ஸ்கூல்ல எல்லா எடத்துலயும் எனக்கு அவமானம். சிலநேரத்துல தற்கொலை எண்ணம்லாம் வருது சார்!" என்றவன், திரும்பிப் பார்க்காமல் போய்விட்டான். அன்பரசன், அவன் வார்த்தைகளில் கலங்கிப் போனார். அதன்பிறகு அவர் அவனைப் பார்க்கவே இல்லை. அவன் மும்பை சென்றதாகக் கேள்விப்பட்டு தகவலறிய அவன் வீட்டிற்குச் சென்றபோது, அவன் அப்பா சொன்ன வார்த்தைகள் இப்பொழுதும் ஞாபகம் இருக்கிறது அவருக்கு, "அவன் செத்துட்டான்னு நெனச்சிக்கிறோம் சார்! அவன் இல்லாம எனக்கு ரெண்டு பிள்ளைங்க இருக்கு. நான் அவங்க வாழ்க்கையப் பாக்கணும். இவ்வளவுதூரம் எம்பிள்ளைக்காக வந்ததுக்கு தாங்க்ஸ், போய்ட்டு வாங்க சார்," என்று கையெடுத்துக் கும்பிட்டு அனுப்பிவைத்தார்.

ரயில்வே கேட்ரிங்கின் காலை உணவை முடித்தபின் அவன் கைப்பட எழுதிய அந்தக் காகிதத்தைத் தன் பர்சிலிருந்து எடுத்துப் பார்த்தார். ஏழாம் வகுப்புக் கட்டுரை நோட்டில் 'எனது லட்சியம்' என்ற தலைப்பில் அவன் எழுதியது. 'பத்தாம் வகுப்பில் மாநில அளவில் முதல் மாணவனாக வருவேன்' என எழுதி, கீழே இப்படிக்கு ரவிச்சந்திரன் என்று கையெழுத்துப் போட்டிருந்தான். தொடரி இரவு நாக்பூரைக் கடந்து சென்றுகொண்டிருந்த வேளையில் அவர் உறங்கிப் போயிருந்தார்.

மறுநாள் காலை ஆக்ரா ரெயில்வே ஸ்டேஷனில் தொடரி நின்றது. ஐ.ஆர்.சி.டி.சி-யின் சாயாவைப் பருகிவிட்டு சன்னல்வழியே ஒரு ஹிண்டு பேப்பரை வாங்கிப் படிக்க ஆரம்பித்தார். அப்போது நான்கைந்து திருநங்கைகள் சற்றுத் தள்ளி பயணிகளிடம் ஹிந்தியில் பணம் கேட்டுக்கொண்டிருந்தனர்.

ஒரு திருநங்கை, ஒருவனின் பாக்கெட்டில் கைவிட்டு ஐம்பது ரூபாயை எடுத்துக்கொண்டு நடந்தாள். அவன் ஹிந்தியில் ஏதோ சத்தமாகச் சொல்ல திருநங்கைகள் சிரித்துக்கொண்டே நகர்ந்துகொண்டிருந்த வண்டியில் இருந்து இறங்க கதவருகே வந்தனர். அப்போது "வெண்ணிலா சீக்கிரம் வா! ஜல்தி! ஜல்தி!" என்ற கட்டைக்குரலுக்கு "தோ வந்துட்டேன்..." என்ற பதில் குரல் கேட்டு நிமிர்ந்தார்.

ரவி, லெக்கிங்ஸ் மற்றும் டாப்ஸ் அணிந்து ஒருவரின் தலையில் கைவைத்து ஆசிர்வாதம் செய்துவிட்டு, பத்து ரூபாய் நோட்டோடு அன்பரசன் ஆசிரியரைக் கடந்துபோனான்.

ரவியைத் தொடர்ந்து "ரவி! நில்லு." என்று அழைத்தவாறு தன் பெட்டியைத் தூக்கிக்கொண்டு ஆக்ரா பிளாட்பாரத்தில் குதித்தார், அன்பரசன். அவரின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. வெண்ணிலாவாக இருந்த ரவி, அவர் கையைப் பிடித்துக்கொண்டு தன் அக்காக்களுக்கு அவரை அறிமுகம் செய்தாள். அத்திருநங்கைகள், எவ்வளவோ நிராகரித்தும் அவர்களோடு அவர்கள் தங்கியிருக்கும் இடத்திற்குச் சென்றுவிட்டார். "எங்க எடத்துக்கு வந்த முதல் ஆண் நீங்கதான்" என்றார், அக்குழுவில் இருந்த பிரேமினி.

ஐந்துபேர் கொண்ட அக்குழுவில் இவர்கள் இருவர் மட்டும் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். வெண்ணிலாவின் லட்சியக் கட்டுரையை முப்பது வயது பிரேமினியிடம் காட்டினார். இப்பொழுது அவரிடம் ஒரு முரட்டுப்பிடிவாதம் இருந்தது. எப்படியாவது வெண்ணிலாவை அழைத்துச்செல்ல வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். வெண்ணிலாவிற்கு விருப்பம் இல்லை.

அவர் கையைத் தன் கன்னத்தில் வைத்துக்கொண்டு சொன்னாள்: "என் அப்பா, அம்மா எல்லாம் விட்டுட்டாங்க. நீங்க மட்டும் ஏன் சார்? விட்ருங்க. இது கடவுள் எனக்கு எழுதின விதி. தோ, பிரேமினி அக்கா, சல்மா, ஆஷா, பூஜா இவங்களோட நான் சந்தோஷமா இருக்கேன்" என்றாள். அன்பரசன் பிரேமினியிடம் தன் விருப்பத்தைக் கொட்டித் தீர்த்தார். "எனக்கு விருதும் வேணாம், ஒன்னும் வேணாம். வெண்ணிலா பத்தாம் வகுப்பு பரீட்சை எழுதினா போதும். நாமினல் ரோல்ல பேர் இருக்கு. வெண்ணிலா சம்மதிச்சா தேர்வு எழுதலாம்" எனக் கெஞ்சினார். பிரேமினி, தனியே வெண்ணிலாவிடம் பேசிப் பார்த்தாள்.

மதியம் சல்மா செய்துகொடுத்த ரொட்டியைச் சாப்பிட்ட பின் பிரேமினி அவரை ஏதாவது வண்டி பிடித்துத் தில்லி செல்லச்

சொன்னாள். இவர் பிடிவாதமாக மறுத்தார். வெண்ணிலா இல்லாமல் ஆக்ராவை விட்டு நகரமாட்டேன் என்றார். “நீங்க போய் விருது வாங்கிட்டுத் திரும்பி வரும்போது உங்களோடு வெண்ணிலா வருவா, கூடவே நானும் வருவேன்” என்று புன்னகைத்தாள் பிரேமினி. அதனை ஆமோதிப்பதுபோல் வெண்ணிலா தலையசைத்தாள்.

இன்று. தில்லியில் இருந்து புறப்பட்ட தமிழ்நாடு எஸ்.எப். எக்ஸ்பிரஸ் அதிகாலையில் சென்னை சென்ட்ரலை நெருங்கிக் கொண்டிருந்தது. ஏ.சி. கம்பார்ட்மெண்டில் ஏ.என். பாஷமின் ‘த வொண்டர் தட் வாஸ் இந்தியா’ என்ற புத்தகத்தை நெஞ்சோடு அணைத்துக்கொண்டு வெண்ணிலா உறங்கிக்கொண்டிருந்தாள்.

தூக்கம் கலைந்து கதவருகே குளிர்காற்றில் நின்றுகொண்டு, வெண்ணிலா திருத்தி எழுதிக் கொடுத்திருந்த கட்டுரைத் தாளைப் பார்த்துக்கொண்டிருந்தார், அன்பரசன். அவரது சிந்தனை சில வருடங்களுக்குமுன் நடந்தவைகளை அசை போட்டது. விருதுபெற்ற கையோடு வெண்ணிலாவை அழைத்து வந்து பிரேமினியின் பாதுகாப்பில் ஒரு வாடகை வீட்டில் தங்க வைத்திருந்தார். அந்த வீட்டிற்கே வந்து அவரும் மற்ற ஆசிரியர்களும் அவளுக்குக் கற்பித்தனர்.

பொதுத்தேர்வு தொடங்குவதற்கு முந்தையநாள் மாலை, வெண்ணிலாவிற்குச் சில எழுதுபொருட்கள் வாங்கச் சென்ற பிரேமினி, பின்னிரவாகியும் வீட்டிற்கு வரவில்லை. சாலை விபத்தில் அவளது ஒரு கால் முறிந்து மருத்துவமனையில் இருப்பதாய் அன்பரசன் சொல்ல, அத்துயரத்தைச் சுமந்துகொண்டே பரிட்சை எழுதினாள், வெண்ணிலா.

பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் தன் பள்ளியளவில் மூன்றாம் இடம் பிடித்தாள். ஒரு கால் ஊனமாகி செயற்கைக் காலோடு நடந்துவந்த பிரேமினி, வெண்ணிலாவின் மனதிற்குள் பல கேள்விகளை உருவாக்கினாள். பகலில் பிச்சை எடுப்பதும் இரவில் சாலை ஓரம் நிற்பதுமே திருநங்கைகளுக்கான அடையாளமா? விபத்து, ஊனம், முதுமை, பாதுகாப்பின்மை, கீழ்நிலை வாழ்வு என்று திருநங்கைகள் நிலைபற்றி இடையறாது சிந்தித்தாள். தன்னை வெளிக்கொணர தானே முடிவெடுத்தாள்.

‘இந்த தேசத்தில் அடித்தட்டில் இருப்பவர்களின் கண்ணீரை எப்பாடுபட்டாவது துடைத்தே தீருவேன்’ என்று அந்தக் கட்டுரைத்தாளில் திருத்தி எழுதி, இப்படிக்கு ரவிச்சந்திரன் என்பதை அடித்துவிட்டு வெண்ணிலா என்று எழுதி, அன்பரசன் ஆசிரியரிடம் கொடுத்தாள். இப்போது காகிதத்தை மடித்து பாக்கெட்டில் வைத்துக்கொண்டு பழைய நினைவுகளிலிருந்து மீண்டார், ஆசிரியர்.

இந்த ஏழு வருடத்தில் அவள் சொன்னதைச் சாதித்துக் காட்டிவிட்டாள் என்று பெருமிதப்பட்டுக் கொண்டிருந்தவரின் தோளை பிரேமினி தொட்டாள்.

“சாதிச்சிட்டீங்க சார்” என்றாள்.

“நானெங்க சாதிச்சேன். வெண்ணிலா சாதிச்சுட்டா” என்று பதிலளித்தார்.

தொடரி, சென்னை சென்ட்ரலின் பிளாட்பாரத்தை அடைந்தபோது தில்லியில் தங்கிப் படித்து ஐ.ஏ.எஸ். தேர்வெழுதி இந்திய அளவில் முதலாவதாக வந்து சாதித்த வெண்ணிலாவை வரவேற்க பிளாட்பாரம் முழுக்க மக்கள் கூட்டம் நிரம்பிவழிந்தது.

வெண்ணிலாவின் கால், பிளாட்பாரத்தை அடையும்முன் எண்ணற்ற திருநங்கைகள் அவளை உயரத் தூக்கிக் கொண்டனர். அவளின் பெற்றோர், உடன்பிறந்தோர், ஆசிரியர்கள், அதிகாரிகள், மாணவர்கள், சமூக சேவகர்கள், ஒருசில அரசியல் பிரமுகர்கள், ஊடகங்கள் ஒன்று சேர்ந்து உற்சாக வரவேற்பளித்தனர்.

கூட்ட நெரிசலுக்கு நடுவில் அன்பரசன் ஆசிரியரைத் தாங்கிப் பிடித்துக்கொண்டு நடந்த பிரேமினி, ஏக்கம் தொனித்த குரலில் கேட்டாள்: “நமக்கு ஒரு வெண்ணிலா போதுங்களா சார்?”

அங்கே பல ஆதரவற்ற திருநங்கைகள் உற்சாகம் நிறைந்த முகங்களோடு வெண்ணிலாவைத் தொட்டுத்தூக்கி, கைகுலுக்கி, விசில் அடித்து, நடனமாடி, கட்டியணைத்து, முத்தமிட்டு ஆனந்தக்கண்ணீர் விட்டபடி அவள் வெற்றியைத் தன் வெற்றியாய்க் கொண்டாடிக் கொண்டிருந்த காட்சியைப் பார்த்த அன்பரசன், பிரேமினியின் காதில் உரக்கச் சொன்னார்:

“நமக்கு ஒரு வெண்ணிலா போதாது பிரேமினி! இன்னும் பல வெண்ணிலாக்கள் வேண்டும்.” ■

‘ஊர்மிளை’ அடுத்த இதழில் வெளிவரும்

● கவி : வெள்ளூர் ராஜா
● சித்திரம் : அழ.ரஜினிகாந்தன்

எங்கள் இளம்பிராயத்தில்
எந்தத் தவறுகளையும்
எச்சில் தொட்டு
எளிதில் அழித்துக்கொள்வோம்

விழுந்து காயமுறும்
சிராய்ப்புகளை
எச்சில் வைத்து
ஆற்றிக்கொள்வோம்

ஆசையாய் அனுப்பும்
வாழ்த்து அட்டைகளுக்கும்
ஊதா நிறக் கடுதாசிகளுக்கும்
நுனிநாக்கில் தொட்டு அஞ்சல்தலைகளை
எச்சில் வைத்து
ஒட்டிக்கொள்வோம்

காக்காய்க்கடி
எச்சில் பண்டம்
பகிர்ந்தே
நட்புகளுக்குப் பழம் விடுவோம்

வானமா
பூமியா
டாஸ் போட்டுப் பார்க்க
பானையோட்டுச் சில்லின்
ஒருபுறம்
எச்சிலால் தொட்டு
வான்நோக்கி
எறிவோம்

எச்சிலுக்கு ஆறும்
காயங்களும்
எச்சிலுக்கு அழியும்
தவறுகளும்
இருந்த காலத்தைத்தான்
இப்படி
நாவறள
எழுதிக் கொண்டிருக்கிறோம்

படைப்பு பெருமையுடன் வழங்கும்

குறி நெடில்

விரைவில் படப்பிடிப்பு